Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
பெப்ரவரி 20 - 26, 2014


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1054

## சர்வதேச சதி! சிக்குமா அரசு?






## இயற்கையை இயக்கிய மறக்க முடியாத இயக்குநர்!

## மதத்தின் பெயரால்...



## இந்திய தேர்தல் நடக்கப் போவது என்ன?



## ஐம்பொன் சிலை வழிபாடு

வீட்டு பூஜை அறையில் சின்னதாக அம்மன் அல்லது முருகன் ஐம்பொன் சிலை வைத்து தினமும் அதற்கு பால் ஊற்றி கழுவிவிட்டு சந்தனம் - குங்குமப் பொட்டு வைத்து, ஊதுபத்தி பற்றவைத்து, நெய் தீபம் ஏற்றிவைக்கவும். கந்தசஷ்டி கவசம், அம்மன் 108 போற்றி, காயத்ரி மந்திரங்கள் உச்சரிக்கவும்.

ஏதேனும் மலர்கள் ஒவ்வொரு மந்திரம் சொல்லும்போது அப்பூவை எடுத்து சிலைமீது போட்டு வணங்குங்கள். உங்கள் வீடு அருள் கட்சாட்சத்துடன் விளங்கும். இதன்பின்னால் நிறைய சூட்சுமம் இருக்கு. ஐம்பொன் சிலையில் ஐந்துவிதமான உலோகங்கள் இருக்கு தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம்.

இவை அதிக காந்த ஆற்றல் ஈர்ப்புசக்தி உடையது. நீங்க பால் அபிசேகம் செய்யும்போது அதன் நற்குணங்களை ஈர்த்துக்கொள்கிறது. இது சுக்ர அம்சம். செம்பு செவ்வாய் அம்சம். இரும்பு சனி அம்சம். தங்கம் குரு அம்சம் வெள்ளி சுக்கிர அம்சம்.

நீங்க மந்திரம் சொல்லி பூ போடும்போது பூவில் இருக்கும் நற்குணங்களையும் மந்திர சக்தியையும் சிலை ஈர்த்துக்கொள்கிறது. பிறகு அவை சிலைமூலம் வீடு முழுக்க ஒரே சீராக பரவுகிறது. இப்போது உங்க வீடு அதிக மந்திர ஆற்றலை எதிரொலிக்கும் வீடாக மாறுகிறது. காற்று மாசில்லாமல் கிருமிகள் அழிக்கப்பட்டு, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள காற்று நிரம்பிய இடமாக அந்த வீடு மாறுகிறது.

## ஆன்மீகம் — உதடும் உள்ளமும்

"இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் இருக்கிறது" என்று எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் முன் அறிவித்ததை இயேசு யூதர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துவதை இன்றைய வாசகம் நமக்கு எடுத்துரைக்கிறது. தம் காலத்தில் வாழ்ந்த யூதர்களிடம் இருந்த வழிபாட்டு, ஆன்மீக முரண்பாடுகளை இயேசு இதன்மூலம் சுட்டிக்காட்டுகிறார்.

ஆன்மீகத்தைப் பல வழிகளில் வரையறை செய்யலாம். முரண்பாடற்ற வாழ்வு என்பது அவற்றுள் ஒன்று. யாரெல்லாம் தங்கள் வாழ்விலும், பேச்சிலும் முரண்பாடற்று வாழ்கிறார்களோ, அவர்களெல்லாம் சிறந்தவகையில் தங்கள் ஆன்மீகத்தை வாழ்கின்றனர் என்று சொல்லலாம். செபம், வழிபாடு, இறைவார்த்தை இவற்றில் அதிக ஆர்வம் காட்டிவிட்டு, அதேவேளையில் வாழ்வில் நேர்மையற்ற தன்மை, பணிகளில் குறைபாடு, உறவுகளில் போலித்தனம் கொண்டவர்களால் வாழ்ந்தால், எசாயா குறிப்பிடும் கூட்டத்தில் நாமும் சேர்ந்துவிடுவோம். எனவே, விழிப்பாய் இருப்போம். நம் உதடுகளும், நம் உள்ளமும் இணைந்தே இறைபுகழ் பாடட்டும். நம் வாழ்வும், வழிபாடும் முரணின்றி அமையட்டும்.

## முஸ்லிம்களில் சிறந்தவர் யார்?

ஓர் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த அழகான காட்சியைப் பார்க்கும் மனிதன் அதன் அடித்தளத்தில் மண்டிக் கிடக்கும் அசுத்தங்களை அறிவதில்லை. அவற்றில் ஒரு கொந்தளிப்பு ஏற்படும்போது அதன் அடித்தளத்தில் மண்டிக்கிடந்த அத்தனை அசுத்தங்களும் மேலெழுந்து மிதந்து செல்கிறது. அப்போதுதான் அழகிய ஆற்றின் உண்மைநிலையை உணர்கிறான் மனிதன்.

இது போன்றுதான் நல்ல மனிதனாக நமது பார்வைக்கு தோன்றுபவன். அவனது உள்ளத்தில் இருக்கின்ற அசிங்கங்களை வாயில் இருந்து வார்த்தைகளாக வெளிப்படுத்தும்போது இவனா இப்படிப் பேசுகிறான் என எண்ணத் தோன்றும்.

இவ்வளவு அசிங்கங்களை உள்ளத்தில் வைத்துக் கொண்டுதானா இவன் வெளித் தோற்றத்திற்கு நல்லவனாக நமக்கு தோன்றினான் என வியந்துபோவோம். இன்னும் கொஞ்சம் இவனை உணர்ச்சியூட்டினாலே போதும். அவனது வார்த்தைகளும் செயற்பாடுகளும் எல்லை மீறிவிடும். இது ஒரு முஸ்லிமுக்கு அழகல்ல.

அபூ மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வின் தூதரே! முஸ்லிம்களில் சிறந்தவர் யார்? என நான் வினவினேன். அதற்கு அவர்கள் யாருடைய கையிலிருந்தும் நாவிலிருந்தும் ஏனைய முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே என்கிறார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1051



### எதிர்காலச் சிற்பிகள்

நாளைய உலகின்
நம்பிக்கை சிற்பிகள் இரண்டு
வாழை இலைக்குடையில்
பள்ளி கற்பு சிற்பிகள்
பாலைப் பருவத்தில்!
இவர்கள் எதிர்காலம்
வறட்சி இல்லாமல்
புரட்சி ஆகட்டும்...
வலி பிறக்காமல்
வழி பிறக்கட்டும்
கூலியாகாமல் வேலியாகட்டும்!
எம் நாட்டு எதிர்காலச் சிற்பிகள்.

மிகிந்தலை A.பாரிஸ்.

பாராட்டுக்குரியது

### இயற்கையின் கொடை

விண்ணிலிருந்து மண்வரை
இயற்கையின் கொடையே
மகிழ்வோம் இருவரும்
இயற்கையின் மகிமையை!

சாயிலா நிஸாம் கண்டி.




## கவிதைப் போட்டி இல 1054



அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02. 03. 2014

கவிதைப் போட்டி இல. 1054 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இளமைப் பருவம்

குடையில்லை என்றாலும்
வாழையிலை உண்டே என்ற
துணிச்சல்
மழையிலேயும் இளம் உள்ளங்களுக்கு
தோன்றும் மகிழ்ச்சி
நடை பாதையிலேயும், பேச்சிலே
மகிழ்ச்சி
இதுதான் கவலையற்ற
இளமைப்பருவம்.

J.ஒகஸ்ரா. கண்டி.

### நற்கல்வி

ஒற்றுமையை வெளிப்படுத்த
ஒன்றாய் செல்வோம்
அருகில் வா
துணைவா நீ
கல்விக்கூடம் சென்று
கற்போம் நற்கல்வி
படித்து பட்டம் பெற்று
பார்போற்ற வாழ்ந்திடுவோம்!

எம்.சி.கலீல், கல்முனை - 05.

### புதிய உத்தி

பள்ளி செல்லும் சிறுவர்களே
கொட்டும் மழையில்
நனையாமல் தப்பிக்க
நாமும் உங்கள்
வழியையே பின்பற்றலாம்
போலிருக்கிறது.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

### இலை

லயத்தில் பிறந்த இவர்கள்
குழந்தைப் பருவத்தில்
இடையில் அணிந்தது
ஆலிலை... இவர்களை
வளர்த்து உருவாக்குவது
தேயிலை.... இன்று
மழை நீர் தலையில்
விழாது தடுப்பது வாழையிலை.
எதிர்காலத்தைப் பற்றிய கவலையோ
இவர்களுக்கில்லை...

அ.சந்தியாகோ, கண்டி.

### மழலைப் பேச்சு

மழையே நீ பெய்வதனால்
சிறு உள்ளங்கள் இதயம் குளிருகின்றதே
சிறு உள்ளங்கள் வாழையிலையினால்
தங்களை பாதுகாத்துக் கொண்டு
நடை பாதையில் செல்கின்றார்களே
சிறு உள்ளங்களின் புன் சிரிப்பும்
மழலைப் பேச்சும் காண்பவர்களின்
உள்ளங்களை பூரிப்படைய
செய்கின்றதே
பேச்சினால் மழையையும் மறந்து
கழிப்புடன் பேசுகின்றார்களே
இறைவா, உன் படைப்பும் இயற்கையின்
செயலும், அழகும், உன் மகிமையை
பிரதிபலிக்கச் செய்கின்றதே!

ஜே.ஜேசுமணி, கண்டி.

## உங்கள் பக்கம்

### வைத்திய சேவை சீராக்கப்பட வேண்டும்

கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகச் செல்லுகின்ற நோயாளர்கள் உரிய முறையில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது அலைகின்ற நிலைமை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

வைத்தியர்கள் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குச் சமுகமளிக்காமையினால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்து சிகிச்சை பெறவேண்டி இருக்கின்றது. உதாரணமாக அண்மையில் கத்தி வெட்டுக் காயத்துக்குள்ளாகி சிகிச்சைக்காகச் சென்ற பெண்ணொருவருக்கு 24 மணிநேரங்களுக்குப் பின்னரே சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றது.

சிலவேளைகளில் சிகிச்சை பெறாமல் வீடு திரும்புகின்ற அவலமும் நடக்கின்றது. இரத்தப் பரிசோதனைக்காக சென்ற கர்ப்பிணித் தாய்மார்கள் உரிய வைத்தியர் இல்லாமல் திரும்பிவருகின்ற அவலம் அடிக்கடி நிகழ்ந்துவருகின்றது.

இதுதொடர்பில், வைத்தியசாலை அதிகாரிகளின் கவனத்திற்குப் பல தரப்புக்களால் கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே, இது விடயத்தில் கிளிநொச்சியின் அபிவிருத்தியிலும் மீள் எழுச்சியிலும் அக்கறையுடன் செயற்படுகின்ற தரப்புக்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் தங்களது கவனத்தைச் செலுத்தி வைத்தியர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நோயாளர்களுக்கு திருப்திகரமான சிகிச்சை கிடைக்க ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

எம்.மருதன், கிளிநொச்சி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### வாழ்த்துக்கள்!!

வணக்கம். நீண்ட நாளைக்குப் பிறகு உன்னோடு... உன் பக்கங்கள் எல்லாம் அருமை. சிறப்பான அம்சங்களுடன் முரசு எம்மை மனசை கொள்ளை கொள்கிறது. உனது கலர் பக்கங்கள் சிறப்பாக உள்ளது. அது முரசுக்கே உரிய தனிப்பண்புதான். உன் பக்கங்களைப் புரட்டும்போது உள்ளம் மகிழ்ச்சி கொள்கிறது.

வேணு கிருஷ்ணாவின் கட்டுரை எல்லோரது பாராட்டையும் பெற்ற கட்டுரையாகும். என்னை மட்டுமல்ல, நண்பர்கள் எல்லோரும் பாராட்டுத் தெரிவிக்கிறார்கள். வாழ்த்துக்கள் வேணு கிருஷ்ணா.

ஆர்.கானகன், நுவரெலியா.

### வாசகர் சாலை

### பிரமாதம்

அடிக்கடி முரசை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்காதபோதிலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தினமுரசை படிப்பதுண்டு. அறிவை விருத்தி செய்யும் சில தகவல்களை வெளியிடுகின்றாய். அந்தவகையில் பாப்பா முரசு தகவல்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. விளையாட்டு கட்டுரைகள், லேடீஸ் ஸ்பெஷல், வெளிநாட்டு கட்டுரை பக்கம், 24ஆம் பக்கம் என்பவை பிரமாதமான பகுதிகள்.

த.தமயந்தி, வவுனியா.

### காத்திருப்பு தொடரும்...

அண்மைய நாட்களாக சுவாரசியம் முரசில் குறைந்து விட்டது. பல்சுவை அம்சங்களை முரசில் எதிர்பார்க்கிறேன். முரசின் முன் பக்கம் அருமையாக உள்ளது. இருந்தாலும், நடிகர்களின் படங்களை முரசு பிரசுரிக்கத் தவறிவிட்டதே. மீண்டும் அதை பிரசுரிக்கமாட்டாயா முரசே! ஆவலுடன் என் காத்திருப்பு தொடரும்...

ம.குகாஜினி, யாழ்ப்பாணம்.

### காரணம் என்ன?

தினமுரசின் வாசகி என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகின்றேன். முரசு பல இன்னோரன்ன சுவாரசியமானவற்றை எடுத்துக் கூறிவருகின்றது.

இனிமேலும் அந்தரங்கம் பகுதியை முரசு வெளியிடாதா? இப்பகுதியை பிரசுரிக்காமைக்கு காரணம் என்ன? அவை மருத்துவரீதியாக உண்மைகளைக் கூறுகின்றதே தவிர தவறுகள் ஏதுமில்லையே!


### காத்திருக்கிறேன்

முரசு அரசியல் ரீதியான கள யதார்த்தங்களை கையாளும் விதம்தான் ரொம்பவே பிடிக்கும். அடுத்து இடி அமீனின் வாழ்க்கை வரலாறை படிக்கும்போது நெஞ்சம் பதைபதைக்கிறது. முரசு இதை மீள்பிரசுரம் செய்தமை நல்லதே. இப்பகுதியை முன்பு நான் படிக்கவில்லை. இடி அமீன் அநியாயத்தின் வழிநின்று மக்களை அநியாயமாக அழித்துள்ளான். அவனது அநியாயங்களை வாசிக்கக் காத்திருக்கின்றேன்.

ம.சோமசுந்தரம், கிளிநொச்சி.

# சவால்களை மீறி வேறுபாடுகள் அற்ற சமூகத்தை உருவாக்கத் தயார்

## – மு. சந்திரகுமார் எம்.பி



ஒவ்வொரு மனிதனுக்கும் தனது பாரம்பரிய சுயதொழில்களை மேற்கொள்வதற்கும் உரிமையுண்டு. அதேவேளை, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் தமிழர்கள் என்று மதிக்கப்படுகின்ற நிலைமை உருவாக்குவதற்காக நாம் எத்தகைய சவால்களுக்கும் முகங்கொடுப்பதற்கு தயாராக உள்ளோம். அதற்கு எந்த சக்திகளும் தடை நிற்க முடியாது என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுமொத்த மக்களின் வாக்குகளையும் பெற்று அதிகாரத்திற்கு வந்த சில அரசியல்வாதிகள் மக்களிடையே வர்க்கரீதியான பிரிவினைகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதோடு, ஒரு பகுதி மக்களின் நலன்களை மட்டுமே பிரதிபலிப்பவர்களாகவும் ஏனையவர்களை சமூகரீதியாகவும் தொழில்ரீதியாகவும் முடக்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் கேள்விக் குறியாக்கும் வகையில் செயற்படுகின்றனர். இச்செயற்பாடானது எதிர்காலத்தில் எமது மக்களிடையே பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஏனைய அரசியல் கட்சிகளிடமிருந்து வேறுபட்டது. எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான செயற்பாடுகளை மதிநுட்பமாக கையாளும் கட்சியாக செயற்பட்டுவரும் அதேவேளை சமூகரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் கொள்கையினையும் முதன்மையாகக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் சமூக ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்களின் பக்கம்நின்று அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் நாம் எப்போதும் பின்நிற்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.


# சம்பூரில் கட்டுவலைத் தொழிலுக்கு தடை!

மூதூர் கிழக்கு, சம்பூர் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்ற சம்பூர் மற்றும் கடற்கரைச்சேனை மக்களின் பாரம்பரிய கட்டுவலைத் தொழிலுக்கு கடற்படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று அகதி மீனவர்களின் வலைகளும் கடற்படையினரால் அறுத்து வீசப்பட்டுள்ளன என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"அப்பகுதியில் கட்டுவலை தொழிலை நம்பி 180க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். தற்போது நாம் ஜீவனோபாயமாக நம்பியிருந்த கடற்தொழிலும் தடைசெய்யப்பட்டால் வறுமையில் உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை" என மூதூர் பிரதேச மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் ம.கிருஸ்ணப்பிள்ளை தெரிவித்தார். சம்பூர் அனல் மின் நிலையத்திற்கு வரும் கப்பல்களுக்கு தடையாக உள்ளதன் காரணமாகவே இந்த தொழிலை தடைவிதிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக கடற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டமைப்புக்குள் ஜனநாயகம் கிடையாது

## குமுறினார் மாவை



"கூட்டமைப்பில் ஒரு சிலர் மட்டும் தனித்து முடிவெடுப்பது என்னால் எதற்காக இந்தக் கட்சி?, மத்திய குழு?, கலைத்துவிட வேண்டியதுதானே!" என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.வை.சேனாதிராஜா தனது மனக்குமுறலை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் நியமனம் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து மா.வை. சேனாதிராஜாவிற்கும் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் காணப்பட்டுவந்த புகைச்சல், இறுதியாக நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் வெளிப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்டவாறு பேசியுள்ள மா.வை. சேனாதிராஜா அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு எனக்குத் தகுதியில்லை என்று யார் முடிவெடுத்தது?, ஒரு சிலர் மட்டுமே இந்த முடிவை எடுத்தனர். கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் எல்லாம் முழு ஆதரவு தெரிவித்தனர். அவர்கள் ஒருபோதும் இடைஞ்சலாக நின்றதில்லை.

18 வயதிலிருந்து கடந்த 43 வருடங்களாகக் கட்சிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் ஒரு சிலர் மட்டும் எடுத்த தீர்மானம்தான் அது.

இன்றைக்குக் கூட்டியிருக்கின்ற இந்தக் கூட்டத்தை அன்றைக்கே கூட்டி முடிவெடுத்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட கட்சியில் இருப்பதைவிட வெளியேறுவதே மேலானது." என்று ஆக்ரோஷமாகப் பேசிவிட்டு கூட்டத்தைவிட்டு வெளியேற முற்பட்ட மா.வை. சேனாதிராஜாவை கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் ஆசுவாசப்படுத்தியதாக உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாடு தழுவிய வறட்சியும் எதிர்கொள்ளும் சவால்களும்!

**கடந்த 25 ஆண்டு காலமாக இடமபெற்றுவந்த உள்நாட்டு ஆயுத வன்முறைகளினாலும் சுனாமி கடற்பேரலைத் தாக்கத்தினாலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மக்கள் சமீப காலங்களுக்குள்ளாகத்தான் அந்த பாதிப்புகளில் இருந்து ஓரளவாவது மெல்ல மெல்ல மீண்டெழ முடிந்துள்ளது. 25 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத்தின் காரணமாக தமது நிலபுலன்களுக்குச் சென்று விவசாயம் செய்யமுடியாதிருந்த தமிழ், முஸ்லிம், சிங்கள விவசாயிகள் இப்பொழுது இனமத பேதமின்றி கூட்டாகவும் தனியாகவும் பரந்தளவில் விவசாயச் செய்கையில் ஈடுபடமுடிகிறது.**

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஆயுத வன்முறைகளால் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகம், சூறாவளி, அடைமழை, வரட்சி இதுபோன்ற செயற்கை மற்றும் இயற்கை இடர்களுக்கு மக்கள் காலாகாலமாக முகங்கொடுத்துத்தான் வருகின்றார்கள்.

எனினும், சோர்ந்துவிடாமல் அவர்கள் திரும்பத் திரும்ப மீள் எழும்ப வேண்டித்தான் உள்ளது.

நிலபுலன்கள், தொழிற்துறைகள், கால்நடைகள், வீடுவாசல்கள் என்று எல்லாவற்றையுமே இயற்கை சீற்றத்தினாலும் மனித நாசவேலைகளினாலும் மக்கள் இழக்கநேரிடுகிறது.

இயற்கை இடர்கள் இன மத பேதம் பார்த்து எவரையும் விட்டு வைப்பதில்லை. எல்லோருமே ஏதோ ஒருவகையில் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

கடந்த 25 ஆண்டு காலமாக இடம பெற்றுவந்த உள்நாட்டு ஆயுத வன்முறைகளினாலும சுனாமி கடற்பேரலைத் தாக்கத்தினாலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு,கிழக்கு மக்கள் சமீப காலங்களுக்குள்ளாகத்தான் அந்த பாதிப்புகளில் இருந்து ஓரளவாவது மெல்ல மெல்ல மீண்டெழ முடிந்துள்ளது.

25 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத்தின் காரணமாக தமது நிலபுலன்களுக்குச் சென்று விவசாயம் செய்யமுடியாதிருந்த தமிழ், முஸ்லிம், சிங்கள விவசாயிகள் இப்பொழுது இனமத பேதமின்றி கூட்டாகவும் தனியாகவும் பரந்தளவில் விவசாயச் செய்கையில் ஈடுபடமுடிகிறது.

காடு மேடு, மூலைமுடுக்கென்று எங்குமே விவசாயிகளின் கால் படுவதால் பச்சைப்பசேல் என்று பயிர்ச்செய்கை கண்ணுக்குக் குளிர்ச்சியாய் வளர்கிறது.

விவசாயிகள் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு சிரமங்களையும் பொருட்படுத்தாது கமச்செய்கையில் ஈடுபடுகிறார்கள். வங்கிகளிலும் வசதி படைத்தோரிடமும்கூட வறிய விவசாயிகள் கடன்பட்டுத்தான் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

விதைப்பு வேலையும் சேனைப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நாட்களில் விவசாயிகள் வான் மழையை எதிர்பார்த்து தவம் கிடக்கிறார்கள்.

வாடிப்போகும் பயிருக்கு ஒரு துளி வான்மழை பெய்யாதா என வானத்தைப் பார்த்து ஏங்குகிறார்கள். ஓடும் மேகங்கள் இந்தப் பக்கம் வாராதா என அங்கலாய்த்தார்கள், நேர்ச்சை செய்கிறார்கள், பிரார்த்தனையிலும் ஈடுபடுகிறார்கள்.

இந்த ஆண்டு வான்மழை பொய்த்துப் போனதால் பலரது சேனைப் பயிர்ச் செய்கையும் நெல் வயல்களும் பிஞ்சுப் பருவத்தில் கருகிப்போயுள்ளன. இதனால் விவசாயிகள் தமது விவசாயத்தை கைவிட வேண்டியதாகி விட்டது.

கால் நூற்றாண்டு காலமாக இடம்பெற்ற ஆயுத வன்முறைகளினால் எல்லாவற்றையும் இழந்து ஓட்டாண்டியாகிப் போன மக்கள் இப்போது பயங்கரவாதம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளதால் இம்முறை பெருத்த உற்சாகத்தோடு கடன்பட்டும், எஞ்சியிருந்ததை முதலீடுசெய்தும் விவசாயத்தில் ஈடுபட்டார்கள்.

கடந்த ஆண்டின் இறுதியிலும் இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் நிலவிய கடும் வரட்சி இத்தகைய பேரழிவையும் துயரமான வாழ்க்கையையும் விட்டுச் சென்றுள்ளது.

அறுவடை வீட்டுக்கு வந்து சேர்வதற்கும் ஊர் கலகலப்பாக இருப்பதற்கும் நாடு செழிப்பதற்கும் தோதாக இயற்கை இடம்தரவில்லை. பாதியிலேயே பயிர்ச்செய்கை பாழாகிப் போயுள்ளது.

கடன்பட்டும் கையிலிருந்ததை முதலீடுசெய்தும் விவசாயத்தில் ஈடுபட்டவர்களைப் இம்முறை நிலவிய கடும் வரட்சிப் பாதிப்பு மீளமுடியாத பாதாளத்தில் தள்ளியுள்ளது.

களனி விளைந்தால் நாடு செழிக்கும் என்ற எதிர்பார்ப்பு தவறிப் போயுள்ளதால் சேற்றில் கால்பதித்த விவசாயிகள் இப்போது சோற்றில் கை வைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

களனி விளையாதது விவசாயிகளை மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக நாட்டையே ஆட்டங்காணச் செய்துள்ளது.

நாடு முழுவதுமாக சமீபத்திய இயற்கை இடர் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பது மிகமோசமான இழப்புக்களுக்கு முகங்கொடுத்து சவால்களை எதிர்கொள்ளச் செய்துள்ளது.

பாதிப்புக்களாக விவசாயம், வியாபாரம், மீன்பிடி, உற்பத்தி, தொழிற்துறை, மின்சாரம், நீர்ப்பாசனம் என்று ஒட்டுமொத்தத்தில் எல்லாமே நகைநட்டுக்களை அடகுவைத்தும் விவசாயம் செய்தவர்களின் கதி அதோகதியாகியுள்ளது. விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது தான் சிரம சாத்தியமான விடயமாக இருக்கப்போகிறது.

நாட்டின் பிரதான தொழிற்துறைகளான விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்பன சமீபத்திய வறட்சியின் விளைவாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாதிப்புக்களிலிருந்து மீள் எழும்புவதற்கான வழிவகைகளை உடனடியாகக் கண்டாகவேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் மனமுடைந்து போயுள்ள விவசாயிகளைத் தெம்பூட்டும்படியான நிவாரணங்கள்தான் சரிந்துபோன விவசாய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கைகொடுக்கும்.

ஆனால், அந்த நிவாரணப் பணிகள் விவசாயிகளை எதிர்பார்ப்புள்ளவர்களாக மாற்றும் நிலைக்கும் இட்டுச் சென்றுவிடக்கூடாது.

(கடந்த வாரம், எமது கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த Ruthless Leader என்பதற்கான அர்த்தம் நம்பகத் தன்மையற்ற தலைவன் என்று குறிப்பிடப்பட்டிருந்ததை வாசகர்கள், தயையற்ற அல்லது கொடூரமான தலைவன் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்)

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## பெற்றோரே காவலராகவும் இருப்பது அவசியம்

முகப்புத்தகத்தினூடாக (பேஸ்புக்) குற்றங்கள் அதிகரித்துவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் கூறுவதற்கு. ஒரு வாரத்துக்கு முன்னர் குருணாகலைச் சேர்ந்த பாடசாலை மாணவி வெனுசா இமந்தி பண்டார எனும் மாணவி பேஸ்புக் பக்கத்தில் தனது காதலனுடன் கடற்கரையில் குளிப்பதுபோல் பிடிக்கப்பட்ட புகைப்படம் காதலனால் பேஸ்புக்கில் வெளியிடப்பட்ட சர்ச்சையில் தற்கொலை செய்துகொண்டார்.

அந்தச் சம்பவம் பாடசாலை மாணவ மாணவியர் மட்டுமல்லாது. பேஸ்புக் கணக்கை வைத்திருக்கும் இளவயதினரிடையேயும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

பேஸ்புக் பாவனை இன்று சாதரணமானதாகிவிட்டுள்ளது. வயது எல்லை இல்லாமல் எவரும் தமக்கான கணக்கை திறக்கமுடியும். அவ்வாறு புதிதாக இணைந்து கொள்ளும்போது அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு உண்மையான பெயர். முகவரி. புகைப்படம் மட்டுமல்லாது சுய விபரங்களையும் அங்கே பதிவு செய்கின்றனர். சிலர் பொய்யான தகவல்களை வழங்கியும் கணக்கொன்றை திறந்து கொள்கின்றனர்.

இதனூடாக புதிய முகம் தெரியாத புதிய நண்பர்களுடன் தொடர்பு ஏற்படுகின்றது. அவர்கள் மோசடிக்காரர்களாக இருந்தால் தவறாக வழிநடத்தத் தொடங்குவார்கள். மோசமான தொடர்புகளை ஏற்படுத்தி விடுவார்கள். விபரம் தெரியாதவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகள். அது தொடர்பான புகைப்படங்கள். அதனோடு தொடர்புபட்ட நண்பர்களின் புகைப்படங்கள் என்பவற்றையும் தரவேற்றம்செய்து கொள்வதை பேஸ்புக் பாவனையாளர்கள் ஒரு பொழுதுபோக்காக செய்துவருகின்றார்கள்.


இதனால் முகம் தெரிந்த மற்றும் முகம் தெரியாத பலருடன் தொடர்புகள் ஏற்படுகின்றது. அதில் காதல் தொடர்புகள் ஏற்படுவதும். அது கல்யாணம் வரை வந்து முறிந்துபோவது. ஏமாற்றப்படுவது. பண உதவிகள் கேட்டு ஏமாற்றுவது. ஜோக் என்ற போர்வையில் பாலியல் புகைப்படங்களையும். கதைகளையும் பரிமாறிக் கொள்வது எனப் பலதும் பத்தும் பேஸ்புக்கினால் நடந்துள்ளது. பொய்யான புகைப்படங்களை பிரசுரித்து தொடர்பு கொள்வதன் ஊடாக அப்பா. மகள் உறவுகூட வேறு மாதிரியாக ஏற்பட்டு இறுதியில் தகப்பன் வெட்கி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டதும். கோரமான மணமகன் வேறுநபரின் புகைப்படத்தை தன்னுடையதாகக் காட்டி ஏமாற்றியின் நேரடியாக திருமணத்துக்கு வந்தபோது பெண் வெட்கி வாழ்க்கை வெறுத்து ஓடியதும். கணவன் மனைவியர் வேறு பெயர்களில் காதலித்து நேரடியாக சந்திக்க நேர்ந்தது. இப்படி எல்லா அசிங்கங்களும் பேஸ் புக்கில் அரங்கேறியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் நடந்த செய்திகளைக் கேட்டு சிரித்துவிட்டு இருந்துவிட் டோம். இப்போது இலங்கையில் இவ்வாறான பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது.

எனவே, பெற்றோர் தமது இளம் பிள்ளைகளின் கல்வி. பொழுதுபோக்கு. கணனியுடன் அவர்கள் செலவு செய்யும் நேரம். அவர்களின் நண்பர்கள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தவேண்டும். வளர்ந்து வரும் நாகரிகம். தொழில்நுட்ப வளர்ச்சி என்பன பிள்ளைகளை ஏமாற்றிவிடுகின்ற அபாயம் இன்று வீட்டுக்குள்ளேயே உள்ளது. பொலிஸ் பேச்சாளரின் செய்தியை பெற்றோர் ஒவ்வொருவரும் தமக்கான எச்சரிக்கையாகவே எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# சர்வதேச சதி! சிக்குமா அரசு?



தற்போதுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை அகற்றி வேறு ஒரு பொம்மையை ஆட்சிப்பீடம் ஏற்றுவதற்கே அமெரிக்கா துடிக்கின்றது. அமெரிக்காவின் கட்டளைக்கு பணிந்து நடக்கும் அரசியல் பீடமொன்று இலங்கையில் இருப்பது அவசியமென அமெரிக்கா விரும்புகின்றது. ஆகவேதான் அனைத்து வழிகளிலும் தனது இலக்கை அடைந்துகொள்ள முயற்சிக்கின்றது என்பதுதான் இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாடாக உள்ளது

போர்க்குற்ற விசாரணையை வலியுத்தி மின்சாரக்கதிரையில் தன்னை இருக்கச் செய்வதற்கே அமெரிக்கா தலைமையிலான சர்வதேச நாடுகள் முயற்சிக்கின்றன என்று ஜனாதிபதி கூறுவதை தேர்தலுக்கான அனுதாப தந்தி ரோபாயமென எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகை தந்து நிலைமையை பார்த்து விட்டு பாராட்டுகின்றார்கள். அவர்கள் வேறொரு சந்தர்ப்பத்தில் இலங்கையை விமர்சிக்கின்றார்கள். ஏன் அப்படிச் செய்கின்றார்கள் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், சர்வதேசத்தின் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரலை புரிந்து கொள்ளமுடியவில்லை என்றும் அரசு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

அமெரிக்காவுக்கு சென்று இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி முடியுமானவரை பிரேரணையை ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு கொண்டு வரவிடாமல் தடுக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நாடு திரும்பிய பின்னர் கருத்து வெளியிடும் போது, அமெரிக்காவில் இலங்கைக்கு எதிரான பரப்புரையைச் செய்வதற்கும், அமெ ரிக்க இராஜதந்திரிகளை கவர்வதற்கும் புலிகளின் கட்டமைப்புகள் மிகப்பலமாக இயங்குகின்றன என்றும் அவர்கள் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு வியூகங்களை வகுத்து செயற்படுகின்றார்கள் என்றும் கூறியதை அவதானிகள் தமது விமர்சனத்தில், ஜனாதிபதியின் செயலாளர் தனது முயற்சியல் தோற்றுப் போய்விட்டார் என்று கூறுகின்றனர்.

ஜனாதிபதியின் செயலாளர் இன்னொரு கருத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அதாவது புலிகளின் கட்டமைப்புகள் பெரும் செலவில் பரப்புரைக்கான நிறுவனங்களையும் அணுகி இலங்கைக்கு எதிராக செயற்பட்டுவருவதோடு, அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணைக்கு ஆதரவாக உறுப்பு நாடுகளை தெளிவுபடுத்தும் பிரசாரங்களையும் செய்துவருகின்றன என்றார்.

சர்வதேச பொறிமுறைக்குள் இணங்காமல் செயற்படும் இலங்கை அரசை அந்த அலைவரிசைக்குள் கொண்டு வர வேண்டுமென்பதற் காகவே இந்தியாவும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்கும் என்ற கருத்தும் உண்டு. ஆகவே தற்போது வரை வெளிப்படையாக இந்தியா எந்தக் கருத்தையும் கூறாவிட்டாலும். இந்தியாவின் உள்நோக்கம் இரகசியமானதல்ல.

இதேவேளை கடந்த காலத்தில் இலங்கையின் சார்பில் ஐ.நா. மன்றத்துடன் தொடர்புபட்டு முக்கிய பணியாற்றிய தயான் ஜெயதிலக, தமரா குணநாயகம் போன்றோரும் சர்வதேச அவதானிகளும் ஒரு விடயத்தை நிச்சயமாக கூறுகின்றார்கள். அதாவது இம்முறை ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை அரசுக்கு நெருக்கடியை தரக் கூடிய பிரேரணை ஒன்றை அமெரிக்கா கொண்டுவருவது உறுதி என்பதுதான்.

அதையொட்டி அமெரிக்கா பல்வேறு வேலைத்திட்டங்களை நகர்த்தியுள்ளது. விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் கூறுவதானால், வடக்கு மாகாண சபையில் இறுதியாக கொண்டு வரப்பட்ட பிரேரணையும் அமெரிக்காவின் நோக்கத்திற்கானது தான். அதற்காக டொலர்களை அமெரிக்கா செலவு செய்திருப்பதும், அது எவ்வாறு பகிரப்பட்டது என்பதும் வேறு ஒரு காலத்தில் விக்கிலீக்ஸ் கேபிள் செய்திகளாக வரும் போது தெரியவரும்.

ஆயர்களின் கருத்துக்கள், வருகை தரும் ராஜதந்திரிகளின் கருத்துக்கள் என்பனவெல்லாம் பரப்புரை செய்யும் நிறுவனங்களின் திட்டங்களுக்குள் அடங்குகின்றன. சுருக்கமாகக் கூறினால், அமெரிக்கா தனது பிரேரணைக்கான பிரசாரத்துக்கு தேவையான இலங்கையிலிருந்தே உருவாக்கியது. இலங்கை அரசாங்கமோ தடுக்க முடியாமல் போனதால் தோற்கடிக்க முயற்சிசெய்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவின் பிரேரணைக்கு வலிமை சேர்ப்பதாக அமைந்த மன்னார் மனிதப் புதைகுழி விவகாரமும், திருகோணமலை மக்கீஸர் விளையாட்டு அரங்குப் பகுதியில் மனித எலும்புத் துண்டுகள் கண்டு பிடிப்பும் அமெரிக்காகவே எதிர்பார்க்காத விடயங்கள்.

இதற்கிடையே அமெரிக்காவின் சதிக்கு யார் எடுபட்டார்களோ, அல்லது ஏதோ காட்டப் போய், ஏதோ நடந்த கதையாகியிருக்கின்றது வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான பதிவு விவகாரம்.

உலகத்துக்கே தெரியும். புலிகள் பராயமடையாத பிள்ளைகளையும், வீட்டுக்கு கட்டாயமாக ஒருவரையும் பலாத்காரமாக தமது இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்கள். அப்படி இணைத்துக்கொண்டவர்களில் 95 வீதமானவர்கள் பலியாகிப்போனார்கள். புலிகளால் பிடிக்கப்பட்டு காணாமல்போனவர்கள் தொடர்பாக சரியான கணக்கெடுப்பு இதுவரை வெளியில் வரவில்லை. இந்த நிலையில் காணாமல் போனவர்கள், பலியாகிப் போனவர்கள் என எல்லோருடைய கணக்கையும், இராணுவத்தினர்மீதும், கருணா குழு மீதும், ஈ.பி.டி.பி மீதும் சுமத்துவதைப் பார்த்தால் இதற்குள்ளும் உள்நோக்கமும், டொலர் சதியும் இருக்குமோ என்ற சந்தேகங்களையும் சிலர் முன்வைக்கின்றனர். அதற்குக் காரணம், பலர் காணாமல் போவ தற்கும், கொல்லப்படுவதற்கும் பிரதான பங்காளிகளில் ஒரு தரப்பான புலிகள் தொடர்பில் இதுவரையான முறைப்பாடுகளில் எவரும் வாய்திறக்கவில்லை. ஏதோ எதுவுமே நடக்காத சூழலில் திடீரென்று கதவை உடைத்துக் கொண்டுவந்து பிள்ளையைப் பிடித்தார்கள் என்றும், போனவரைக் காணவில்லை என்றும் கூறுவது போல் வாக்குமூலங்கள் கூறப்படுவதேயாகும் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதனுடைய சரி, பிழைகள் தொடர்பாக விரிவாக ஆராய வேண்டும். எனினும் அரசுக்கு இந்த நடவடிக்கை பாதகமான வெளிப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களிடம் தேர்தல் பிரசாரப் பொழுதுகளில் வழிபாட்டுத்தலங்களில் கூறப்படுவதுபோல் தற்போது கூறப்படுகின்ற பரப்புரை யாதெனில் இம்முறை இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடமிருந்து தப்பிக்கமுடியாது. கூட்டமைப்பினர் உடும்புப்பிடியாக நிற்கின்றார்கள் என்பதுதான்.

அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை கடந்த காலத்தைப் போல் வலிமை குறைந்ததாக இருக்காது என்பதை கூட்டமைப்பிற்கு அரசியலாக்குவதற்கு பெரும்பிரயத்தனங்கள் எடுக்கப்படுகின்றன.

அமெரிக்கா இலங்கைக்கு எதிரான பிரேரணையை கொண்டு வரப்போகின்றது என்பதும், அந்தப் பிரேரணையை இலங்கை அரசாங்கத்தால் தோற்கடிக்க முடியாமல் போகும் என்பதையும் ஓரளவுக்கு ஆற்றலுள்ளவர்கள் கிரகித்துக் கொள்வார்கள். அதை வைத்துக் கொண்டு இலங்கை ஜனாதிபதியை தண்டித்துவிட முடியும் என்றும், படை அதிகாரிகளை குற்றவாளிகளாக நிறுத்த முடியும் என்றும், ஆட்சியை கவிழ்த்து ஒரு பொம்மையை இலங்கை மக்களின் தலையில் கட்டிவிட முடியும் என்பதும் சற்று அபரிமிதமான எதிர்பார்ப்பாகவே உள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்கா தயாராகிவரும் நிலையில், அமெரிக்க செனட் சபையில் பொறுப்புக் கூறுவதற்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தி, மற்றுமொரு தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியின் வட கரோலினா செனெட்டர் றிச்சர்ட் புர், ஜனநாயக கட்சியின் றொபேட் கசேயுடன் இணைந்து இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்துள்ளார். இதற்கு மேலும் நான்கு செனெட்டர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு தேவையான, உள்நாட்டு மீள் கட்டமைப்பு, மீள்குடியமர்வு, நல்லிணக்கத்துக்கான ஆதரவை வெளிப்படுத்துதல் என்ற தலைப்பில் இந்த தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போரின்போதும், அதற்குப் பின்னரும் இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்தும் வெளியான அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு, சுதந்திரமான பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் இணைந்து உருவாக்கவேண்டும் என்று இந்த தீர்மான வரைவில் கோரப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவு, தற்போது செனெட் வெளிவிவகாரக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. வெளிநாடு ஒன்றுடன் தொடர்புடைய, தீர்மான வரைவு என்பதால், முதலில் அது வெளிவிவகாரக் குழுவினால் பரிசீலிக்கப்படுவது வழக்கம். அந்த தீர்மான வரைவு குறிப்பிட்ட நாட்டுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று வெளிவிவகாரக் குழு கருதினால், அதனை, செனெட்டில் சமர்ப்பித்து விவாதிக்க பரிந்துரை செய்யும்.

இப்போது இந்த நடைமுறைக்கே இந்த தீர்மான வரைவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்திருப்பவர், வோசிங்டனில் ஆட்சியில் இருக்கும், ஒபாமாவின் ஜனநாயக கட்சியை சேர்ந்த செனெட்டர் அல்ல. எதிர்க்கட்சியான, குடியரசுக் கட்சியின் செனெட்டரே, இந்த தீர்மான வரைவை முன்வைத்துள்ளார்.

பெரும்பாலும் இந்த தீர்மான வரைவை, செனெட் விவாதத்துக்கு அனுப்பும் முடிவையே வெளிவிவகாரக் குழு எடுக்கும் என்று கருதப்படுகிறது. ஏனென்றால், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரும் முன்னாயத்தங்களில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஏற்கனவே ஈடுபட்டுள்ளது.

எனவே, செனெட்டில் இந்த தீர்மான வரைவு குறித்து விவாதம் நடத்தப்பட்டாலோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலோ, பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்று தகவல்கள் கூறுகின்றன.

இம்முறை, ஜெனிவாவில் அமெரிக்கா எத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளது என்றோ, அதில், சர்வதேச விசாரணை கோரிக்கை இடம்பெறுமா என்றோ, இன்னமும் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

இத்தகைய கட்டத்தில், செனெட் சபையில், சுதந்திரமான சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறையை ஏற்படுத்த வலியுறுத்தும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுமானால், அது ஜெனிவா தீர்மானத்தில், சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கும்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தொடரும் ஏமாற்றங்கள்



ஒவ்வொரு தரமும் அவள் இயற்கைக் கடனைக்கழிக்க, குளிக்க, ஆடைகளைத் துவைக்க ஆட்களை அழைக்க வேண்டியிருந்தது. அங்கே அவள் புதியவள் ஆகையால் அவளுக்கான தேவைகளை நிறைவேற்ற பராமரிப்பாளர்கள் உடனே வந்து சேரமாட்டார்கள். சிலநேரங்களில் உதவிக்காக அவள் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த இடத்திற்கு சத்தமிட்டு அழைக்கவேண்டும். அப்படியும் யாரும் வராதவிடத்து பெலத்து அழுது கத்தினால்தான் ஆட்கள் வருவார்கள்.

பயிற்சி முகாமில் சந்தித்த கிண்டல்கள் போல் அங்கும் சில பராமரிப்பாளர்களால் அவள் தண்டிக்கப்பட்டாள். மூத்தவர்களுக்குப் பணிகள் முடித்துவிட்டே இவள்போன்ற புதியவர்களுக்கான பணிகள் செய்யப்படும். அந்த நவம் அறிவுக்கூடம் பல கலைஞர்களை, தொழில்நுட்பவியலாளர்களை, பல்துறை சார்ந்து பலரை உருவாக்கி வெளியில் அனுப்பியிருக்கிறது. ஆனால் இவள் போன்ற புதியவர்களுக்கு பழையவர்களால் செய்யப்பட்ட சில வேண்டத்தகாத விடயங்களை யாருக்கும் சொல்லாமல் தனக்குள் மறைத்துக் கொண்டாள். எங்கும் எல்லாவகையான மனிதர்களும் இருப்பார்கள் என அவளுக்கு அம்மாவுக்கு நிகராயிருந்த மூத்த தளபதி அக்கா சொன்னதைத்தான் நினைத்துத் தன்னை சமாதானப்படுத்துவாள்.

சக்கர நாற்காலிக்குள் தன்னால் உழல முடியாதென்பதை உரியவர்களுக்குச் சொல்லியழுது சண்டை பிடித்துச் செயற்கைக்கால் பொருத்துமாறு கெஞ்சினாள். இருகால்களையும் இழந்த நிலையில் அவளால் இலகுவாய்நடக்க முடியாதென்று சொன்ன வெண்புறா செயற்கைக்கால் பொருத்தும் நிபுணர்களின் ஆலோசனையை நிராகரித்துத் தன்னால் விரைவில் நடக்கமுடியுமென வாதிட்டாள்.

2007காயம் ஆறி ஒருவருடம் முடிந்து வெண்புறாவிற்குச் சென்று அளவு கொடுத்துத்தனக்கான இரு கால்களையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பெற்றுக் கொண்டாள். கால்கள் பொருத்திய ஆரம்பம் மிகுந்த வலியோடு பயிற்சி செய்தாள். இருகையிலும் தாங்கியோடு ஆரம்பித்துச் சில வாரங்களில் ஒற்றைக் கைதாங்கியோடு நடக்கத் தொடங்கி மேலும் சில மாதங்களில் கைத்தாங்கியில்லாமல் நடக்கத் தொடங்கினாள். ஆச்சரியம்தான் பலருக்கு. ஆனால் தன்னால் முடியுமென்று சாதித்துக் காட்டினாள்.

வெண்புறா நிறுவனம் அவளுக்குக் காலையும் கொடுத்து நம்பிக்கையையும் கொடுத்துத் தேற்றிவிட செயற்கைக்கால் பொருத்திக்கொண்டு வெளியில் வந்தாள். வானொலிக்குள் அவள் உள்வாங்கப்பட்டு வானொலிக்கலைஞராய் ஒலிப்பதிவு அறிவிப்பு எல்லாவற்றிலும் காலிழந்த துயரமும் மறந்து போய் செயற்படத் தொடங்கினாள். அவ்வப்போது நெஞ்சுக்குள் திரண்டு அழுத்தும் காலிழந்து ஊனமான துயரம் துன்புறுத்தினாலும் மற்றவர்கள் முன் சிரித்தபடி வேலைகளில் ஈடுபடத் தொடங்கினாள்.

தனக்குள்ளிருந்து திரட்டப்பட்ட திறமைகளையெல்லாம் அவள் முழுமையாய் பயன்படுத்தத் தொடங்கினாள். அறிவிப்பில் அவள் புதிய புதிய விடயங்களைச் சிருஷ்டித்தாள். அவளது குரலைக்கேட்க அவளது நிகழ்ச்சியைக் கேட்க காவலரண்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் பலர் அவளது நேயர்களாகியிருந்தனர்.

அவளுக்கும் அவளது பயிற்சிக்காலத் தோழி யாழிசைக்கும் மீண்டும் பணி ஒரே பிரிவில் ஒரே இடத்தில் இருவரும் இயங்கத் தொடங்கினார்கள். அன்பினி யாழிசையுடன் சேர்ந்து முன்புபோல் நடனம் ஆடமுடியவில்லை. முழங்காலுடன் அறுபட்டுப்போன தனது கால்களைப்பற்றிக் கவலைப்படுபவளுக்கு இவளது துயரத்துக்கு ஆறுதல்சொல்லி அமைதிப்படுத்துவாள் யாழிசை. பணியோடு நெடுநேரம் இருவரும் பேசிக்கொள்வார்கள்.

ஒருநாள் யாழிசை தனது காதல் பற்றி அன்பினிக்குச் சொன்னாள். ஒரு மருத்துவப் போராளியை அவள் காதலிப்பதாகவும் தங்களுக்குத் திருமணம் நிகழ வேண்டும் என்றும் தனது விருப்பங்களை இவளுக்குச் சொல்லி மகிழ்ந்தாள்.

காதல் வந்தால் உலகே மாறுமென்று சொன்ன கதைகள் உண்மை போலத்தானிருந்தது. யாழிசையின் கனவுத்தோட்டத்தில் யாழிசையும் அவளது மருத்துவப்போராளிக் காதலனும் அவளது ஆசைகளும் வாசம் நிறைந்த மலர்களாலும் பளிங்குகளாலும் கட்டப்பட்டிருந்தது.

தனது காதலன் பற்றிச் சொல்கின்ற தருணங்களில் அவள் கொள்கிற மகிழ்ச்சியை ஏனைய தருணங்களில் அன்பினி பார்த்ததில்லை. எல்லாவற்றையும் ரசனையுடன் அவள் சொல்கின்றபோது பரத அபிநயங்கள் பிடித்துக்காட்டிச் சிரிப்பாள். அவர்கள் இருவரும் பயிற்சி முடித்து வெளியில் பணியில் சேர்ந்த நேரம் பல சுவாரசியம் நிறைந்த அனுபவங்களை வெளிநாட்டிலிருந்து வந்த தமிழர்களிடமிருந்து பெற்றது பற்றியெல்லாம் யாழிசை நகைச்சுவையுடன் கூறி அன்பினியை மகிழ்விப்பாள்.

அப்படித்தான் 2004ம் ஆண்டு, அந்த நாட்களில் புதியபுதிய முகங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கு அரசியல் பயிற்சி வகுப்புகள் , ஆங்கிலக்கற்பித்தல்கள் , சினிமாக் கற்பித்தல் என்று பலர் வந்து வகுப்பெடுத்தார்கள். இவளும் இவளது தோழிகளும் அந்த வகுப்புகளில் எல்லாம் பங்குபற்றுவார்கள். அவர்கள் விரும்பினார்களோ?, இல்லையோ அந்த அறுவைகளில் நித்திரை தூங்கித் தூங்கி இருந்தே ஆகவேண்டும்.

அப்போது கனடாவிலிருந்தும் லண்டனில் இருந்தும் ஆங்கில வகுப்பெடுக்க பலர் வந்தார்கள். அன்பினியும் யாழிசையும் சார்ந்த ஒரு குழுவிற்கும் கனடாவிலிருந்து ஒரு அம்மா ஆசிரியையாய் வந்தா. 50தாண்டிய அம்மாவின் கற்பித்தலும் அனுபவப் பகிர்வுகளும் அவளது சுடுதண்ணி வாத்தியார்களை நினைவுபடுத்தும். அம்மா பழைய படங்களில் வரும் வில்லிகள் போலவே வகுப்பெடுப்பா. அவாவுக்கு இவர்கள் வைத்த பெயர் பூலான்தேவி. பூலான்தேவியென்றே அவரது வருகையை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். அந்த அம்மா அவர்கள் பெண்கள் அடக்க ஒடுக்கமாய் பெண்ணுக்கான குணங்களுடன் இருக்கவேண்டுமென்று அறிவுரைகள் கூறுவார். அந்த அறிவுரைகளுடன் அன்பினி முரண்பட்டதற்காக கனடாப் பூலான்தேவி மேலிடத்துக்கு முறையிட்டு குட்டுவாங்காமல் பெரிய அக்காக்களிடம் திட்டுவாங்கியதோடு பூலான்தேவியின் வகுப்பில் வாயே திறப்பதில்லை.

சமூகம் இவர்கள்மீது சுமத்திய தடைகளை உடைத்துக்கொண்டு இச்சமூகத்தின் பிரஜைகளாய் பெண்களை உருவாக்க வேண்டுமென்று பல அக்காக்கள் சொன்ன கதைகளிலிருந்து மாறுபட்டுக் கனடா அம்மாவின் கற்பித்தல் அமைந்தது. யாரிடமும் முறையிட முடியாத நிலமை. கனடாவுக்கு அம்மா போகும் நாள் வந்தால் தங்களுக்கு விடிவென்று பிள்ளைகள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். அப்படிப் பலர் வந்தார்கள் இவர்கள் நித்திரை தூங்கத் தூங்க வகுப்புகள் எடுத்தார்கள்.

(ஏமாற்றங்கள் தொடரும்...)

# புலிகளின் வதை முகாமில்

## வதை 101 மணியம்



அநேகமாக எல்லா தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் அங்கு தமது செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வந்ததினாலும்கூட அவன் அதில் அக்கறை செலுத்தவில்லை.

தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும், தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், எதிரும் புதிருமாக களைக்கூத்தாடிய நேரத்தில், இடதுசாரிகளின் அயராத முயற்சியினால், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 1970இல் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தது. அதன்காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தின் மீது தமிழ் தேசிய வெறியர்களுக்கு ஒருவித வெறுப்புணர்ச்சி இருந்து வந்தது. அது முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவத்தில் ஒருமுறை பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிரான வன்முறையாக வெளிப்பட்டு இருந்தது. (அவர்கள் வெளியில் இருந்த காடையர்களை உசார் படுத்தி, குழப்பம் விளைவித்து, பல்கலைக்கழகத்தை சில வாரங்கள் மூடவைத்தனர்)

பல்கலைக்கழகம் இடதுசாரிகளின் முயற்சியால் உருவாக்கப்பட்டது ஒருபக்கம் இருக்க, அதைத் திறந்து வைக்க அன்றைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க வந்தபோது, அதற்கெதிராக தமிழர் கூட்டணி இரண்டு நாள் ஹர்த்தால் நடாத்தி, (அது முழுத் தோல்வியில் முடிந்தபோதும்) ஒரு வரலாற்றுத் தவறையும் இழைத்தனர். தமக்குத் தாமே கரி பூசிய அந்த நிகழ்வும் அவர்கள் மனதில் அவமானத் தீயை எரிய விட்டுக்கொண்டே இருந்தது.

அதுமாத்திரமின்றி அப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவராக மார்க்சியரான பேராசிரியர் க.கைலாசபதி நியமிக்கப்பட்டதும், அவரது முயற்சியால் ஒரு பெரும் இடதுசாரி விரிவுரையாளர்கள் அணி முதல் தொகுதி விரிவுரையாளர்களாக நியமனம்பெற்றதும் தமிழ் தேசிய வெறியர்களுக்கு அலர்ஜியான விடயங்களாக இருந்தன.

அதன்காரணமாக, யாழ். பல்கலைக்கழகச் சூழலில் இடதுசாரிக் கருத்துகள் பலம் பெறத் தொடங்கியிருந்தன. அதன் தாக்கம், 1976இல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி 'தமிழீழ' தீர்மானத்தை எடுத்தபோது, அதுபற்றி யாழ்.பல்கலைக்கழகத்தில் யாரும் பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளாததில் தெரிந்தது.

தமிழீழத் தீர்மானத்தின் காரணமாக அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றி, தமிழர் கூட்டணி 1977 தேர்தலில் வடக்கு, கிழக்கில் 18 ஆசனங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சியாக வந்த பின்னர், அந்தப் பதவிக்குரிய பாத்திரத்தை வகிக்காது, தமது வர்க்க சகாவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசுடன் கூடிக்குலவி ஊடல் செய்தபோது, அதற்கெதிரான இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினர் தான்.

பின்னர் ஜே.ஆர். அரசு தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, பின்னர் அதை தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாற்றிய போது, அதற்கெதிரான முதல் அடியை எடுத்து வைத்தவர்களும் இந்த பல்கலைக்கழக சமூகத்தினர் தான். அமைதிப்படையாக வந்த இந்திய இராணுவத்தினரை யுத்தத்தில் புலிகள் இழுத்துவிட்ட போது, புலிகளை வேட்டையாட வேண்டிய இந்தியப் படை, புல்லுடன் நெல்லையும் களைவது போல, புலிகளை மட்டுமின்றி அப்பாவிப் பொது மக்களையும் வேட்டையாடிய போது, அதையும் எதிர்த்து நின்றது பல்கலைக்கழக சமூகம்.

விடுதலை வேடத்தில் வந்த புலிகள் தமது வேடம் களைந்து, தமிழ் மக்களின் புதிய அடக்குமுறையாளர்களாக மாறிய போது, புலிகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கவும் யாழ். பல்கலைக்கழக சமூகம் தயங்கவில்லை. அந்தப் போராட்டத்தில் புலிகளின் கொலைவெறிக்கு ஆளானவர்கள் தான், விரிவுரையாளர் ராஜினி திராணகம, மாணவமணிகள் விஜிதரன், செல்வகுமாரன் (ரமணி), விமலேந்தின், செல்வி, தில்லைநாதன், மனோகரன் எனப் பலப்பலர். இலங்கை இராணுவமோ, இந்திய இராணுவமோ இவ்வாறு எவரையும் கொல்லவில்லை. தமிழ் மக்களின் 'மீட்பர்களான' புலிகள் மட்டும் தமது சொந்தச் சகோதரர்களையே வேட்டை ஆடினர்.

எனவே, புலிகள் உட்பட தமிழ் தேசிய வெறியர்கள் அத்தனை பேரும், யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகம்மீது வெறுப்பும் துவேசமும் சந்தேகமும்கொண்டே செயற்பட்டுவந்தனர். புலிகளுக்கு எதிராக பல்கலைக்கழகத்தில் உருவான உணர்வலைகளுக்கான பங்கில் எனக்கும் ஓர் அணில் அளவு சிறு பங்கு உண்டு என்பது உண்மையே என்றபோதிலும், அதையும்கூட புலிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதுவும் ஒரு காரணம், நான் இப்பொழுது புலிகளது 'விருந்தாளி' யாக இருப்பது.

'கறையான் புற்றெடுக்க, பாம்பு குடிகொண்ட கதையாக' பிற்காலத்தில் திருநாவுக்கரசு, சிதம்பரநாதன், கஜேந்திரன் (குதிரை) போன்ற புலிகளின் அடிவருடிகள் பல்கலைக்கழகத்தைச் சீரழித்து, மாணவர்களின் படிப்புக்கும், பல்கலைக் கழகத்தின் பெறுமானத்துக்கும் ஆப்புவைத்து, அதை புலிகளின் ஒரு கூடாரமாக மாற்றும் வரை, சுமார் 20 ஆண்டுகள் யாழ். பல்கலைக்கழகம் தனது முற்போக்கு புலமைசார் ஆளுமையை நிலைநாட்டியே வந்துள்ளது.

தாங்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் புலிகள் கொண்டு வந்த பின்னரும்கூட, புலிகள் யாழ்.பல்கலைக்கழகச் சூழல் பற்றி அதிகம் கவலைப்பட்டதற்கு இதுதான் காரணம். அதன் காரணமாகத்தான் முன்னர் தமக்கு எதிரானவர்களாகக் கருதப்பட்ட விரிவுரையாளர்கள் சித்திரலேகா, மௌனகுரு, நு.்மான், ஏ.ஜே.கனகரத்னா, ஜெயசீலன் அடிகளார் போன்றவர்கள் (இதில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் பற்றி நான் குறிப்பிடவில்லை அவர்கள் புலிகளின் முதலாம் நம்பர் எதிரிகள் என்பது எல்லோரும் அறிந்ததே) பற்றியும், மாணவர்களாக இருந்ததில்லை, செல்வி, மனோகரன், சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சிவரஞ்சித் போன்றவர்கள் பற்றியும் (இதில் நேரடியாக இயக்கங்களில் செயற்பட்ட சில மாணவர்களின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை) அடிக்கடி காந்தி என்னிடம் விசாரித்தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவன் என்னை விசாரிக்கும்போது, ஏ.ஜே.கனகரத்தினா இப்பொழுது புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக மாறியுள்ளார் எனத் தெரிய வந்ததாகவும், அது உண்மையான விசுவாசமா அல்லது தம்மீதான பயத்தின் காரணமாகவா என என்னிடம் வினவினான்.

நான் அதுபற்றி எனக்குத் தெரியாது எனப் பதிலளித்தேன். ஏ.ஜே. கனகரத்தினா இந்தப் பாசிசவாதிகளை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும். எனது நீண்டகால நண்பரான அவரது எண்ணவோட்டங்களை, அவருடனான பல உரையாடல்களின்போது நான் அவதானித்து இருக்கிறேன். அவர் தனது வேலையைக்கூட தனது கருத்துச் சுதந்திரத்துக்காக தூக்கியெறிந்தவர். யாருக்கும் சலுகைகளுக்காக அடிபணிபவர் அல்ல அவர்.

(தொடரும்...)




ஹிட்லரின் கூலிப் படையினர் போல் செயற்பட காவல்துறையினர் சென்று கொத்துக் கொத்தாகக் கொன்று சாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

"என்னை ஏன் கொல்கிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்" என்று இப்படி இறப்பதற்கு முன் பெர்லின் நகரத்து யூதர் ஒருவர் கேட்டதற்கு, என்னை ஏன் கொல்கிறீர்கள் எனக் கேட்டதற்கு ஹிட்லரின் காவலர் ஒருவர் சொன்ன பதில்:

"நீங்கள் கொலைக் குற்றவாளியாக இருந்தால்கூட மன்னித்துவிடலாம். யூதராக அல்லவா இருக்கிறீர்கள். வேறுவழியே இல்லை. இறந்துவிடுங்கள்.

**அதாவது** கைதுசெய்து சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச்சென்று கொலை செய்தார்கள். "ஆமாம், கொன்றோம், அதற்கென்ன? என்று நேரடியாகக் கேட்காமல், காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். (அப்போது பல யூதர்கள் திருட்டுத்தனமாக தேசத்தைவிட்டு வெளியேறி, அகதிகளாகப் பல நாடுகளுக்குப் போய்க்கொண்டிருந்ததால், சுலபமாகத் தாங்கள் கொல்லும் யூதர்களை அப்படிக் காணாமல் போனவர்களின் பட்டியலில் நாஜிகளால் சேர்க்க முடிந்தது).

ஆனால், எப்போது ஜெர்மனி, போலந்தின்மீது படையெடுத்ததோ (செப்ரெம்பர் 1939), அப்போதிலிருந்து இந்த வழக்கம் அடியோடு மாறிவிட்டது. எப்படியும் ஹிட்லர்தான் ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் ஆளப்போகிறவர் என்கிற தீர்மானத்தில், செய்கிற கொலைகளை பகிரங்கமாகவே செய்யலாம் என்று ஜெர்மனிய காவல்துறை முடிவு செய்துவிட்டது.

இதன்பிறகு அவர்கள் விசாரணைக்கு என்று எந்த யூதரையும் தனியே அழைத்துச் செல்வதை விட்டுவிட்டார்கள். பொழுது விடிந்ததும் நேரே ஏதாவது ஒரு யூதக் காலனிக்குப் போவார்கள். அல்லது யூத தேவாலயங்களுக்குச் செல்வார்கள். கண்ணில் தென்படும் நபர்களிடம், "நீங்கள் யூதர்தானே?" என்று கேட்பார்கள்.

எந்த யூதரும் தன்னை ஒரு யூதரல்லர் என்று சொல்லமாட்டார். உயிரே போனாலும் அவர் வாயில் இருந்து அப்படியொரு வார்த்தை வராது.

ஆகவே, அவர் தலையாட்டுவார். அவ்வளவுதான். அப்படியே போட்டோவுக்கு போஸ் கொடுப்பது போல் நிற்கச் சொல்லிவிட்டு இரண்டடி பின்னால் போய் சுட்டுச் சாய்த்துவிட்டு அடுத்தவரிடம் போய்விடுவார்கள்.

இதில் ஒரு சொல்கூட மிகையே இல்லை. இப்படித்தான் நடந்ததாக அத்தனை மேற்கத்திய சரித்திர ஆசிரியர்களும் வருணித்திருக்கிறார்கள். வீடுகள், தேவாலயங்கள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் என்று எங்கெல்லாம் யூதர்கள் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம்

ஹிட்லரின் போலந்துப் படையெடுப்பு நடந்துகொண்டிருந்த முதல் வாரத்தில் மட்டும் மொத்தம் பத்தாயிரம் யூதர்கள் ஜெர்மனியில் கொல்லப்பட்டார்கள். கொலை செய்யப்பட்ட அத்தனைபேரையும் ஆங்காங்கே சிறுசிறு குன்றுகள் போல் குவித்துவைத்து மொத்தமாக எரித்துவிட்டது காவல் துறை. இதில் சுமார் இரண்டாயிரம் பெண்களும் நானூற்றைம்பது குழந்தைகளும் அடக்கம்.

போலந்தை ஹிட்லர் தன் வசப்படுத்திவிட்ட செய்தி கடைத்த மறு–கணமே மேலும் முந்நூறு யூதர்கள் கொல்லப்பட்டார்கள். நம் ஊரில் ஏதாவது சந்தோஷமான காரியம் நடக்கிறதென்றால் பட்டாசு வெடிப்போம் அல்லவா? அந்த மாதிரி அங்கே மகிழ்ச்சியைக் கொண்டாடுவதென்றால் யூதர்களைக் கொல்லவேண்டும் என்பது ஒரு 'கலாசாரமாக' இருந்தது!

இத்தனைக்கும், உயிர்ப்பிழைப்பதற்காகப் போலந்தின் மேற்கு எல்லையிலிருந்து (மேற்கு போலந்தைத்தான் அப்போது ஹிட்லர் வென்றிருந்தார்) கிழக்கு எல்லைக்கு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிய யூதர்கள் அவர்கள். அவர்கள் ஓடிய பாதை எங்கும் இருந்த கட்டடங்களின் மாடிகளில் காத்திருந்த நாஜிப்படை, கிட்டேநெருங்கும்போது சுட்டு வீழ்த்தினார்கள். போலந்தின் சாலைகளெங்கும் இரத்தக்குளங்கள் ஆயின. வேகத்தடைகள் போல ஆங்காங்கே மனித உடல்கள் சிதறிக்கிடந்தன. நெருங்குவதற்கு பயந்துகொண்டு நாய்களும் நரிகளும் வல்லூறுகளும்கூட அந்தப் பிரதேசத்துக்குள் நுழையவில்லை என்று எழுதுகிறார்கள் பல சரித்திர ஆசிரியர்கள்.

எப்படியாவது சோவியத் யூனியனுக்குள் நுழைந்துவிட வேண்டும் என்பதுதான் அப்போது போலந்துவாழ் யூதர்களுக்கு இருந்த ஒரே இலட்சியம். ஒவ்வொரு அடியாக ரகசியமாக எடுத்துவைத்து அவர்கள் சோவியத் யூனியனை நோக்கித்தான் அப்போது முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஹிட்லர், ரஷ்யாவுக்குள் கால் எடுத்து வைப்பது கஸ்டம் என்பது அவர்களின் நம்பிக்கை. அத்தனை சீக்கிரம் அவரால் ரஷ்யாவின் மீதெல்லாம் படையெடுக்க முடியாது என்று அவர்கள் நினைத்தார்கள். ரஷ்யாவின் காலநிலை, இராணுவப்பலம் உள்ளிட்ட பல காரணங்கள் அதற்கு இருந்தன. ஆனால் போலந்து யூதர்களை ரஷ்யா மனமுவந்து ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குறியாகவே இருந்தது.

சட்டவிரோதமாகவாவது ரஷ்ய எல்லையைத் தாண்டிவிட்டால் பிரச்சினையில்லை. ரஷ்யச் சிறைச் சாலைகளில் எஞ்சிய காலத்தைக் கழிக்கநேர்ந்தாலும் பரவாயில்லை. உயிர் பிழைத்திருந்தால் போதும் என்று நினைத்தார்கள். எல்லையைக் கடக்க சில ஏஜெண்டுகளின் உதவியைக் கோரிவிட்டு வீடுகளுக்குள் பதுங்கி இருந்தார்கள் போலந்து யூதர்கள்.

இதை அறிந்த ஹிட்லரின் படை, உடனடியாக போலந்து முழுவதும் ஆங்காங்கே தற்காலிக சித்திரவதைக்கூடங்களை நிறுவி உள்ளே விஷக் கிருமிகளையும்



விஷ வாயுக்களையும் பரப்பி வைத்துவிட்டு, அனைத்து யூதக் குடியிருப்புக்களின் மீதும் தாக்குதலைத் தொடங்கியது. உயிர்தப்பி ஓடிவருவோர் அனைவரையும் காத்திருக்கும் ஹிட்லரின் படையினர் கைது செய்து உடனடியாக அந்தத் தற்காலிக கூடங்களுக்குள் அடைத்துவிடுவார்கள்.

நூற்றுக்கணக்கானோர் இப்படி பலியாகியிருக்கின்றார்கள். சில ஆயிரம் பேர் வாழ்நாள் முழுவதும் தீராத சரும, இருதய, நுரையீரல் நோயாளிகளாக மாறி அவஸ்தைகளுடன் வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள்.

ஏப்ரல் 1940 இல் ஹிட்லர், டென்மார்க்கையும் நோர்வேயையும் கைப்பற்றினார். சரியாக ஒரு வருடத்தில் பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்தை வசப்படுத்தினார். அதற்கடுத்த வருடம் கிரீஸையும் யூகோஸ்லாவியாவையும் விழுங்கினார்.

இப்படிக் கைப்பற்றப்பட்ட தேசங்களில் எல்லாம் ஹிட்லரின் பிரதிநிதிகள் உடனடியாக ஆளத் தொடங்கினார்கள். ஆட்சிக்குவந்த முதல் வேலையாக அவர்கள் செய்தது, அந்தந்த தேசத்தில் இருந்த யூதர்கள் அத்தனைபேரையும் அள்ளிக்கொண்டுபோய் சித்திரவதைக் கூடங்களில் கொட்டுவது!

சித்திரவதைக்கூடங்களில், தமது 'முறை'க்காகக் காத்திருக்கும் யூதர்களின் பாடுதான் மிகவும் பரிதாபம்.

(தொடரும்...)

> “என்னை ஏன் கொல்கிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்” என்று இப்படி இறப்பதற்கு முன் பெர்லின் நகரத்து யூதர் ஒருவர் கேட்டதற்கு, என்னை ஏன் கொல்கிறீர்கள் எனக் கேட்டதற்கு ஹிட்லரின் காவலர் ஒருவர் சொன்ன பதில்:
> “நீங்கள் கொலைக் குற்றவாளியாக இருந்தால்கூட மன்னித்துவிடலாம். யூதராக அல்லவா இருக்கிறீர்கள். வேறுவழியே இல்லை. இறந்துவிடுங்கள்.

# சொர்க்கம் உன் கையில்...

ஒரு மருத்துவரின் மனைவி இறந்துவிட்டாள். அவள் எழுதி வைத்த கடிதம்.

என் கணவர் முன்புபோல் என்னுடன் கலகலப்பாக பேசுவதில்லை. எப்பொழுது பார்த்தாலும் புத்தகமும் கையுமாக உட்கார்ந்துள்ளார். நான் அவர் அருகில் சென்றுநின்றால்கூட அவருக்குத் தெரிவதில்லை. அவருக்கு என்னைப் பற்றிய,எண்ணமே கிடையாது. அவர் என்னைப் புறக்கணித்துவிட்டார். ஆதலில் நான் இனிமேல் உயிர்வாழ்வதில் பயனில்லை. அந்த மருத்துவர் ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். இதனை அவர் தம்முடைய மனைவியிடம் கூறவில்லை. பின்பு கூறிக்கொள்ளலாம் என்றிருந்தார். அதனை தவறாக விளங்கிக்கொண்டு அவருடைய மனைவி தற்கொலை செய்துகொண்டார்.

இது என்ன விபரீதம் என்று எண்ணுவீர்கள். விபரீதம் என்ன? பெண்களின் இயல்பே இவ்வாறுதான் இருக்கிறது. எனவேதான் ஆங்கிலக் கவிஞன் பைரனும், "பேரரசர்கள்கூட அவர்களின் மனைவிமார்களுக்கு கணவர்களாகத்தான் தோற்றமளிக்கிறார்கள்" என்று கூறினான். மற்றோர் அறிஞனோ, "பெண்கள் புரட்சிகளையும், புரட்சி வீரர்களையும் வெறுக்கிறார்கள். அமைதியாகவும் நல்ல உத்தியோகத்தில் உள்ளவராகவும், உணவருந்தத் தாமதமின்றி வரக்கூடிய கணவர்களையே விரும்புகிறார்கள்" என்று கூறுகிறார்.

இயேசுநாதரும், "பெண்களே! நான் உங்களை வைத்துக்கொண்டு என்ன செய்யவேண்டியுள்ளது?" என்று கேட்டார். எனவேதான் நெப்போலியனும் "பெண்கள் சோம்பேறிகளின் விளையாட்டுக் கருவிகளாகவும் இருக்கின்றனர்" என்று சொன்னார்.

இந்த உண்மையை உணராததன் காரணமாகத்தான் சோக்கிரடீஸ், ஆபிரகாம் லிங்கன், மூன்றாம் நெப்போலியன் அகஸ்டஸ்சீசர், சஅதி ஆகியோரின் இல்லற வாழ்க்கை துன்ப வாழ்க்கை ஆகியதோ என்னவோ! அதற்காக அவர்கள் தங்களின் மனைவிமார்களுடனேயே அல்லும் பகலும் இருந்து பேசிக்கொண்டிருக்கவில்லை என்று அவர்களைக் குறைகூற முடியுமா? மனைவிமார்கள் விரும்புவது தவறு என்றே நான் கூறுவேன்.

உலக வாழ்வு என்றால் காதல் வாழ்வு என்று மட்டும்தானா பொருள்படும் என்று கேட்கிறேன். மேலே குறிப்பிடப்பட்ட பெரியவர்கள் உயரிய குறிக்கோளை மனதிற்கொண்டு, உலகத்தாரின் நன்மைக்காக பாடுபட்ட பொழுது தாங்கள் தங்கள் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்துவிட்டனர் என்று மட்டும் கூறுவேன். அவர்களுடைய மனைவிமார்களே அவர்களின் பெருமை உணராது அவர்களை உயிரோடுவைத்து சித்திரவதை செய்ய தொடங்கிவிட்டார்.

"ஒரு பெண்ணின் நாக்குத்தான் அவளுடைய வாள். அதனைத் அவள் துருப்பிடிக்க அனுமதிப்பதே இல்லை" என்று பிரெஞ்சு மொழியிலுள்ள பழமொழிக்குச் சிறந்த மேற்கோளாக விளங்கியவள். சோக்கிரடீஸின் மனைவி சாந்திப் தான்! அவளுடைய வசைச் சொற்களுக்கு அஞ்சி சோக்கிரடீஸ் எதென்ஸிலுள்ள மரங்களின் கீழே அடைக்கலம்புகுந்து அங்கு இளைஞர்களுக்கு அறிவுரை பகிர்ந்துவந்தார்.

ஒரு தடவை அவர் தன்னுடைய கணவரை வாயில் வந்தபடி திட்டினாள். அவளுடைய திட்டுகளுக்கு அவர் யாதொரும் மறுமொழியும் கூறாது வெளியே வந்து தம்முடைய வீட்டுவாசலில் அமர்ந்து இருந்தார். எனினும் அவள் அவரை விடவில்லை. ஓடோடிச் சென்று ஒரு குடத்தில் நீரை எடுத்து மாடிக்குச் சென்று அங்கிருந்து கீழேயுள்ள சோக்கிரடீஸின் தலையில் கொட்டினாள். அதைப் பார்த்த சோக்கிரடீஸ் அமைதியாக "சற்றுநேரத்திற்கு முன் இடிஇடித்தது இப்பொழு மழை பெய்கிறது. இது இயற்கைதானே" என்று கூறினார். சோக்கிரடீஸ் இப்படி சொல்லிவிட்டார், எத்தனை கணவன்மார்களால் இது முடியும்?

எந்த வீட்டில் கோழி கொக்கரிக்கவும், சேவல் கூவாதிருக்கவும் செய்கிறதோ அந்த வீட்டில் இன்பம் இருக்காது. எனும் ஸ்பானிய பழமொழிக்கு இலக்காக இருந்தது ஆபிரகாம் லிங்கனின் இல்லம். எனவே அவர் தம்முடைய மனைவியின் ஏச்சுக்களுக்கு அஞ்ச தம் வீட்டுக்குக்கூட வராது விடுதிகளில் தங்கி, ஊர்சுற்றும் கோர்ட்டுக்களுடன் சுற்றித்திருந்தார் என்று வரலாறு கூறுகின்றது. ரோமானிய பேரரசை ஆண்ட அகஸ்டஸ் சீஸர் தம்முடைய இரண்டாவது மனைவியை ஸ்கிரிபோனியாவை அடக்கியாள இயலாது. அவளை மணவிடுதலையே - விவாகரத்து செய்துவிட்டார்.



சொல்லின் செல்வர்
இரா.செல்வவழிவேல்

(தொடரும்...)




# மதத்தின் பெயரால்...

**ஆன்மீகம்** என்பது மனித வாழ்க்கையை வழிப்படுத்துவதற்காகவே என்று தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் தற்போதைய காலத்தில் மதங்களினால் ஏற்படும் பிரச்சினைகள் பெரியளவானவையாக இருக்கின்றன. கடந்த வாரத்தில் மட்டக்களப்பில் ஒரு கிறிஸ்தவ வழிபாட்டிடம் ஒன்று சேதமாக்கப்பட்டதை அடுத்து பெரும் குழப்பம் ஒன்று உருவாகியது.

இந்த குழப்பமும் மதங்களின் செயற்பாடுகள், அதனால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள், எனப் பல விடயங்கள் குறித்து இந்த வாரத்தில் ஆராயலாம்.

மட்டக்களப்பின் வாழைச்சேனை-கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் கண்ணகிபுரம் கிராமசேவகர் பகுதியில் பதிவுசெய்யப்படாமல் இயங்கும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களை மூடுமாறு அப்பகுதி மக்கள் விடுத்தவேண்டுகோளையடுத்து பதிவுசெய்யப்படாமல் இருந்த இரண்டு வழிபாட்டிடங்களை மூடிவிடுமாறு வாழைச்சேனை பொலிஸார் 09.02.2014 அன்று உத்தரவிட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பெரேக் கமிஷனில் கடமையாற்றும் பாஸ்டர் வை.ஜோசப்பிடம் வினவியபோது, இச்சபையை நடாத்துவதற்கு இலங்கை பாராளுமன்ற சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இங்கு நாங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைகளைச் செய்துவருகின்றோம். நாங்கள் இங்கு சாராயம் விற்கவில்லை. எந்தவிதமான கெட்ட நடவடிக்கைகளும் நடாத்தவில்லை, பிரிந்துபோய் இருக்கின்ற மக்களுக்கு நன்மைகளையே செய்கின்றோம் என்றும் தெரிவித்திருந்தார்.

வாழைச்சேனை பெந்தேகொஸ்த சபையில் இருந்து பிரிந்துவந்த ஒரு குடும்பமும், அவர்களுடன் சேர்ந்துவந்த மற்றையவர்களுமாக சுமார் எண்பது பேர் மட்டில் கணினி பயிற்சி நிலையத்திற்கு என்று கட்டப்பட்ட இடத்தில் ஆராதனையில் ஈடுபட்டுவருவதாகவும் இவ் இரண்டு இடங்களும் சட்டப்படி பதிவுசெய்யப்படாமல் இயங்கும் வணக்கஸ்தலங்களாகும். இதனை உடனடியாக நிறுத்துமாறும் மக்கள் கோஷங்களை எழுப்பினர்.

இவ் இரண்டு இடங்களுக்கும் முன்னால் ஒன்றுகூடிய அப்பகுதியைச் சேர்ந்த ஆண், பெண்கள் அனைவரும் இவர்கள் எங்கள் அமைதியைக் குலைப்பதாகவும், மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், சைவப் பிசாசுகள் ஒழிக என்று கத்துவதால் எங்களுக்கு பெரும் சிரமமாக இருப்பதாகவும் பொலிஸார் முன்னிலையில் முறையிட்டனர்.

இந்த இடத்திற்கு வருகைதந்த வாழைச்சேனை பொலிஸார், தங்களுக்கு இப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வணக்கஸ் தலங்கள் தொடர்பாக வாழைச்சேனை பிரதேச செயலாளர் எழுத்துமூலம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அதனால் இவ் இரண்டு வணக்கஸ்தலங்களும் பதிவு செய்யப்படாததால் இன்றிலிருந்து இவ் விடத்தில் வழிபாட்டு நடவடிக்கைகள் செய்யவேண்டாம் என்று கூறியதுடன் கூடியிருந்த மக்களையும் கலைந்து செல்லுமாறு கூறியதற்கிணங்க, மக்களும் கலைந்துசென்றனர்.

இங்குவந்த இந்து மக்கள் எங்கள் உடைமைகள் எதற்கும் சேதம் விளைவிற்காமல் முறையாக வந்து விடயத்தைச் சொன்னதற்கு அவர்களுக்குத்தான் நன்றி தெரிவிப்பதாக வாழைச்சேனை பெரேக் கமிஷனில் கடமையாற்றும் பாஸ்டர் வை.ஜோசப் தெரிவித்தார்.

இதேநேரம், 12.02.2014 அன்று மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் அனுமதி பெறப்படாமல் தனியார் காணி ஒன்றில் புதிதாக அமைக்கப்பட்ட கிருஸ்தவச் சபைக்கு சொந்தமான கட்டடத்தை அப்பிரதேச மக்கள் உடைத்து சேதமாக்கினர். இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு மறுநாள் பரஸ்பர வேண்டுகோள்களின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் அன்றைய தினம் மாலை 6.00 மணி அளவில் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அவ்விடத்திற்குச் சென்ற ஏறாவூர் பொலிசாருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து, குறித்த பிரதேசத்தில் பதட்டம் நிலவியதால் மேற்படி நிலைமைகளை சமாளிப்பதற்காக குறித்த இடத்திற்கு வருகைதந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோ.யோகேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சேயோன், முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சி.சந்திரகாந்தன் ஆகியோர் பொது மக்களுடன் பேசி நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்ததுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர்.





> **காலத்தின் தேவைகருதி தேவாலயங்கள், ஆலயங்கள், பள்ளிவாயல்கள், விகாரைகள் சமூகப் பணிகளுக்காகவும் உதவ முன்வருவதன்மூலமே இவற்றுக்கெல்லாம் தீர்வு கிடைக்கும்.**
>
> **எதிர்காலத்தில் மத நிறுவனங்கள் சமாதானத்தினையும், ஆன்மீகத்தினையும் வலியுறுத்துபவைகளாக மாறவேண்டுமென்றும் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழா மற்றும் விஷேட நிகழ்வுகளின்போது ஆடம்பரங்களுக்கான செலவீனங்களை குறைக்கும் வண்ணம் செயற்பட்டு, மதங்கள் கூறும் உள்ளார்ந்த அர்த்தத்தினை செயற்படுத்தும் முகமாக வசதிகுறைந்த ஏழை மாணவர்களுக்கான கல்வித் தேவைகளை நிறைவுசெய்ய முன் வருதல் நல்லதாகும்.**

சந்திவெளி பிரதேசத்தில் அனுமதி பெறப்படாமல் தனியார் காணியொன்றில் புதிதாக் கிறிஸ்தவ வழிபாடுகளில் ஈடுபட்டமையினாலேயே இப்பிரதேசத்தில பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல் கடந்த வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவு, சுங்காங்கேணி கிராமத்தில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலையில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுகொண்டிருந்த அதேவேளை, சுங்காங்கேணி மெதடிஸ் திருச்சபையில் ஒலிபெருக்கியில் ஜெப வழிபாடும் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இந்நிலையில், மெதடிஸ் திருச்சபையில் ஒலித்துகொண்டிருந்த ஒலிபெருக்கியை நிறுத்துங்கள் என இந்து ஆலயத்தில் இருந்து சென்றவர்கள் கூறியபோது ஏற்பட்ட கைகலப்பில் கிருஸ்தவர்கள் நான்குபேரும் இந்துக்கள் இருவருமாக மொத்தம் ஆறுபேர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஜயவிரவிடம் வினவியபோது, கிறிஸ்தவ ஆலயம் பதிவுசெய்யப்படாமல் இந்து ஆலயத்திற்கு அருகில் இயங்கிவந்ததால் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவித்ததுடன், கிறிஸ்தவ திருச்சபையில் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதி பெறப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

எல்லாம் அடி, உடையாக இருக்கின்ற ஒரு மதக் கலாசாரம் மிகவும் கொடுமையானதாகவே இருக்கிறது. இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபையினால் பழமை வாய்ந்த கல்முனை 'தரவைப் பிள்ளையார் கோவில் வீதி'யின் பெயரை 'கடற்கரை பள்ளி வீதி' எனப்பெயர் மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து கல்முனை தமிழ் சிவில் சமூகத்தினால் 2014.02.10 அமைதிப் பேரணி ஒன்று கல்முனை நகரில் நடைபெற்றது.

பல நூறு ஆண்டு கால வரலாற்றை கொண்ட கல்முனை தரவை பிள்ளையார் ஆலயத்துக்கு எதிரில் செல்லும் வீதியினை தரவைப் பிள்ளையார் ஆலய வீதி என்று காலகாலமாக இருந்துவருகின்றது. இதனை இவ்வீதியின் பெயரினை கடற்கரை பள்ளி வாசல் வீதி என்று மாற்ற முற்பட்டு கல்முனை மாநகர சபையிலும் விவாதத்துக்கு எடுத்து வாக்கெடுப்பும் நடத்தப்பட்டுவிட்டது.

இச்செயற்பாட்டின் மூலம் கல்முனைத் தமிழர்கள் தமது இருப்பிடங்களையும் காணிகளையும் பாதுகாத்துக்கொள்ள தமிழர்கள் தனியான பிரதேச சபை கோருவதில் எவ்வித தவறுமில்லை எனப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கல்முனை இந்து ஆலய பிரதம குருக்களும், கல்முனை விகாராதிபதியும், கிருஸ்தவ பாதிரியார் ஆகியோரினால் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மகஜர்கள் மாநகர முதல்வர், மாநகர

**– பிரகஸ்பதி –**

ஆணையாளர், கல்முனை முஸ்லிம் பிரதேச செயலாளர், கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் கையளிக்கப்பட இருந்தது. மாநகர மேஜர் இல்லாததினால் அவருக்கான பிரதியினை மாநகர ஆணையாளரிடமும், கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் இல்லாததினால் உபசெயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இவ் எதிர்ப்பு பேரணி பல தடங்கல்களுக்கு மத்தியில் செய்து முடித்துள்ளதாக ஆர்ப்பாட்ட ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மதத்தினை ஆதிக்கத்தின் பலகையாகப் பயன்படுத்த முனைகின்ற செயற்பாடுகளும் இல்லாமலில்லை. இவையெல்லாம் ஒன்றுமில்லை என்ற பக்குவம் ஏற்படுகின்றபோதே எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வு கிடைக்கும் என்பது மட்டுமே நிச்சயமான விடயமாகும்.

காலத்தின் தேவைகருதி தேவாலயங்கள், ஆலயங்கள், பள்ளிவாயல்கள், விகாரைகள் சமூகப் பணிகளுக்காகவும் உதவ முன் வருவதன்மூலமே இவற்றுக்கெல்லாம் தீர்வு கிடைக்கும். இதுவே காலத்தின் தேவையும் கட்டாயமுமாக இருக்கின்றது என்பது புத்திஜீவிகளுக்கும் அனுபவத்தின்மூலம் உயர்ந்தவர்களுக்கும் தெரியும்.

மதஸ்தாபனங்கள், நல்ல விழுமியங்களையும், இறை சிந்தையுள்ள சமூகத்தினையும் வளர்ப்பதில் மட்டும் நின்றுவிடாமல் சமூகம்சார்ந்த சிந்தனையுடனான சில வேலைத்திட்டங்களையும் ஆற்ற முன்வரவேண்டும்.

எல்லோரும் ஆசீர்வாதம் பெற செல்லவேண்டிய பழமைவாய்ந்த மத வழிபாட்டுத்தலங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகம் மற்றும் நீதி துறையிடமும் நீதி கேட்டுநிற்கவேண்டிய நிலை கவலைக்குரிய விடயமாகும்.

அந்தவகையில் எதிர்காலத்தில் மத நிறுவனங்கள் சமாதானத்தினையும், ஆன்மீகத்தினையும் வலியுறுத்துபவைகளாக மாறவேண்டுமென்றும் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழா மற்றும் விஷேட நிகழ்வுகளின் போது ஆடம்பரங்களுக்கான செலவீனங்களை குறைக்கும் வண்ணம் செயற்பட்டு, மதங்கள் கூறும் உள்ளார்ந்த அர்த்தத்தினை செயற்படுத்துமுகமாக வசதிகுறைந்த ஏழை மாணவர்களுக்கான கல்வித் தேவைகளை நிறைவுசெய்ய முன்வருதல் நல்லதாகும்.


மதங்களின் பெயரால் நடைபெறும் பல்வேறு பிரச்சினைகளுக்கு காலங்காலமாக வழிபாடுகளைப் பாரம்பரியமாகக் கொண்டவர்களால் ஏற்படுவதில்லை என்பதும் புதிதாக கிறிஸ்தவ மதம் சார்ந்து உருவாகும் பிரிவினர்களாலேயே உருவாகிறது என்பதும் தெளிவாகவே தெரிகிறது.

எந்த ஒரு மதமும் வன்முறையைச் சொல்லிக் கொடுப்பதில்லை. அதனை விடுத்து மக்களை வழிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஆதிக்கத்துக்கும், பகட்டுக்கும், அவமதிப்பும் எவற்றையுமே செய்து கொடுக்கப்போவதில்லை.

இவ்வாறு வன்முறைகளும், வீண் பிரச்சினைகளும் மக்கள் மத்தியில் சமாதானத்தினைத் தராது என்பதனை உணரும்வரையில், மக்கள் சேவகர்களாக, சமூகத்திற்காக ஒப்படைக்கப்பட்டவர்களாக, எந்தவித பழிச்சொல்லையும் சுமக்காதவர்களாக மதம்பரப்பும் நோக்கில் செயற்படுபவர்கள் இருக்கமாட்டார்கள்.

வடக்குக் கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, முடிவடைந்துவிட்ட தற்போதைய காலத்திலும் சரி, தமிழ் மக்களின் வறுமையைப் பயன்படுத்தி மிகவும் வேகமாகப் பரப்பப்பட்டு வருவது கிறிஸ்தவ மதமாகும். இதனால் கலாசாரப் பிரச்சினைகளும் மோசமாகத் தலைதூக்கிவருகின்றன. இவற்றுக்கும் தீர்வு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட மத அமைப்புகள் தவிர ஏனையவை தடைசெய்யப்படுவதாகும்.

**குறிப்பு:-** இதில், கத்தோலிக்க, மெதடிஸ்தம் உள்ளிட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட வரையறைகளுக்குள் இயங்கும் சபைகளை நான் குறிப்பிடவில்லை.



## இந்திய தேர்தல்

# நடக்கப் போவது என்ன?

### இந்திய நாடாளுமன்றம்

இந்திய நாடாளுமன்றம் அல்லது இந்தியப் பாராளுமன்றம், இரு சட்ட அவைகளை கொண்டுள்ளது. அவை மாநிலங்களவை (Rajya Sabha) மற்றும் மக்களவை (Lok Sabha) ஆகும். இவை இரண்டும் இந்தியக் கட்டமைப்பு சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டவை. அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு, அதிலும் குறிப்பாக மக்களவைக்கு, கடமையுற்றது.

மாநிலங்களவையின் 233 உறுப்பினர்கள் மாநில-பிரதேச சட்டப்பேரவைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலும் 12 உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஆறு வருடங்களுக்கு பணிபுரிவார்கள். மூன்றில் ஒரு பகுதி மாநிலங்களவை உறுப்பினர்கள் இரு வருடங்களுக்கு ஒரு முறை தேர்தலுக்கு செல்ல வேண்டியிருக்கும். மக்களவை, மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் 542 உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்றது. மக்களவைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும்.

செயல் அதிகாரம் பிரதமரிடமும் அவரின் தலைமையின்கீழ் இயங்கும் அமைச்சரவையிடமும் இருக்கின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள கட்சி அல்லது கூட்டணியின் தலைவரை குடியரசுத் தலைவர் பிரதமராக நியமிப்பார். பிரதமரின் ஆலோசனைக்கேற்ப பிற அமைச்சர்களை குடியரசுத் தலைவர் அங்கீகரிப்பார்.

### இந்திய நாடாளுமன்ற மக்களவை

மக்களவை அல்லது லோக் சபா இந்திய பாராளுமன்றத்தின்கீழ் அவை ஆகும். இந்த அவையின் உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தலின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 552 ஒன்றியப் பிரதேச தொகுதிகளையும், நியமன உறுப்பினர்களான ஆங்கிலோ இந்தியர் இருவரையும் உள்ளடக்கிய எண்ணிக்கை ஆகும். இது இந்திய அரசியலமைப்பு சட்டவிதி 81 இல் கூறப்படுள்ளதின்படி வரையறுக்கப்பட்டதாகும்.

ஆங்கிலோ இந்தியரை பொறுத்தவரை இதுவே இந்த அவையின் அதிகபட்ச அமர்வு எண்ணிக்கையாகும். இருப்பினும் குடியரசுத் தலைவர் இந்த எண்ணிக்கை குறித்து மறுதலிக்கும் பட்சத்தில் இந்த எண்ணிக்கையை கூட்டவோ, குறைக்கவோ அரசியல் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் இந்த அவை நாட்டின் 15ஆவது மக்களவையை துவக்கியுள்ளது. இவர்கள் மக்களின் நேரடியான சார்பாளர்கள் ஆவர். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். அதன்பிறகு இதன் ஆயுள் மற்றும் பொறுப்புகள் தானாகவே செயலிழந்துவிடும். அவசரநிலைப் பிரகடன காலத்தின் இதன் செயற்பாடுகளை குறிப்பிட்ட காலம்வரை முடக்கப்படலாம் அல்லது ஒரு வருடம் காலம்வரை நீட்டித்து முடக்கலாம். மக்களவையை தலைமையேற்று வழிநடத்துபவராக மக்களவைத் தலைவர் செயற்படுகின்றார். இவரின் வழிகாட்டுதலின்படி மக்களவை உறுப்பினர்கள் மக்களவையில் செயற்படுகின்றனர்.

தற்பொழுது 15ஆவது மக்களவை நடைபெறுகின்றது. மக்களவைத் தொகுதிக்கான எல்லைகள் மற்றும் சீரமைவுகள் ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போதும் அல்லது தேர்தல் ஆணையத் தி-ணராலும் மேற்கொள்ளப்படும். இருப்பினும் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை இந்த சீரமைவுகள் பாதிக்காது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதின்படி அந்த மக்களவையின் ஆயுள் முழுவதும் தொடர்வார்.

### இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை

மாநிலங்களவை அல்லது 'இராஜ்ஜிய சபா' இந்திய பாராளுமன்றத்தின் 250 உறுப்பினர்கள் உள்ளிட மேலவை ஆகும். இவர்களில் 12 பேர் இந்திய குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறர்கள். இவர்கள் கலை, இலக்கியம், அறிவியல் போன்ற அவரவர்களுக்குரிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களாக இருப்பர். இந்த 12 பேரைத் தவிர்ந்த மற்றவர் மாநில சட்டசபை உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்படுவர். இதன் கட்டமைவு இந்திய அரசியலமைப்பு சட்டவிதி 81இல் கூறப்பட்டுள்ளதின்படி அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். மேல் சபையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூர்த்தியாகும். குடியரசுத் துணைத் தலைவர் இந்த அவையின் தலைவராக இருப்பார்.

மாநிலங்களவை கூட்டங்கள், மக்களவை கூட்டங்களைப்போல் அல்லாமல் தொடர்ச்சியாக நடைபெறுவதாகும். சபை கலைப்பிற்கு இது பொருந்தாது. இதன் அதிகாரங்கள் மக்களவைக்கு ஈடானதாகவும் மக்களவைக்கென வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை குறைக்காதனவாகவும் கருதப்படுகின்றது. இரு அவைகளினாலும் எதிரொலிக்கும் சர்ச்சைகளை இரு அவை-களின் கூட்டு கூட்ட அமர்வின்மூலம் தீர்வு காணப்படுகின்றது. இவ்வாறு நடைபெறும் கூட்டு கூட்டங்களில் மக்களவை மாநிலங்களவையைவிட இரு மடங்கு உறுப்பினர்களைக்கொண்டதாக இருப்பினும், மாநிலங்களவை உண்மையான நடப்பிலுள்ள (defacto) தடை (வீட்டோ) அதிகாரங்களைக் கொண்டதாக கூட்டு கூட்டங்களில் கருதப்படுகின்றது.

### விசித்திரமான இந்திய ஜனநாயகம்

உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவின் மக்களாட்சியைக் கொண்டாடுவதாக அடிக்கடி சொல்லப்படுகிறதே, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்திய நாடு என்று பெருமிதம் கொள்கின்றார்களே?

**தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் எவரும் பெற்ற வெற்றிகள் அவர்களுக்கானவையாக இருப்பதில்லை. ஆளும் கட்சியின்மீது கொண்ட அதிருப்தி. அதாவது எதிர்மறை வாக்குகள் எதிர்க்கட்சிக்கு சாதகமாக அமைவதால் மட்டுமே ஆட்சி அதிகாரம் கைமாறுகிறதே தவிர, வேறு எவ்விதமான மன மாற்றங்களோ அல்லது ஆட்சியில் மிகப்பெரிய மாற்றங்களோ இருப்பதில்லை.**

இந்தப் பெருமிதம் பன்னாட்டு அரங்குகளில் அவர்கள் போட்டிருக்கும் வெளிவேஷமா?

அரசாங்க வேலைக்கு விண்ணப்பிக்கும் போது இந்திய சட்டப்படி அறிவிக்கப்பட்டிருக்கும் எவ்விதமான குற்றச்சாட்டுகளும் இருக்கக் கூடாது என்கிற விதி இருக்கிறது படிவங்களில். ஆனால் பொது மக்களுக்கு அந்த விதிகளை உருவாக்கும் நாடாளுமன்றத்தில் இருப்பவர்களின் தகுதி என்னவாக இருக்கிறது?

543 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 153 பேர் சட்டப்படி குற்றவாளிகள். Association of democratic reforms (ADR) அமைப்பு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குற்றப்பட்டியலை வெளியிட்டு இருக்கிறது. 2002இல் இந்திய உச்ச நீதிமன்றம் தேர்தலில் நிற்பவர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் கல்வி தகுதி, பொருளாதர நிலை மற்றும் சட்டப்படி அவர்கள்மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருந்தால் அதைப் பற்றிய விவரங்களைக் விண்ணப்பத்தில் பதிவு செய்தாகவேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்திய பிறகும் இந்திய நாடாளுமன்றம் மாநில சட்டமன்றங்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவே இருக்கிறது.

2 ஜி, 3 ஜி, இஸ்ரோ என்று என்னவெல்லாமோ செய்திகள் வருகின்றன. கண் துடைப்பு கைது காட்சிகளுடன் முடிந்துவிடுகின்றன. ஊழல் என்பதும் அதில் சொல்லப்படும் தொகையும் ஓட்டுப்போடும் மக்களின் கற்பனைக்கு எட்டாத எண்ணாக இருப்பதும் ஒன்றை மிஞ்சும் வகையில் இன்னொரு ஊழல், அதற்குப் போட்டியாக இன்னொரு ஊழல்... இப்படியாக வந்து கொண்டே இருப்பதால் பொதுமக்களுக்கு அரசியல் என்றால் ஊழல் அதில் ஓர் அங்கம் என்ற மனநிலை உருவாகிவிட்டது.

இங்கே தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் எவரும் பெற்ற வெற்றிகள் அவர்களுக்கானவையாக இருப்பதில்லை. ஆளும் கட்சியின் மீதுகொண்ட அதிருப்தி. அதாவது எதிர்மறை வாக்குகள் எதிர்க்கட்சிக்கு சாதகமாக அமைவதால் மட்டுமே ஆட்சி அதிகாரம் கைமாறுகிறதே தவிர, வேறு எவ்விதமான மன மாற்றங்களோ அல்லது ஆட்சியில் மிகப்பெரிய மாற்றங்களோ இருப்பதில்லை.

இரண்டு: திருடன், அல்லது கூட்டமாக திருடர்களும், கொலைகாரர்களும். இவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று வருகிற போது அந்தக் காலகட்டத்தில் இவனைவிட அவன் செய்தது அவ்வளவு பெரிய குற்றமோ ஊழலோ அல்ல என்கிற எண்ணம், மக்களின் ஓட்டுப்போடும் மனப்பான்மையில் இருக்கிறது. அரசியல் என்பது ஆள்பலம், ரவுடியிசம், பணபலம், பணபலத்திற்காக எதையும் விலையாகக் கொடுக்கத் துணியும் தலைவர்களை நாம் உருவாக்கிவிட்டோமா? என்ற அச்சம் சமூக அக்கறைக் கொண்டவர்கள் நடுவில் ஏற்பட்டிருப்பதும் எதுவும் செய்ய முடியாத ஒரு கையறுநிலையில் விரக்தி அடைந்திருப்பதும் தெரிகிறது.

இக்கேள்விகளின் ஊடாகவே இந்திய தேர்தல் முறை குறித்து யோசிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இந்திய தேர்தல் முறை அதிக வாக்குப் பெற்றவர் வெற்றி பெற்றவர் என்ற (majoritarian electoral system) முறையைச் சார்ந்தது. இந்தியரை ஆண்ட ஆங்கிலேயரின் தேர்தல் முறையை அவர்களும் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள் என்றுதான் சொல்லலாம். இந்திய சட்ட வரைவு குறித்த விவாதங்கள் நடந்தபோது இத்தேர்தல் முறை குறித்த விவாதங்களும் நடந்தன. ஆனால் இன்றைய

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

தேர்தல் முறைக்கு எதிராக விவாதம் செய்தவர்கள் பெரும்பாலும் இஸ்லாமியர்களாக இருந்ததாலோ என்னவோ விவாதம் திசை மாறிப்போனது. உள்நோக்கம் இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் மிகக் கடுமையாக மாற்று யோசனைகள் முறியடிக்கப்பட்டன. மேலும் வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி உறுப்பினர்களைத் தேர்வுசெய்யும் proportionate electoral system அப்போது 15 வீதம் மட்டுமே படித்தவர்கள் வாழ்ந்த இந்திய சமூக வாக்களர்களுக்கு ஏற்றதல்ல என்று முடிவு செய்யப்பட்டது.


### இந்திய மக்களாட்சியின் சாயம் வெளுத்துப் போகும்

அதிக வாக்குகள் பெற்றவரே வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்வது சரிதானே என்று மேம்போக்காக வெற்றி அல்லது தோல்வி குறித்த கருத்துகளைப் புரிந்து கொண்டவர்களுக்கு இந்தியாவின் மக்களாட்சி மகத்துவமானதாகத் தெரியும். தெரிகிறது! ஆனால் இந்த வெற்றி அல்லது தோல்வியின் உள்ளீடுகளைப் பார்த்தால் இந்திய மக்களாட்சியின் சாயம் வெளுத்துப்போகும்.

உதாரணமாக, ஒரு தொகுதியில் ஒரு இலட்சம் வாக்காளர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதிகமாக வாக்குப்பதிவு பெற்ற தொகுதியாக கற்பனை செய்துகொண்டு 70 வீதம் ஓட்டுப்பதிவு என்று கணக்கில் வைத்துக்கொண்டாலும்,

காங்கிரசு + தி.மு.க கூட்டணி – 20,000, பி.ஜே.பி கூட்டணி – 15,000, அ.தி.மு.க. கூட்டணி – 18,000, தே.தி.மு.க. + இதரக்கட்சி –12,000, சுயேட்சை + செல்லாத ஓட்டுகள் – 5,000, மொத்தம் பதிவான ஓட்டுகள் – 70,000.

ஒரு இலட்சம் வாக்குகள் உள்ள தொகுதியில் ஓட்டுப்போடாத 30,000 தவிர்த்து ஓட்டுப்போட்டவர்களில் வெறும் 20,000 பேர் தேர்ந்தெடுத்த வேட்பாளர் மீதி 50,000 வாக்காளர்களின் ஒப்புதலின்றி அந்தத் தொகுதியின் வேட்பாளராக நாடாளுமன்றமோ அல்லது சட்ட சபையோ செல்லுகிறார். இந்த 50000 வாக்காளர்களும் இந்த வெற்றி பெற்றவரை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது அவர் தகுதியானவரல்ல என்று தீர்மானித்தார்கள். பெரும்பான்மையால் தகுதியற்றவராக தீர்மானிக்கப்பட்ட ஒருவர் வெற்றி பெற்று



# அணுசக்தியும் புவி வெப்பமாதலும்

## தீர்வு நோக்கி...

இப்போது சர்வதேச சமூகத்தின் முன்பு இருக்கும் மிகப்பெரிய சவால், புவி வெப்பமடைதல்தான். இந்தச் சவாலை எதிர்கொள்ள ஐ.நாவின் இரு உறுப்பு அமைப்புகள் இணைந்து காலநிலை மாற்ற பன்னாட்டு அரசுக்குழு (Intergovernmental panel on climate change - IPCC) ஒன்றை அமைத்தன. 1988இல் அமைக்கப்பட்ட இந்த குழுவில் உலக நாடுகளின் பிரதிநிதிகள், அறிவியலாளர்கள் இடம்பெற்றார்கள்.

காலநிலை மாற்றம் பற்றி மதிப்பீடு செய்யும் நிறுவனங்களில் முக்கியமான இந்தக் குழுவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்று, ஐ.நா. காலநிலை மாற்ற பணித்திட்ட பேரவையை (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளையும் அறிக்கைகளையும் தயார்செய்வது. ஐ.நா காலநிலை மாற்ற பணித்திட்ட பேரவையின் சார்பாகவே ஜப்பானிலுள்ள கியோட்டோவில் 1997இல் கியோட்டோ உடன்படிக்கை ஏற்பட்டது. முக்கியமாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டை குறைப்பதுதான் இந்த உடன்படிக்கையின் நோக்கம்.

இதனடிப்படையில் 2008 முதல் 2012 வரையிலும், பின்னர் 2013 முதல் 2020 வரை இரண்டு கட்டங்களாக வளர்ந்த நாடுகள் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தன. வளரும் நாடுகளுக்கு காலக்கெடு எதுவும் இல்லையென்றாலும், அவையும் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கியோட்டோ உடன்படிக்கையின்கீழ் வளர்ந்த நாடுகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளில் ஒன்று தூய்மை வளர்ச்சி முறை (clean development mechanism). இந்தச் சலுகையின் கீழ் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளில் பசுங்குடில் வாயு வெளியீட்டை குறைக்கும் திட்டங்களில் முதலீடு செய்யலாம்.

சூரியசக்தி, காற்றுசக்தி போன்றவை அடிப்படையிலான மின்திட்டங்கள் தூய்மை வளர்ச்சி முறையின் கீழ்வரும். ஆரம்பம் முதலே அணுசக்தி தூய்மை வளர்ச்சி முறையின் கீழ்வராது. ஆனால், இப்போது அணுசக்தியையும் அதில் இணைக்கவேண்டும் என்று ஒரு சாரார் கோரிக்கை வைக்கத் துவங்கியிருக்கின்றனர். பிற மாற்றுசக்திகளைவிட அணுசக்தி சூழலுக்கு இசைவானது என்பது அவர்கள் முன் வைக்கும் வாதம். இந்த வாதத்தை வேறொரு சாரார் முற்றிலுமாக நிராகரித்துவருகின்றனர்.

உயிருக்கு உலை வைக்கக்கூடியது என்று கருதப்படும் அணுசக்தி எப்படி சூழலுக்கு இசைவான ஒன்றாக இருக்கமுடியும்? அவர்கள் சொல்லும் காரணங்கள் என்ன? இதற்கு எதிர்த்தரப்பினர் என்ன பதில் சொல்கிறார்கள்?

# செயற்கை கை கண்டுபிடிப்பு!



தொடுதல் உணர்வை செயற்கை கைகள் உணரும் வகையிலான கண்டு பிடிப்பை மேற்கொண்டு ஐரோப்பிய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். இந்த கண்டுபிடிப்பு தொடர்பான ஆய்வுக் கட்டுரை அமெரிக்காவிலிருந்து வெளியாகும் அறிவியல் இதழ் ஒன்றில் வெளி யிடப்பட்டுள்ளது.

இத்தாலி, ஸ்விட்சர்லாந்து, ஜெர் மனி, பிரிட்டன், டென்மார்க் ஆகிய நாடுகளை சேர்ந்த ஆய்வாளர்கள் இணைந்து செயற்கை கைக்கு உணர்ச்சி அளிக்கும் தொழில் நுட்பத்தை கண்டறிந்துள்ளனர்.

செயற்கை கைகளில் பொருத்தப்படும் சென்சர்களுடன் இணைக்கப்பட்டுள்ள எலக்ட்ரோட்கள், துண்டிக்கப்பட்ட கைகளின் முனையில் இருக்கும் நரம்புகளுடன் இணைக்கப்பட்டு உணர்ச்சிகளை உணரச் செய்கின்றன. 'இந்த செயற்கை உணர்ச்சிக் கருவி பொருத்தப் பட்ட கைகளின்மூலம், ஒரு பொருளை எடுக்கும்போது, அது மென்மையாக இருக்கிறதா, கடினமானதாக இருக்கிறதா என்பதை உணரமுடியும். விபத்துகளில் கை, கால்களை இழந்தவர்களுக்கு வரப்பிரசாதமாக இந்த புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.

தற்போது ஆய்வுநிலையில் இருக்கும் இந்த செயற்கை கை தொடர்பான கண்டுபிடிப்பு, பரவலான பயன்பாட்டுக்கு வர இன்னும் சிறிது காலமாகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தீ விபத்து ஒன்றில் தனது கையை இழந்த டென்மார்க்கைச் சேர்ந்த டென்னிஸ் அபோ சோரென்சென் என்பவருக்கு இந்த செயற்கை கையை விஞ்ஞானிகள் பொருத்தி ஆய்வு செய்துவருகின்றனர்.

எட்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நம் மூதாதையர்களின் காலடித் தடம் இங்கிலாந்தின் நோர்போக்கில் உள்ள ஹப்பிஸ் பர்க் கடல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ஐரோப்பிய பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளின் காலடித் தடம் இவை. இதுவரை இந்தப் பகுதியில் விலங்குகளின் எலும்புகளும் கல் ஆயுதங்களும்தான் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. முதன்முறையாக மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரம் தற்போதுதான் கிடைத்துள்ளது.

இப்போது இருக்கும் இங்கிலாந்து பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய கண்டத்துடன் நிலப்பரப்பில் இணைந்து இருந்துள்ளது. அதன்பிறகே கடல் இடையில் புகுந்து இங்கிலாந்தை ஐரோப்பாவில் இருந்து துண்டாக்கி விட்டது. இங்கிலாந்தில் வாழ்ந்த பூர்வக்குடிகள், முகத்துவாரமாக இருந்த இந்தப் பகுதி வழியாக ஐரோப்பிய கண்டத்துக்கு குடிபெயர்ந்திருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஐரோப்பாவில் 6 இலட்சம் ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த ஹோமோ ஹெய்டல் பெர்ஜென்சிஸ் இனத்தவரும் இவர்களும் ஒன்றுதான் என்கிறார்கள் சில ஆராய்ச்சியாளர்கள்.

### விலங்குகளுடன் விலங்காக...

நதிக்கரையோரம் காட்டுப் பகுதி களில் விலங்கோடு விலங்காக ஹோமோ ஆன்டஸர் இனம் வாழ்ந்திருக்கிறது. குதிரை, யானை, மான், காட்டெருமை, நீர்யானை, காண்டா மிருகம், எலி மற்றும் சில வித்தியாசமான விலங்குகளுடன் வாழ்ந்திருக்கிறான் ஆதி மனிதன். அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ள ஆதாரங்கள்மூலம் இது தெரிய வந்துள்ளது.

மம்மத் எனப்படும் மெகாசைஸ் யானைகள், குதிரைகளின் எலும்புகள் இங்கு கிடைத்துள்ளன. கல் ஆயுதங்கள் மற்றும் கூர்மையான மரக்குச்சிகள்மூலம் விலங்குகளை வேட்டையாடி பசியைப் போக்கி



# மறைந்திருந்த மனிதச் சுவடு

மொத்தம் 50 காலடித் தடங்கள். 2 ஆண்கள், 2 பெண்கள், 3 அல்லது 4 குழந்தைகளின் காலடித் தடங்கள் அவை. கடல் நீர் பின்வாங்கியதால், இந்தக் காலடித்தடங்கள் வெளியே தெரியவந்துள்ளன. இவற்றை பிரிட்டன் அருங்காட்சியக ஆய்வாளர்கள் முப்பரிமாண (3டி) படங்களாக ஆவணப்படுத்தி உள்ளனர்.

"இந்த ஒளிப்படங்களை மின்னஞ்சலில் பார்த்ததுமே சிலிர்த்துப் போய்விட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. ஐரோப்பிய கண்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காலடித் தடங்களிலேயே இவைதான் மிகப்பழமையானவை.

இவர்கள் 8 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஹோமோ ஆன்டஸர் இனத்தை சேர்ந்தவர்கள். 6 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த இனம் அழிந்துவிட்டது" என்கிறார் பிரிட்டன் அருங்காட்சியக ஆராய்சியாளர் . ஆஸ்டன்.

### ஹோமோ ஆன்டஸர்

குரங்கில் இருந்து மனிதன் உருவானபோது, வாழ்ந்த இனம் இது. ஏறக்குறைய 12 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உயரம் 5.5 அடி முதல் 6 அடி வரை. எடை 90 கிலோ வரை. இதெல்லாம் நம்மை போன்றுதான். ஆனால் மூளை-தான் சற்று சிறியதாக இருந்திருக்கிறது. நமக்கு சராசரியாக 1,350 கியூபிக் செ.மீ.

ஆனால் ஹோமோ ஆன்டஸர் மக்களுக்கு 1000 முதல் 1150 கியூபிக் செ.மீ. வரைதான் இருந்திருக்கிறது.

நம்மை போலவே வலது கைப் பழக்கம். இதுதான் மனிதக் குரங்கில் இருந்து இவர்களை வித்தியாசப்படுத்தி காட்டியிருக்கிறது. சைகை மொழியை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

வாழ்ந்திருக்கிறார்கள். மரம், செடி, கொடிகளின் மிச்சங்கள், கிழங்குகள், காய், கனிகள் போன்ற தாவர உணவுப் பழக்கம் இருந்ததை காட்டுகிறது.

### காலடி ஆராய்ச்சி

காலடித் தடத்தை வைத்தே உயரத்தை கணக்கிட்டு விடலாம் என்கிறார்கள் காலடி ஆய்வாளர்கள். பொதுவாக காலடித் தடம் என்பது மனிதனின் உயரத்தில் 15 சதவீத மாக இருக்கும். அதன்படி பார்த்தால், தற்போது கிடைத்துள்ள காலடித் தடங்களின்படி, 3 அடி முதல் 5 அடி 7 அங்குலம் உயரம் கொண்ட ஒரு குடும்பமாக இருக்கலாம் என்கிறார் லிவர்பூல் ஜோன்மூர் பல்கலைக்கழக பேராசிரியர் இஸபெல் டி குரூட். காலடித் தடம்சென்ற வழியை பார்க்கும்போது, அவர்கள் ஐரோப்பிய கண்டத்தை நோக்கி சென்றிருக்கலாம் என்கிறார் அவர்.

### ஆபிரிக்காவுக்கு வெளியே...

தான்ஸானியாவின் லாட்டோலி என்ற இடத்தில் கிடைத்த காலடித் தடங்கள் 35 லட்சம் ஆண்டுகள் பழமையானவை.

கென்யாவில் கூபி போராவில் கிடைத்தவை 15 லட்சம் ஆண்டு பழமையானவை. களிமண் பூமியாக இருந்து பாறையாக மாறிய பகுதி இது. இதனால் மனித காலடித் தடங்கள் தெளிவாக உள்ளன. மெக்ஸிகோவின் வடகிழக்கு பகுதியில் கடந்த ஆண்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த காலடிகள், 10,500 ஆண்டுகள் பழமை யானவை. ஆனால் ஆபிரிக்காவுக்கு வெளியே, கண்டறியப்பட்ட காலடித் தடங்களில் இங்கிலாந்தில் இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இந்த தடங்கள்தான் மிகவும் பழமையானவை.



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## நெல்லி சாமியார்!



***நெல்லிக்காய்*** சாமியார் என்று ஒருவர் பூதமங்கலம் கிராமத்தில் இருந்தார். காளி கோவில் நெல்லி மரத்தடியில் எப்போதும் இருப்பார். நெல்லிக்கனியை மந்திரித்துத் தருவார். விஷக்கடி, பயந்துபோய் குழந்தைகள் நிறுத்தாமல் அழுவதற்கு விபூதி பூசுவார். சரியாகிவிடும். சிறு சிறு உபாதைகள், நோய்களுக்கு மருந்து சொல்வார். செலவின்றி குணமாகி விடும். மக்கள் கூட்டம் எப்போதும் அவரிடம் இருக்கும். சோதிடமும் பார்ப்பார்.

அவருக்கு வயது நூறுக்கு மேல் இருக்கும். அவரிடம் ஒரு சீடன் இருந்தான். சரியான அவசரக் குடுக்கை. குரு எதைச் சொன்னாலும் பாதியைக் கேட்டுக்கொண்டு மீதியைக் காற்றில் விட்டுவிடுவான்.

தன் அந்திமக் காலம் நெருங்கி விட்டதை அறிந்த குரு, சிஷ்யனை அழைத்து சில இரகசிய மருந்து முறைகள், மந்திரங்களை உபதேசித்தார். வழக்கம்போல பாதியை மட்டும் காதில் வாங்கிக்கொண்டு மீதியைக் கவனியாமல் அலட்சியமாக இருந்து விட்டான். ஓர் ஓலைச் சுவடிக்கட்டை அவன் கையில் தந்துவிட்டு குரு பரமபதம் அடைந்தார். சுவடிக்கட்டைப் பத்திரப்படுத்தாததால் பாதியைக் கரையான் தின்றுவிட்டது.

அவர் இறந்ததும் அந்த நெல்லி மரமும் பட்டுப்போயிற்று. அருகில் இருந்த ஓர் அரைநெல்லி மரத்தடியில் குருவுக்குப் பின் இவன் தொடர்ந்து அவர் பணியைச் செய்தான்.

ஆனால், பாதி மந்திரம் மட்டுமே சொன்னதால் யாருக்கும் முழுதும் குணம் ஆகவில்லை. ஓலைச்சுவடியில் குரு எழுதியதில் பாதி மட்டும்தான் இருந்ததால் அதை வைத்துக்கொண்டு ஒப்பேற்றினான். சோதிடத்தில் பாதியே பலித்தது.

மக்களுக்கு வரவர இவன் வைத்தியம் மற்றும் மாந்திரீகத்தில், சோதிடத்தில் நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. இவனிடம் வந்தால் பாதி காரியம்தான் நடக்கும் எனத் தெரிந்த மக்கள் இவனுக்கு "அரை நெல்லிக்காய்" சாமியார் என்று பட்டம் சூட்டிவிட்டார்கள். குருவிடம் முழுதாகக் கற்க வில்லையே எனத் தன்னையே நொந்துகொண்டார் அரை நெல்லிக்காய் சாமி.

## வாரம் ஒரு திருக்குறள்




**சுற்றந் தழால்**

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவுந் தரும்.**

அன்புநீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன்மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கம் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

## நுளம்பு



**காசில்லாமல் ஊசிபோடும்**
**கருணையாளன் நான்**
**கணக்கில்லாமல் முட்டையிட்டுக்**
**குஞ்சு பொறிப்பேன்**
**காதுக்கருகில் வந்து நின்று**
**பாட்டுப் பாடுவேன்.**
**இரவினிலே அனைவரது**
**தூக்கத்தைக் கெடுப்பேன்.**
**வீட்டுக்குள்ளே அடைசல் இருந்தால்**
**கொண்டாட்டம்தான் எனக்கு**
**தேங்கி நிற்கும் நீரினிலே**
**பல்கிப் பெருகுவேன்.**
**மலேரியா காய்ச்சலை நான்**
**கொண்டு வருவேன்.**
**செயற்கையாக என்னை அழிக்க**
**முயற்சிக்க வேண்டாம்.**
**நுளம்புவர்த்தியும் ஆல் அவுட்டும்**
**கொஞ்சநேரம்தான்**
**வீட்டுக்குள்ளே குப்பைகளைக்**
**குவித்திடாதீங்க.**
**ஒட்டடைகள் சேர்ந்திடாமல்**
**பார்த்துக் கொள்ளுங்க.**
**சுற்றுப்புறத்தைத் தூய்மையாக**
**வைத்துக் கொள்ளுங்க.**
**கழிவுநீரை எட்டத்திலே**
**கொண்டு விடுங்க.**
**வழிமுறைகள் சொல்லிப்புட்டேன்**
**காத்துக் கொள்ளுங்க.**

## விரிவாக்கம்

NEWS என்றால் NORTH EAST WEST SOUTH

இதேபோல் -

| | | |
|---|---|---|
| COLD | - | CHRONIC OBSTRUCTIVE LUNG DISEASE |
| JOKE | - | JOY OF KIDS ENTERTAINMENT |
| CHESS | - | CHARIOT HORSE ELEPHANT SOLDIERS |
| AIM | - | AMBITION IN MIND |
| EAT | - | ENERGY AND TASTE |
| PEN | - | POWER ENRICHED NIB |
| SMILE | - | SWEET MEMORIES IN LIP EXPRESSION |
| DATE | - | DAY AND TIME EVOLUTION |
| BYE | - | BE WITH YOU EVERY TIME |

## பெயர் வகைகள்!

1. ஒட்டோநிம் - இயற்பெயர்
2. கோக்னோநிம் - அடைபெயர்
3. கிரிப்டோநிம் - மறைபெயர்
4. ஹிப்போகோரிசம் - செல்லப் பெயர்
5. சூடோநிம் - புனைபெயர்
6. பொலினிமஸ் - பல பெயர்கள்
7. சூடான்டரி - ஒரு பெண் ஆணின் பெயரை புனைபெயராக வைத்தல்.
8. சூடோக்னி - ஒரு ஆண் பெண்ணின் பெயரை புனைபெயராக வைத்தல்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 02.03.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1032**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1030**

ஆர்.நவீன்,
நெல்சன் பிளேஸ், கொழும்பு - 06

பரிசுக்குரியவர்: 1030

**பாராட்டுக்குரியவர்கள்**


01. தா.சாமினி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
02. எஸ்.சானுமதி, றெட்பானா, விசுவமடு.
03. ம.பிரகஸ்பதி, பிரதான வீதி, மாத்தறை.
04. அ.சாரங்கா, புலோலி தெற்கு, புலோலி.
05. டொ.ஜோன்சன், உடப்புசல்லவ, நுவரெலியா.
07. மு.பிந்துகா, பேராதனை வீதி, கண்டி.
08. வ.அருந்ததி, கொள்ளுப்பிட்டி.

## இந்திரா காந்தியின் கைப்பை



காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தியின் கரத்தில் நீங்கா நிழல்போல எப்பொழுதும் கைப்பை ஒன்று இருக்கும். அந்தப் பையில் புனிதமானது என அவரால் கருதப்படும் பகவத்கீதை பத்திரமாக அடங்கியிருக்கும்.

## கிளிகளும் மாரடைப்பு நோயும்



வான மண்டலத்தில் பறந்தபடி மரக் கிளைகளில் வாசம்புரியும் கிளிகளுக்கு மாரடைப்பு நோயே வராது. ஏனென்றால், அவைகள் சூரியகாந்தி விதைகளை அதிக அளவில் உணவாக உண்ணுகின்றன.

சூரியகாந்தி விதைகளில் அமைந்துள்ள 'லினோலீக்' என்ற அமிலத்திற்கு இரத்தக் குழாய்களில் படிந்துள்ள கொழுப்பைக் கட்டுப்படுத்துகின்ற சக்தி இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இதைச் சாப்பிடுபவர்கள் மாரடைப்பைத் தவிர்க்கலாம்.

## ஹோவர்க்ராப்ட் ஊர்திகள்

ஹோவர்க்ராப்ட் என வழங்கப்படும் ஊர்தி, உருவில் கப்பலைப்போன்று இருக்கும். இதன் சிறப்பு யாதெனில் இவ்வகை ஊர்தி நீரிலும், நிலத்திலும் இயங்கும் என்பதே.

இந்த ஊர்தியின் அடிப்பாகத்தில் சிறப்பு விசை இயக்கிகள் உள்ளன. இந்தச் சிறப்பு விசை இயக்கிகளை இயக்கியவுடன் ஊர்தியின் அடியில் தேவையானளவு சக்தி வாய்ந்த காற்று பீய்ச்சப்படுகின்றது. இந்தக் காற்றுப் படுக்கையில் மிதந்தவாறு ஹோவர்க்ராப்டு ஊர்தி தன் இலக்கை நோக்கிச் செல்கிறது. ஊர்தி இயங்குகின்றது. ஊர்தியில் உள்ள மற்ற இயந்திரங்கள் ஊர்தியினை முன்னோக்கிச் செலுத்தவும் பக்கவாட்டில் திருப்பவும் உதவுகின்றன.

ஹோவர்க்ராப்ட் ஊர்திகள் இரு வகையானவை:

முதல் வகை ஊர்திகளில் காற்றுப் படுகை தரை அல்லது நீர் மட்டத்திலிருந்து சில அங்குல உயரமே உள்ளது. இவ்வகை ஊர்திகள் சீரான மேற்பரப்பு உள்ள நில அல்லது நீர்ப் பரப்புகளின் மீது இயங்க உபயோகமானவை. இரண்டாம் வகை ஊர்திகளில் காற்றுப்படுகை பல அடி உயரத்திற்கு இருப்பதால் இத்தகைய ஊர்திகளை நீர், கரடுமுரடனான நிலம், பனிப்பிரதேசம் போன்ற எத்தகைய நிலைமைகளிலும் இயக்கமுடியும்.

ஹோவர்க்ராப்ட் ஊர்தி படகுகளைவிட வேகமாகச் செயற்படுவதுடன் சிறிய வளைவுகளில் திருப்ப முடிவதால் இத்தகைய ஊர்திகள் பரவலாக சிறு கடல் உல்லாசப் பயணங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**இனி...**

**செய்திகள் வாசிக்கும் இந்த 'உதடுகளை நான் வாசிக்கட்டுமா," என்றான். பதிலுக்கு காத்திருக்காமல் அவளின் உதடுகளை நோக்கிக் குனிந்தான். எதிர்ப்புக்கு பலன் இல்லாமல் பணிந்தாள்.**



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

**அதிர் இடி 26**

**சியம்பாவை** தன் அந்தரங்கச் செயலாளராக நியமிக்க இடி அமீன் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் தங்கப் புதையல்கள் பற்றிய தகவல்களை சியம்பாவிடம் இருந்து பெற்றுக்கொண்டான்.

அவற்றில் ஒரு பகுதியை சியம்பாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். சியம்பாவை தன் வலையில் வீழ்த்தவே முதலில் பதவிகொடுத்தான் அமீன். பின்னர் சியம்பாமீது நம்பிக்கை ஏற்பட்டதால் தன் அந்தரங்கச் செயலாளராகவே தொடர்ந்து வைத்துக்கொண்டான்.

தனது தனிப்பட்ட பிரச்சினைகளை சியம்பாவிடம் மனம் விட்டுப் பேசுமளவுக்கு அவரை நம்பத் தொடங்கினான் அமீன்.

அமீனின் வரலாற்றை பிற்காலத்தில் சியம்பாதான் அம்பலப் படுத்தப் போகிறார் என்பதை மட்டும் அப்போதே ஊகிக்கும் சக்தி அமீனுக்கு இருந்திருந்தால், அவர் தலையை வெட்டி ஐஸ் பெட்டியில் வைத்திருப்பான்.

முன்னாள் ஜனாதிபதி ஒபேடேக்கு விசுவாசமான அதிகாரிகளில் ஒருவன் உடுகா. உகண்டாவின் பொலிஸ் பாண்ட் இசைக் குழுவுக்கு பொறுப்பாக இருந்தவன்.

இடி அமீன் பதவிக்கு வந்ததும் உடுகா நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டான்.

"ஒபேடேயைக் கொல்லத் திட்டமிட்டான் இடி அமீன். சிங்கப்பூரில் இருந்து ஒபேடே நாடு திரும்பியிருந்தால் அவர் தலை தப்பியிருக்காது" என்று உடுகா வெளிநாட்டில் இருந்தபடி தகவல்களை வெளியிட்டான்.

உடுகாவின் நண்பன் ஒருவன் உகண்டாவில் இராணுவத்தில் பணியாற்றினான். அதனை தன் உளவுப் பிரிவின் ஊடாக மோப்பம் பிடித்த அமீன் அவனை அழைத்தான்

"உன் நண்பன் உடுகா சூதுவாது தெரியாதவன் யாரோ அவனை வைத்து ஆட்டுவிக்கிறார்கள். நீ என்ன செய்கிறாய் என்றால் உடுகாவை சமாதானப்படுத்தி உண்மையைக் கூறி அழைத்துவா. எனக்கு அவன்மீது கோபமே கிடையாதப்பா. ஏதோ அறியாத்தனத்திலே செய்கிறான். வந்து என்னை ஒரு தரம் பார்த்துவிட்டு வேலையை பொறுப்பெடுக்கச் சொல்லு!"

அமீன் மிக இயல்பாக உடுகாவின் நண்பனிடம் பேசினான்.

உடுகாவிடம் சென்ற அவனது நண்பன் அமீனை நம்பலாம் என்று உத்தரவாதம் கொடுக்க, உடுகா உகண்டாவுக்குத் திரும்பினான்.

அமீனை சந்திக்கச் சென்ற உடுகாவை அமீன் கட்டித்தழுவி வரவேற்றான். ஒபேடேயின் ஆட்களில் எத்தனை பேருக்குப் பதவிகளைத் தூக்கிப் போட்டிருக்கின்றேன். அவர்களும் தயக்கம் இல்லாமல் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். நீ சுத்தமான ஆண் பிள்ளை. தானாக வந்து நிற்கவில்லை பார்த்தியா?, நானாக அல்லவா அழைக்கவேண்டி இருந்தது" என்று உடுகாவைப் புகழ்ந்தான் அமீன்.

அமீன் இத்தனை நல்லவன் என்று தெரியாமல் இருந்துவிட்டோமே? என்று உள்ளூர வருந்தினான் உடுகா.

மறுபடியும் அவனது வேலையைப் பொறுப்பேற்குமாறு கூறி அமீன், கார் ஒன்றில் அவனை அனுப்பிவைத்தான்.

உடுகா சென்ற கார் சித்திர வதைக்குப் பெயர்போன மலாயா முகாம் நோக்கி விரைந்தது.

மலாயா விடுதிக்குள் உடுகாவை வரவேற்று, ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றனர்.

உடுகாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக சந்தேகம் எட்டிப் பார்க்கத் தொடங்கி இருந்தது. அடுத்து நடந்த சம்பவங்கள் அந்த சந்தேகத்தை பயங்கரமான முறையில் ஊர்ஜிதம் செய்தன.

"பொலிஸ் பாண்ட் வாத்தியக்குழு பொறுப்பதிகாரியே வருக, வருக!" என்று ஒரு குரல் ஒலித்தது.

அறைக்குள் போதிய வெளிச்சம் இன்மையால் எங்கிருந்து குரல் வருகின்றது என்பதை உடுகாவால் உடனே அறிந்துகொள்ள முடியவில்லை.

தான் வந்து சேர்ந்திருப்பது இடி அமீன் ஆட்சியில். சித்திரவதைக்குப் பெயர்போன முகாம்களில் ஒன்றுக்குத் தான் என்பது உடுகாவுக்கு தெரியவில்லை.

எனினும், "இடி அமீன் ஒழித்துக் கட்டத்தான் இந்த இடத்திற்கு அனுப்பியிருக்கிறான். நம்பி ஏமாந்துபோனோம்" என்று அவன் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டது.

அந்த அறையில் மின்னிக் கொண்டிருந்த சிறு மின்விளக்கும் சட்டென்று அணைந்தது. கும்மிருட்டு. உடுகா அந்த இருளுக்கு தன் கண்களை பழக்கப்படுத்த முயன்றான்.

இருளில் உருவங்கள் அசைவது போன்ற சலனம் தெரிந்தது.

சாவதற்கு முன்னர் தப்பிக்க முயற்சித்தால் என்ன? உடுகாவின் மூளை தூண்டியது.

கைகளையும், கால்களையும் நாற்புறமும் இருளில் வீசினான் உடுகா. யார்மீதும் படவில்லை.

அப்படியே வீசிக்கொண்டு பின்புறமாக நகரமுற்பட்டான். வந்த பாதை அவன் மூளையில் பதிவாயிருந்தது.

ஓடு ஓடு தப்பு!

அவன் மூளையில் அலாரம் ஒலித்தவேளையில், அவனது பின்புறத்திலிருந்து கனமான மரக்கட்டை ஒன்றால் தலையில் தாக்கப்பட்டான்.

அவனது திட்டங்களும், தலையும் சேர்ந்தே உடைந்தன. குருதி கொப்பளிக்க தரையில் சரிந்தான்.

கீழே விழுந்தவனை தொடர்ந்தும் அதே கட்டையால் தாக்கியதில், தலை சிதறி; தலையில் இரத்தம் சிந்த உயிர்ப்பறவை அவன் உடலை விட்டு பறந்தது.

உடுகா செத்துப் போனான். சாகும் கடைசி நொடியில் வெளிநாட்டிலேயே இருந்திருக்கலாம் என்று நினைத்துவிட்டு செத்துப்போனான்.

உடுகாவுக்கு போதிய மரியாதை கொடுக்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டோம் என்று மலாய் முகாமிலிருந்து அமீனுக்கு தகவல் வந்தது.

தகவல் வந்தபோது இடி அமீன் கூட்டம் ஒன்றில் இருந்தான். பல பிரமுகர்கள் அவனைச் சுற்றி இருந்தனர்.



சட்டென்று தன் முகத்தில் சோகத்தை கொண்டுவந்த அமீன் தொலைபேசியிலேயே அப்படியா, அடடே... செத்துவிட்டாரா, தன் மனைவி பிள்ளைகளைக்கூட அவர் சென்று பார்க்கவில்லையா சண்டாளர்கள். சரி நான் நேரில் வருகிறேன் என்று பேசிக் கொண்டிருக்க, பிரமுகர்கள் கலவரமானார்கள்.

(தொடரும்)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 561

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 10 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி
02.03.2014 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 561
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு,
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 559- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பி 1 | ரா 2 | ணா 3 | யா 4 | ம 5 | ம் 6 |
| ர 7 | சு 8 | பா 9 | ம் 10 | | ர 12 |
| தி 13 | த 14 | | | தே 17 | வை 18 |
| வா 19 | | லெ 21 | னி 22 | ன் 23 | |
| த 25 | ல் 26 | வ 27 | சி 28 | | ர் 30 |
| ம் 31 | | ல் 33 | ட் 34 | கா 35 | நா 36 |

**இடமிருந்து வலம்**

01. வெளிப்படுத்துல் என்றும் பொருள்படும்.
07. கோடை காலம்; வெண்மை.
13. வைத்திய சாஸ்திரம்.
21. சந்திரகுலத்தோரரசன். (திரும்பியுள்ளது)
25. அரசன். மல்லிகை.
29. அழகு. சூரியன்.
31. கிளப்புமோர் கருவி. (குழம்பியுள்ளது)
35. தழுவு என்று சொல்லலாம். ( திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. நம்பத்தக்கது. கடைசி இரண்டெழுத்தும் உலகம் என்பதைக் குறிக்கும்.
02. அன்னப்பால். (குழம்பியுள்ளது)
04. படித்தல். (குழம்பியுள்ளது)
06. நூலின்கண் சேர்க்கப்படும் உபவிஷயம். (திரும்பியுள்ளது)
15. தடியன். (குழம்பியுள்ளது)
23. திருத்தி செய்தல். (குழம்பியுள்ளது)
26. ஓரளவு; சம்பளம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 559 இற்கான
சரியான விடைகளை அனுப்பி
1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**எம்.பாமினி, பரந்தன், கிளிநொச்சி**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. ஐ.தாஜிடீன், டீன் வீதி, அட்டாளைச்சேனை.
02. த.யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
03. எம்.நாதன், கோவில் வீதி, வவுனியா.
04. மு.சத்தியவதனா, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
05. அ.பிரிந்துஜன், சாவற்காடு, ஆனைக்கோட்டை.
06. கா.சந்தியா, உடப்பு, புத்தளம்.
07. தி.சாமந்தி, முதலாம் குறிச்சி, எழுவைதீவு.
08. மா.திகாம்பரம், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
09. ப.ஜெயந்தி. பிரதான வீதி, சாவசக்சேரி.



சுப்பிரமணிய சாஸ்திரி

# மதம் மாறும் நாயகர்கள்!

சமீபத்தில் இளைய ராஜாவின் இளையமகன் யுவன்ஷங்கர் ராஜா முஸ்லீம் மதத்துக்கு மாறியதை மீடியாக்கள் பரபரப்புடன் செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்நிலையில் யுவன்ஷங்கர் ராஜாவை தொடர்ந்து மேலும் இரண்டு நாயகர்கள் முஸ்லீம் மதத்துக்கு மாற முடிவு எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்து பாரம்பரிய குடும்பத்தில் இருந்து வந்த யுவன்ங்கர் ராஜா மன உறுதியுடன் முஸ்லீம் மதத்துக்கு மாறியதை தைரியமுடன் தெரிவித்தார். இந்த செய்தி மீடியாவில் பரபரப்பாக வெளி வந்தாலும், பொது மக்களிடம் இருந்து எவ்வித எதிர்ப்பும் கிளம்பவில்லை. எனவே ஏற்கனவே இஸ்லாம் கொள் கையை கடைப் பிடித்து வெளியே சொல்ல தயங்கிக் கொண்டிருக்கும் இரண்டு நடிகர்கள் யுவனின் பாணியில் தைரியமாக வெளியே சொல்ல தற்போது முடிவெடுத்துள்ளார்களாம்.

பிரபல எடிட்டர் ஒருவரின் மகனும், பிரபல ஹீரோவும் ஆன ஒருவர் பல ஆண்டுகளாக இஸ்லாம் மதத்தின் கொள்கைகளை பின்பற்றி வருகிறாராம். ஆனால் வெளியே சொல்வதில்லையாம். தற்போது அவர் வெளிப்படையாக மதம் மாற முடிவு செய்துள்ளாராம்.

இன்னொரு நடிகர் சமீபத்தில் சிம்புவுடன் மோதியவர். சிம்பு நடிக்க வேண்டிய படம் ஒன்றில் இவர் நடித்து, அந்த படம் பெரிய ஹிட் ஆனதால் சிம்புவுக்கும் இவருக்கும் பயங்கர பிரச்சினை வந்தது. இவர் ஒரு பெரிய தயாரிப்பாளரின் மகன் ஆவார்.

# ஸ்ருதியின் நாடகம் கை கொடுக்குமா?

ஸ்ருதிஹாசன் பாலியல் தொழிலாளியாக நடித்த 'தி டே' என்னும் படத்தை தமிழில் மொழி மாற்றம் செய்ய உள்ளதாக அதன் தயாரிப்பாளர்களில் ஒருவர் தகவல் வெளியிட்டவுடன் கொதித்தெழுந்த ஸ்ருதிஹாசன் தமிழில் இந்த படத்தை மொழிமாற்றம் செய்தால் சட்டப்படி வழக்குத் தொடருவேனென பயமுறுத்தினார். இதனால் சில நாட்களுக்கு முன் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

'தி டே' படத்தின் தமிழ் மொழியாக்கம் வருகிற 14ஆம் திகதி ரிலீஸ் ஆவது உறுதியாகியுள்ளது. தயாரிப்பாளர் எதிர்பார்த்ததைவிட அதிக தியேட்டர்கள் புக் ஆகியுள்ளன. இந்நிலையில் இந்த படம் குறித்து ஸ்ருதிஹாசனும், தயாரிப்பாளரும் சேர்ந்து நடத்திய நாடகம் ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

முதலில் கடந்த மாதம் 'தி டே' படத்தின் தயாரிப்பாளர் முடிவு செய்தபோது, இந்த படத்தை வெளியிட யாருமே முன்வரவில்லை. பொதுவாக இந்தியில் வெளியான படங்களில் எவ்வளவு பெரிய நடிகர் நடித்திருந்தாலும், அதை அப்படியே தமிழில் டப் செய்தால் ஓடாது.

எனவேதான் தயாரிப்பாளரும், ஸ்ருதிஹாசனும் இணைந்து இந்த எதிர்ப்பு நாடகத்தை நடத்தியதாக தகவல்கள் தற்போது கிசுகிசுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே பேசிவைத்துதான் ஸ்ருதிஹாசன் வழக்கு தொடரப்போவதாக மிரட்டியுள்ளார் என்பது தற்போதுதான் பலருக்கு புரிந்துள்ளது. அவர்கள் எதிர்பார்த்தபடியே அதிக தியேட்டர்களும் புக் ஆகியுள் ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் படம் ரிலீஸ் ஆனால்தான் தெரியும் இவர்களது நாடகம் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பது.



மனம் நில்லுன்னா நிக்காதடி



# ஆட்...
# கிடை...

அண்ணா...
விழாவில், தலை...
விஜய்க்கு சிறப்பு...
இந்த விருதை பெ...
மிகச்சிறப்பான வரவே...
பல்கலைக்கழக...
ஆயிரக்கணக்கான மாணவ...
வரவேற்றனர். மிகப்பெரிய ரோ...
வழங்கி அவருக்கு வாழ்த்துத் தெ...
இந்த விழாவில் பேசிய வி...
ஏற்பட்ட பயங்கர மனக்காயத்துக்கு...
'தலைவா' படம் வசூலில் தோல்வி...
அண்ணா பல்கலைக்கழக மாணவர்...
இருக்கிறது என்றால் கிரிக்கெட் பே...
விருது' கிடைத்ததுபோல எண்ணுகி...



ஆஹா கல்யாண...



என்னமோ ஏதோ

# பட்டும் திருந்தாத...
# வைகைப் புயல்...

தற்போது போய...
ஏற்கனவே ப...
நடிகர் அந்த...
அவர்மூல...
வரும்...



## சென்னை விமான நிலையத்தில் ஆட்டம்

விஜய், சமந்தா நடிப்பில் முருகதாஸ் இயக்கும் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகிறது. இந்த படத்திற்காக விஜய் மற்றும் சமந்தா நூற்றுக்கணக்கான துணை நடிகைகளோடு டான்ஸ் ஆடும் படப்பிடிப்பு சென்னை விமான நிலையத்தில் நடந்தது.

நடன பயிற்சியாளர் ஷோபி இந்த பாடலுக்கு நடனம் அமைக்கிறார். பாடல் வெஸ்டர்ன் ஸ்டைலில் இருப்பதால், டான்ஸ் மூவ்மெண்ட்டும், வெஸ்டர்ன் ஸ்டைலில் இருக்கவேண்டும் என முருகதாஸ் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வித்தியாசமாக ஸ்டெப்புகள் அமைத்திருக்கிறார் ஷோபி. விஜய் மற்றும் சமந்தா இருவருமே நல்ல டான்சர்கள் என்பதால் ஸ்டெப்புகளை உடனடியாக பிக்கப் செய்து அற்புதமாக ஆடி படக்குழுவினர்களை அசத்திவருகின்றனர்.

சென்னை விமான நிலையத்தின் சில பகுதிகளில் படப்பிடிப்பு நடத்த இதுவரை யாருக்கும் அனுமதி கொடுத்ததில்லை. ஆனால் படத்தயாரிப்பாளர் தனது செல்வாக்கை பயன்படுத்தி சிறப்பு அனுமதி வாங்கிவிட்டாராம். அதனால் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

## நஸ்ரியாவை கலக்குகிறார் முன்னாள் காதலன்

நடிகை நஸ்ரியா, பஹத் பாசில் திருமண நிச்சயதார்த்தம் கடந்த 8ஆம் திகதி விமர்சையாக நடந்தது. வரும் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி திருமண திகதியும் குறித்தாகிவிட்டது. இந்நிலையில் நஸ்ரியாவின் திருமணத்தை அவரது முன்னாள் காதலர் ஒருவர் நிறுத்த முயற்சிப்பதாக வந்த தகவலை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுவயதில் தன்னுடன் படிக்கும் இளைஞர் ஒருவரை காதலித்ததாகவும், அவருடன் பள்ளி கல்லூரிகளில் படிக்கும் போது பல இடங்களில் சுற்றியதாகவும் கூறப்படுகிறது. அந்த வாலிபரை சினிமாவுக்கு வந்தவுடன் நஸ்ரியா தவிர்த்துவருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நஸ்ரியா நிச்சயதார்த்தம் குறித்து கேள்விப்பட்ட அந்த இளைஞர் நஸ்ரியாவுக்கு மிரட்டல் விடுத்ததாகவும், தன்னை திருமணம் செய்துகொள்ளாவிட்டால், இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இணையத்தில் வெளியிடப் போவதாகவும் மிரட்டியுள்ளார். இந்த மிரட்டல் குறித்து கூறும் நஸ்ரியா, தான் சிறு வயதில் யாரையும் காதலிக்கவில்லை என்றும், தனது திருமணத்தை நிறுத்துவதற்காக யாரோ மர்மநபர்கள் செய்யும் சூழ்ச்சிதான் இது என்றும் கூறினார்.

## ஆட்டத்தில் தோல்வி! கிடைத்தது விருது!!

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு
...ாவில், தலைவா படத்தில் சிறப்பாக நடித்த
...க்கு சிறப்பு விருதுகொடுத்து கௌரவிக்கப்பட்டது.
...விருதை பெறுவதற்காக வந்த விஜய்க்கு
...ப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.
...லைக்கழக வளாகத்திற்குள் விஜய் வந்தவுடன்
...ான மாணவர்கள் ஆரவாரத்துடன் விஜய்யை
...ப்பெரிய ரோஜா மாலையை மாணவர்கள் விஜய்க்கு
...ாழ்த்துத் தெரிவித்தனர்.
...ல் பேசிய விஜய், தலைவா படத்தினால் எனக்கு
...காயத்துக்கு இங்கே மருந்து கிடைத்ததாக கூறினார்.
...ல் தோல்வி அடைந்தாலும், அந்த படத்திற்காக
...ழக மாணவர்கள் என்னை கௌரவித்தது எப்படி
...ரிக்கெட் போட்டியில் தோற்றாலும், 'ஆட்டநாயகன்
...ல எண்ணுகிறேன் என்று கூறினார்.

## தலயின் மறு அவதாரம் சிம்புவாம்!

அஜீத்தின் மிகப்பெரிய ரசிகர் சிம்பு என்பது அனைவருக்கும் தெரியும். அஜீத் படங்கள் வெளியாகும் தினத்தில் முதல் நாளில் முதல் காட்சியை தவறாமல் தியேட்டரில் சென்று பார்த்துவிடும் வழக்கம் உடையவர் சிம்பு. இதுகுறித்து சிம்பு சமீபத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில், "நான் சிறுவயதில் சூப்பர் ஸ்டாரின் ரஜினியின் பரம ரசிகனாக இருந்தேன். தற்போது அஜீத்தை ரஜினியின் மறு அவதாரமாக நான் பார்க்கின்றேன். அஜீத்தான் என் ரியல் ஹீரோ. பல சமயங்களில் என்னுடைய கேரக்டரே, அஜீத்தின் கேரக்டரை ஒட்டி அமைந்துள்ளதை நான் கவனித்துள்ளேன். இன்னும் சொல்லப்போனால் என் உருவில் நான் அஜீத்தை பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

சிம்பு தற்போது மிகவும் பிஸியாக நடித்துக்கொண்டிருக்கிறார். வாலு, கௌதம் மேனனின் படம், நயன்தாராவுடன் நடிக்கும் பாண்டிராஜின் படம் என முழுக்க முழுக்க பிஸியாக இருக்கிறார். இந்நிலையில் மியூசிக் அல்பம் தயாரிக்கும் பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இந்த ஆண்டில் மட்டும் சிம்புவுக்கு மூன்று படங்கள் ரிலீஸ் ஆக உள்ளது.





...யாணம்

## ...ந்தாத ... புயல்

கடந்த தமிழக தேர்தலின் போது கேப்டன் கட்சியையும், தற்போதைய ஆளுங்கட்சியையும் கடுமையாக விமர்சனம் செய்து வம்பில் மாட்டிக்கொண்ட வைகைப்புயல் நடிகர் தற்போது மனவிரக்தியில் இருக்கிறார்.

கப்டனுக்கு எதிராக எந்த கட்சிக்காக பிரசாரம் செய்தேமோ, அந்த கட்சியே கப்டனுடன் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு கெஞ்சிக்கொண்டிருப்பதை பார்த்து, கடும் அப்செட்டில் இருக்கிறாராம் வைகைப்புயல். இவர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப்போய் இரண்டு வருடகாலம் வாய்ப்பு இன்றி வீட்டில் இருந்தும், அவர்களிடம் இருந்து எவ்வித உதவியும் வராததால் வெறுப்படைந்த வைகைப்புயல்
...போது போயஸ் கார்டனின் கதவைத்தட்ட ஆரம்பித்துவிட்டார்.
...ற்கனவே பல படங்களில் தன்னுடன் காமெடி ரோலில் நடித்த 'சிங்க'
...நடிகர் அந்த கட்சியில் இருப்பதால், அவருடன் முதலில் சமாதானமாகி,
அவர்மூலம் ஆளுங்கட்சியில் சேர முயற்சி செய்துவருகிறார்.
வரும் பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் கேப்டனுக்கு எதிராக களம் இறங்கத் தயார் என அறிவித்திருக்கும் வைகைப் புயல் இன்னும் திருந்தவில்லையா எனக் கிசுகிசுக்கின்றனர்.

## வெற்றியை தருவாரா ராதாவின் வாரிசு?

என்றென்றும் காதல் படத்தின் வெற்றிக்கு பின்னர் ஜீவா நடித்துக் கொண்டிருக்கும் படம் 'யான்.' இந்த படத்தில் கடல் படத்தின் நாயகி துளசி, ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இந்த படத்தை பிரபல ஒளிப்பதிவாளர் ரவி கே.சந்திரன் இயக்கி வருகிறார்.

ராதாவின் மூத்தமகள் கார்த்திகாவுடன் நடித்த 'கோ' படம் ஜீவாவுக்கு ஒரு திருப்புமுனை படமாக இருந்தது. அதேபோல் ராதாவின் இளையமகள் துளசியுடன் நடிக்கும் இந்த படமும் பெரும் வெற்றியை அவருக்கு பெற்றுத்தரும் என அவரது ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தேன் கிண்ணம்



# முடிந்த காதலின் முடிவுரை


அளவெட்டியில் உன்னை
நான் சந்தித்தேன்
ஆவரங்காலில் வைத்து
காதலை வெளிப்படுத்தினாய்
இளவாலையில் நின்று
இதமாகப் பேசினாய்
ஈவினையூரின் திருவிழாவிலே
ஈருயிர் ஒருயிரானோம்
ஊரெழுவிலுள்ள சித்திக்கு
இவரே என்னவன்
என்றுரைத்தாய்
ஏழாலையிலுள்ள உன்
வீட்டாரோ
ஜப்பானிலிருக்கும்
அத்தானுக்கு
உன்னைக் கொடுக்க
உறுதியெடுத்ததால்
உனக்கும் எனக்கும்
சண்டை மூண்டது
இதனால்
ஐந்து சந்தியில் வைத்து
என்னை
அடித்து முறிக்க வென்று
ஆட்களையும் அனுப்பி
வைத்தாய்
ஒட்டகப் புலத்தில் புக்கை
கட்டி
வைத்தியம் செய்கின்றேன்
ஏழை நான் என்பதால்
எளிதாகக் கழட்டிவிட்டாய்
ஓமானுக்கு நான் சென்று
சீமானாய் வருவேனடி
முடிந்து போன காதலுக்கு
முடிவுரையும்
எழுதிவிட்டேன்.

அளவெட்டி ப.உதயகுமார்.



# ஈழத்துக் கவிஞர்கள்

## எம்.ரீ.சஜாத்



இவர் ஓர் இளம் மரபுக் கவிஞர். கிண்ணியாவில் பிறந்த இவர் இல 4/1, முனீறா மன்ஸில் ஹிஜ்ரா வீதியை வசிப்பிடமாகக் கொண்டவர்.

தி/கிண்ணியா அல்-அக்ஷா கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

இவர் 1997ம் ஆண்டு "யுத்தம்" என்னும் கவிதை மூலம் நவமணி ஊடாக இலக்கிய உலகுக்கு அறிமுகமானார். அன்று தொடக்கம் இற்றை வரைக்கும் இவரது படைப்புக்கள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டு இருக்கின்றன. 200க்கு மேற்பட்ட கவிதைகளை படைத்துள்ளார். சிறுவர் பாடல்கள் புனையும் ஆற்றலுடன், மரபுக் கவிதை எழுதும் ஆர்வம் மிக்கவர்.

இலங்கையின் ஐம்பதாவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 1998.02.07ஆம் திகதி நடாத்தப்பட்ட மாவட்ட மட்டக் கவிதைப் போட்டியில் கலந்து வெற்றிபெற்றார். மற்றும் 2007ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் திகதி கிண்ணியா கலை இலக்கிய மன்றம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதலாம் இடமும் 2011ஆம், 2012ஆம் ஆண்டு பாடலாக்கப் போட்டியில் கிண்ணியா பிரதேச செயலக மட்டத்தில் முதலாம் இடம்பெற்று அப்பாடல் திருகோணமலை மாவட்ட மட்டப் போட்டியிலும் வெற்றி பெற்றது.

2000ஆம் ஆண்டு "மணல் ஊற்று" என்னும் கவிதைத் தொகுப்பும் அதே ஆண்டில் "காகிதச் சிறகுகள்" என்னும் கவிதை கையெழுத்துப் பிரதியும் இவரது படைப்புக்களாக வெளிவந்தன. இவரது படைப்பான "செல்லமே" சிறுவர் பாடல் தொகுப்பு 2012ஆம் வருடம் வெளிவந்தது. இந்நூல் 2013ஆம் ஆண்டு யாழ். இலக்கியப் பேரவையின் விருதைப் பெற்றுக்கொண்டது. அதே நூல் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய இலக்கிய நூற் தேர்விலும் சிறந்த சிறுவர் இலக்கியமாக தெரிவு செய்யப்பட்டு விருதும் பணமும் பெற்று கௌரவிக்கப்பட்டார். மற்றும் இந்நூல் 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரச சாகித்திய விருது விழாவில் இறுதிச் சுற்றுக்கும் தெரிவு செய்யப்பட்டது சிறுவர் இலக்கியப் படைப்பாகும்.

மஹ்ரூப் நகர் அல்-மின்ஹாஜ் இளைஞர் கழகத்தில் 1999ஆம் ஆண்டு தலைவராகவும் கிண்ணியா கலை இலக்கிய மன்றச் செயலாளருமாக தற்போது இயங்கிவருகின்றார். இலக்கியத்தோடு சேர்ந்து சமூகசேவை புரிவதோடு இவர் பிறிமா மா ஆலை கம்பனி நிறுவனத்தில் மின் உத்தியோகத்தராக பணிபுரிகின்றார்.

ஜே.பிரோஸ்கான்.

# மூட்டாங்கயிறுகள்

மூட்டாங்கயிறுகள். முறுக்கறுந்துக் கிடக்கிறது.
தூப்பாங்கட்டைக்கும் உதவாத தும்பாக.
மூட்டாங்கயிறுகள்... முறுக்கறுந்து கிடக்கிறது.

ஒற்றுமையின் கயிறு ஒவ்வொன்றாய் உதிர்ந்து வெறும்
காற்றுக்குப் பறக்கின்ற கழிவுகளாய்க் காண்கையிலே
உள்ளம் துடிக்கிறது. விழிகள் ஓ...வென்று அழுகிறது.
மூட்டாங்கயிறுகள் முறுக்கறுந்து கிடக்கிறது.

"குலபா உர் றாசிதீன்" கோலோச்சி அரசியலில்
நிலவாக ஒளிசிந்தி நீணிலத்தில் உயிர்ப்பித்த
அரசியல் இன்று... அடிமட்டம் வரை சென்று
சுய நலச் சேற்றுக்குள் சுழியோடிப் போனதால்
மூட்டாங் கயிறுகள் முறுக்கறுந்து கிடக்கின்றதே...!

வாட்டுக்குள் வந்தேனும் வருத்தம் விசாரித்து
வோட்டுக்கள் பெறுவார்கள். பெற்றபின் ஏதோ
சாட்டுக்காய்... அறிக்கைகள் சாம்பாரை விட்டெம்மை
ஏமாற்றி; கதிரைகளில் ஏறி அமர்ந்திட்ட
தலைவர்கள். எனும் பொம்மை. றோபோக்கள் என்கின்ற
மூட்டாங்கயிறுகள் இன்று முறுக்கறுந்து கிடக்கிறது.

ஆளுக்கு ஒரு கட்சி. அனைவர்க்கும் பதவிகள்
வேளைக்கு வேளை விடிந்தால்... இடிவிழுந்த
செய்திவரும்; காதுகளில் சீரணிக்கமுடியாமல்
உள்ளுக்குள் ஒப்பாரிவைப்பதற்கா? இவர்களினை
தலைமைக்குள் வைத்தோம்.
தான் மட்டும் வாழ்வதெனில்
வேண்டாங்காண். இந்த விழல்விட்டு நாளை
மறுமையிலே அல்லாஹ் நாசூக்காய் விசாரிப்பான்
விசாரணையில்.
தப்பவேமுடியாது. தலைவர்களே! ஒன்றிணைந்து
பணி செய்யவாருங்கள். பகடைக்காய் ஆகாமல்.

சமூகத்தை சீராய்... செப்பனிட வந்த
மூட்டாங்கயிறுகளே! உங்களைத்தான்
முடிச்சவிழ்ந்து போகாமல்
சுய நலப்பசாசுகளாய் சுடுகாட்டில் வீழாமல்
ஓரணியில் சேருங்கள். உசாராக எம்மினத்து
தன் மானம்காக்க. சவால்களை சமாதான
சாத்வீக வழியூடே வென்று. விடிவுக்காய்
விதி மாற்ற விரையுங்கள். இல்லையெனில்
மாற்றம் வரும். அந்த மாற்றத்தில் நீங்களெலாம்
ஓரம் போவீர்கள்; ஒழுங்காகப் பின்னிய
மூட்டாங்கயிறுகள். முறுக்கேறி அரங்கேறும்...
அதற்குள்...
ஒன்றாவீர்; இன்றே; உதிரம் கொதிக்கின்ற
வேண்டுதலை உங்கள் முன்
விண்ணப்பம் செய்கின்றோம்
மூட்டாங்கயிறுகள் முறுக்கறுந்து கிடக்கிறது.

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது -11



# எதுவும் அழகில்லை

சிறுவயதில் றோஜாவை
பார்த்தபோது
இதைவிட எதுவுமே
அழகில்லை என்று
நினைத்தேன்
பள்ளிப் பருவத்தில்
வானவில்லை
பார்த்தபோது அழகினில்
முதலிடம் என்று
நினைத்தேன்
என்று உன்னைப்
பார்த்தேனோ?
அன்று தான் புரிந்தது
உன்னைவிட இந்த
உலகத்தில்
எதுவுமே
அழகில்லை என்று.

கிருஸ்காஜா, அராலி

கடல் தவளும்
அலைகள்...
கரையே தஞ்சமென
மோகத்தில்
முத்தமிடும்!

கொஞ்சும் கடல்...
அலைதழுவி மிகும்
காதல் சொல்லும்...

நனைந்து ஊறும்
மணல்; நாணத்தோடு
நண்டொன்றின்
வரவுக்காய் காத்திருக்கும்.

காலை கதிர் கண்டு
வாலைக் குமரி யென
காலையில் கண் மலர்ந்த
வாடாத மலரில் – வந்து
வாசம் குடியிருக்கும்.

வந்து வருடி ஆசையுடன்
காதல் சொல்லும் தென்றல்!
புதிதாக பூத்த மலரோ
வண்டொன்றின் வரவுக்கு
கண் பனிக்கும்!

பண்ணை கடலோரம்
வண்ணக் கனவுகளை
பூத்திருக்கும் புது 'பீச்...'
கரையோர பூங்கா எங்கும்...
வசந்த கால தருக்கள்
நிறைந்திருக்கும்.

கடல் கோட்டை பக்கம்
வளைந்து நெளியும்
வழவான நடைபாதை!

ஒசிந்து நடை பயிலும்
அழகான பூங்கொடி யானாள்
எனதருமை காதலி!
துவண்டு நடந்தாள்
இன்னொருத்தன் கைதாங்கி!

சோகத்திலும் ஒரு சுகம்
ஏக் கத்திலுமொரு ஏகாந்தம்!
காலம் போட்ட கோலக்கணிதம்
பள்ளிப் பருவத்தில் – நான்
ஒரு தலையாய் காதலித்து
சொல்லாது போன காதலது!

# சொல்லாது போன காதல்!



மண்டைதீவு 'மகிழ்நன்'



# அந்த நாள்...

தொலைவில் இருந்தபடி
தொலைபேசியில் உன்
வார்த்தைகளால் - என்
இதயத்தை.....
காயப்படுத்தி விட்டாயே!
அந்த நாள்
மிகவும் கொடுமையானது.

பல்லவியைப்
பாடிமுடித்து விட்டு - நீயே
அனுபல்லவி பாடவும்
ஆரம்பித்து விட்டாய்....
நான் சரணம் பாடுவதுதான்
உனக்கு சம்மதமோ...
பரவாயில்லை
இந்த அன்புள்ளத்தில்
இன்னும் எத்தனை
பரீட்சைகளை
நடத்தப் போகிறாயோ?

K.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# பிரசவத்தின் போது என்ன நடக்கும்?


## பிரசவ அறையில் நடப்பது என்ன?

உங்களுக்கு பிரசவ வலி கடுமையாகவும் அடிக்கடியும் வரத்தொடங்க, நீங்கள் பிரசவ அறைக்கு வருமாறு அழைக்கப்படுவீர்கள்.

அங்கு உங்களை மருத்துவர் அல்லது தாதி, உங்கள் வயிற்றையும் உங்கள் கருப்பைக் கழுத்தையும் பரிசோதிப்பார். கருப்பைக் கழுத்தை பரிசீலிக்கும்போது உங்களுக்கு அசௌகரியமாக இருப்பினும் வலி ஏதும் ஏற்படாது.

உங்கள் கருப்பைக் கழுத்து விரிந்து இருக்கக்காணப்படின் மருத்துவர் சிலவேளைகளில் பன்னீர்க்குடத்தை உடைத்து விடக்கூடும். இதன்போதும் வலி ஏதும் இருப்பதில்லை. பன்னீர்க்குடத்தை உடைப்பதன் நோக்கம் (ARM -Artificial Rupture of Membrane) பிரசவத்தை விரைவுபடுத்துவது ஆகும்.

உங்கள் கருப்பைக் கழுத்தின் விரிவு 5cm இலும் குறைவாக இருப்பின் உங்களை சற்றுநேரம் கழித்து பிரசவ அறைக்கு வருமாறு வைத்தியர் சொல்லக்கூடும்.



கருப்பைக் கழுத்தின் விரியும் வேகம் போதுமானதாக இல்லாவிடின் கருப்பையின் சுருக்கத்தை தூண்டும் ஊசி மருந்து ஒன்று உங்களுக்கு செலுத்தக்கூடும். இது உங்கள் பிரசவவேகத்தை துரிதப்படுத்தும். (Syntocinon)

நீங்கள் பிரசவ அறையில் இருக்கும்போது குழந்தையின் துடிப்பு மற்றும் உங்கள் குருதி அமுக்கம் என்பன 15 நிமிடங்களிற்கொரு முறை பரிசோதிக்கப்படும். 4 மணித்தியாலத்திற்கொரு முறை கருப்பைக் கழுத்தின் விரிவு சோதிக்கப்படும். உங்களின் பிரசவ வலியைக் குறைப்பதற்கு ஊசி மருந்துகள் அல்லது முன்பு குறிப்பிடப்பட்ட நோயைக் குறைக்கும் வழி-வகைகள் கையாளப்படும். நாரிப் பகுதியை அழுத்தி மசாஜ் செய்வது நோவை சற்றுத் தணிக்கும்.

பிரசவ அறையில் நீங்கள் அனுமதிக்கப்பட்டபின் சாதாரணமாக வாய்மூலம் ஏதும் உட்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இதன் நோக்கம் யாதெனில், சிலவேளைகளில் உங்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய நேரிடின் மயக்க மருந்தால் எழும் சிக்கல்களை குறைப்பதற்கு ஆகும்.

பிரசவத்தின்போது பிரசவ அறையில் கூட இருப்பதற்கு உறவினர் அல்லது கணவருக்கு அனுமதி வழங்கும் நடைமுறை வெளிநாடுகளிலும் வசதியுள்ள தனியார் வைத்தியசாலைகளிலும் உள்ளது. கணவன் கூட இருப்பதால் மனஉறுதியும், வலிமையைத் தாங்கும் திறன் அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

உங்கள் பிரசவம் சுமூகமாக முன்னேற்றம் அடைந்து தலை நன்று கீழிறங்கியதும் உங்களுக்கு மலங்கழிக்க வேண்டும்போன்ற உணர்வு ஏற்படும். இவ்வேளையில் வைத்தியர் அல்லது தாதி உங்கள் கருப்பைக் கழுத்தைச் சோதித்து முற்றாக விரிவடைந்துவிட்டதா எனப்பார்ப்பார்.

உங்களுக்கு முதற்பிரசவம் அல்லது குழந்தை பெரியதாயின் உங்கள் பெண் உறுப்பின் துவாரம் பெரிதாகுமாறு சிறிய தொரு நீக்கல் ஒன்று உங்கள் பெண் உறுப்பில் ஏற்படுத்தப்படும். (Episiotomy) இதற்காக உங்கள் பெண்உறுப்பில் விறைப்பு ஊசி ஒன்றுபோடப்பட்டு கத்திரிக்கோல் ஒன்றின் உதவியுடன் பெண் உறுப்பின் வாசல் அகலமாக்கப்படும்.

குழந்தை பிறக்கும்போது பெரும்பாலும் குழந்தையின் பிடரிப் பகுதியே முதலில் வெளிவரும். சிலசமயங்களில் குழந்தையின் தலை வெளிவந்து உடல்வரமுன்னே கருப்பைச் சுருக்கம் நின்றுவிடும். இவ்வேளைகளில் நீங்கள் கடுமையாக முக்கி குழந்தையை வெளியேற்றவேண்டும்.

குழந்தையின் தலை வெளியில் தெரியத் தொடங்கி 2 மணித்தியாலங்களுக்குள் குழந்தை பெரும்பாலும் வெளியே வந்துவிடும். அவ்வாறு நிகழாவிடில் ஆயுதம்மூலமோ அல்லது சத்திரிசிகிச்சை மூலமோ குழந்தையை வெளியே எடுக்கவேண்டும்.

குழந்தையின் தலைப்பகுதி வெளியே வந்ததும் மிகுதி உடற்பகுதியை வெளியில் எடுக்க மருத்துவ தாதி அல்லது வைத்தியர் உதவி செய்வார். குழந்தை வெளியில் வந்தவுடன் குளிர் காற்றும் ஏனைய சூழல் மாற்றங்களும் குழந்தையை முதற்தடவையாக அழவைக்கும். இந்த முதல் அழுகை உண்மையில் குழந்தையின் சுவாசப்பையை விரிய வைக்கும். உயிர் வாழ்க்கைக்கான அழுகையாகும்.

**(தொடரும்...)**


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்

ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு குழந்தைக்குப் பெற்றோர் என்பது வாழ்வில் மிகவும் அற்புதமானதொரு பயணமாகும். ஒரு பெண் எப்பொழுது முழுமையடைகிறாள் என்றால், அவள் தன் குழந்தைக்குத் தாயாகும் பொழுதுதான். தாய்மை அடைதல் என்பது ஒரு பெண்ணுக்குள் உண்டாகும் அளவிடமுடியாத ஆனந்த அனுபவமாகும். பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும். பெண்ணாக இருந்தாலும், எவ்வித நெருடலுமின்றி வாரி அணைத்துக் கொள்பவள்தான் தாய். அத்தகைய தாய் தனது தாய்மை உணர்வை வெளிப்படுத்தி, அல்லும் பகலும் வளர்ப்பாள். தன்னுடல் நோக தன்னை வருத்தி, கண் விழித்து, தன் சுகதுக்கம் பாராமல், தன் குழந்தையை வளர்த்தெடுக்கும் தாய்க்கு, பிறந்தது ஒரு பெண் குழந்தையாக இருந்தால், அக்குழந்தையால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். மகளைப் பெற்றுள்ள அன்னையா நீங்கள்? அப்படியென்றால், பெண்களுக்கான பொழுது போக்குகள் மற்றும் உணர்வுப் பரிமாற்றங்களுக்கு வேறு ஒரு தோழியைத் தேடவேண்டிய அவசியமே இராது. இப்போது பெண் குழந்தையைப் பெற்ற ஒரு அன்னையானவள் அடையும் நன்மைகளை இங்கே காணலாம்.

தோழி தொலைபேசியைத் தேடி எடுத்து தோழியுடன் உரையாட வேண்டிய அவசியமில்லை. மகளையே தோழியாக்கிக் கொண்டு, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். கணவரோ, மகனோ பெண்களின் பேச்சுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காமல் போகலாம். ஆனால் மகள் இருந்தாள் நிச்சயமாக உணர்வுகளையும், பேச்சையும் காது கொடுத்துக்கேட்பாள்.

ஓய்வுநேரம் ஓய்வுநேரத்தை மிகவும் இனிமையாக செலவளிக்கலாம் என்பது ஒரு சாதகமான விஷயம். ஓய்வுநேரத்தில் என்ன செய்ய



## பெண் குழந்தைகளை பெறுவதால் தாய்க்கு கிடைக்கும் நன்மைகள்!

விரும்புகிறீர்களோ அதனைத் தயக்கமின்றி செய்யலாம். உதாரணமாக, இருவரும் புதிய வகை உணவுகளைத் தயாரிக்க முயலலாம். அப்போது ஜோக்கடித்துக்கொண்டும், ஒருவரையொருவர் கிண்டல் செய்துகொண்டும் இருந்தால், நேரம் இனிமையாகக் கழியும். மென்மையான ரொமான்டிக் நகைச்சுவைத் திரைப்படங்களையோ, டி.வியில் மெகா சீரியல்களையோ மகளுடன் சேர்ந்து காணலாம்.

ஆர்வங்கள் தையல், சமையல், அலங்காரம் போன்றவற்றில் ஆர்வம் இருந்தால், மகளுக்கும் ஆர்வம் இருக்கக்கூடும் அல்லது இவற்றைக் கற்றுக்கொடுக்கலாம். அப்பொழுதுதான் இருவரும் அவற்றைப் பற்றி விவாதித்து கருத்துகளைப் பரிமாறிக்கொண்டு, இருவரும் சேர்ந்துசெய்து மகிழமுடியும்.


ஷொப்பிங் பெண் குழந்தையின் மகத்துவம் ஷொப்பிங் செய்யும் போது தெரியும். பெரும்பாலான ஆண்கள் ஷொப்பிங் செய்யும்போது விலகியே இருப்பார்கள். ஷொப்பிங் செய்வது பெண்களின் வேலை என்று சொல்வார்கள். ஷொப்பிங் செய்வதில் விருப்பமுள்ளவராக இருந்தால், இதை மகளுக்கும் கற்றுக்கொடுங்கள். உங்களோடு இணைந்து மகிழ்ச்சியாக ஷொப்பிங் செய்வாள். பொருத்தமான மற்றும் பிடித்தமான ஆடைகள், பொருட்களை முகஞ்சுழிக்காமல் தேர்ந்தெடுத்துக் கொடுப்பாள்.

கருத்துப் பரிமாற்றம் ஆடைகளிலும், அலங்காரப் பொருள்களிலும் மார்க்கெட்டுக்கு வந்துள்ள நவீன ஃபேஷன்கள் குறித்து விவாதித்துத் தெரிந்துகொள்ளலாம். லேட்டஸ்ட்டாக வந்துள்ள டிசைன்கள் மற்றும் ஃபேஷன்கள் குறித்து, இன்றைய திகதி வரையிலும் துல்லியமாக தெரிந்துகொள்ளலாம். புதிதாக வாங்கியுள்ள ஆடைகள் உங்களுக்கு எப்படி இருக்கின்றன, கச்சிதமாகப் பொருந்துகின்றனவா என்பது குறித்த உண்மையான விமர்சனங்களை பெற்றுக்கொள்ளலாம்.

எந்த வகை ஆடைகள் உடலுக்கு நன்றாக இருக்கும் எவை நன்றாக இருக்காது என்பது போன்ற விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம். ஆனால், கணவர் அல்லது மகனிடம் இக்கேள்விகளைக் கேட்டால் வரும் ஒரே பதில் "இந்த ட்ரெஸ்ஸில் நீ மகாராணிபோல் இருக்காய்!" என்பதாகத்தான் இருக்கும்.

அலங்கரிப்பு வெளியிடங்களுக்கு செல்லும்போது, பெண் குழந்தைகள் இருந்தால், தன் அம்மா அழகாக இருக்கவேண்டுமென்று நினைப்பார்கள். அதற்காக மகள் உங்கள் நகத்திற்குப் பொலிஷ் போட்டுவிடுவார்கள். முடிகளைக் கேர்லிங் செய்துவிடுவார்கள். முகத்திற்கு ஃபேஷியல் போட்டுவிடுவார்கள். மேலும் பல அலங்காரங்களை செய்துவிடுவார்கள்.





எலுமிச்சை சாறு எலுமிச்சையில் இயற்கையாகவே வெளுக்கும் தன்மை உள்ளது. ஆகவே தழும்புகள் உள்ள இடத்தில் எலுமிச்சை சாறு கொண்டு மசாஜ் செய்தால் தழும்புகள் மறையும்.

ஐஸ்கட்டிகள் தழும்புகளில் ஐஸ்கட்டிகள்

## மகப்பேறு தழும்புகளை எளிதில் குறைக்க சில வழிகள்!

கர்ப்பத்தின்போது பெரிதான வயிறு, பிரசவத்திற்குப் பின்னர் படிப்படியாக குறையும். நோர்மல் டெலிவரி ஆனாலும் சரி, சிசேரியன் ஆனாலும் சரி, வயிற்றில் தழும்பு ஏற்படுவது இயல்பு. இந்த தழும்புகள் பெண்களின் மனதிற்கு சங்கடத்தை ஏற்படுத்தக்கூடும். குழந்தை பெற்றபின், பொதுவாக எல்லோருக்கும் ஏற்படக்கூடிய பிரச்சினை தான் தழும்புகள் என்றாலும், இது மிகுந்த மன சங்கடத்தை அளிக்கும். இத்தழும்புகளை முழுமையாக குணப்படுத்த முடியாவிட்டாலும், இயற்கை முறையில் இவற்றை குறைக்கமுடியும். அதிலும் இத்தகைய மகப்பேறு தழும்புகளை இயற்கையாக குறைக்க சில வீட்டு வைத்தியங்கள் உள்ளன. அப்படி அதிசயக்க வைக்கும் சில வீட்டு. வைத்தியங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

கொண்டு மசாஜ்செய்வது, சருமத்துளைகளை இறுக்கி தோல் நிறமிகளை குறைக்கும். ஆகவே தழும்புகள் குறையும்.

ஒரேஞ்சு பழத்தில் உள்ள விற்றமின் சி, சருமத்தை சரிப்படுத்தி சருமத்தில் உள்ள நிறமிகளை குறைக்கிறது.

ஒலிவ் எண்ணெய் கொண்டு சருமத்தை மசாஜ் செய்யவும். இது தழும்புகளை போக்குவது மட்டுமல்லாமல், சருமத்தை ஈரப்பதமாக்கி மிருதுவாக்கும்.

கென்சீலர் மகப்பேறு தழும்புகளை உடனடியாக மறைக்கவேண்டும் என்றால் கென்சீலர் உபயோகிக்க வேண்டும். ஏனென்றால் கென்சீலர் சரும நிறத்தை விட ஒருபடி குறைவாக இருக்கும். ஆகவே தழும்புகள் உடனடியாக மறைக்கப்படும்.



## வெள்ளை முடி வருவதை தடுக்கும் வழிகள்!!

இளமையிலேயே கூந்தல் நரைப்பதை தடுக்கலாம். இப்போது அந்த நரை முடி வருவதை எப்படி தடுப்பது என்று பார்ப்போமா. இன்றைய அவசர நாகரிக வாழ்க்கை முறையில் அனைத்து இளம் தலைமுறையினருக்கும் உள்ள பிரச்சினைதான் நரை முடி. ஏனெனில் அவர்கள் நிறைய பதற்றம், மன அழுத்தம் போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவேதான் விரைவிலேயே நரை முடிவருகிறது. உங்களுக்கு தெரியுமா? வயதானவர்கள் எதற்கெடுத்தாலும் கோபப்படுவார்கள், டென்சனுடன் இருப்பதால்தான், அவர்களுக்கு நரை முடி ஏற்படுகிறது. ஆகவே அத்தகைய டென்சனை சிறுவயதிலேயே வந்தால், நரை முடியும் வந்துவிடும். எனவே எப்போதும் ரிலாக்ஸ் ஆக இருக்கவேண்டும்.

தற்போதைய ஆய்வு ஒன்றில் தலையில் அதிகமான அளவில் பொடுகு இருந்தால், விரைவில் நரை முடி வந்துவிடும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே எப்போதும் தலையை சுத்தமாக, பொடுகில்லாமல் வைத்துக்கொள்ளவேண்டும். நரை முடி உடலில் போதிய ஊட்டச்சத்துக்கள் இல்லாவிட்டாலும் வரும். கூந்தல் வெள்ளையாவதற்கு உடலில் ஹொப்பர் சத்து குறைவாக இருப்பது முக்கிய காரணம் என்று தற்போதைய ஆய்வு ஒன்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஹொப்பர்தான், உடலில் உள்ள நிறமூட்டும் மெலனின் என்னும் நிறமியை அதிகம் உற்பத்தி செய்கிறது. ஆகவே இத்தகைய சத்து குறைபாட்டினால், கூந்தலுக்கு நிறமளிக்கும் மெலனின் அளவு குறைந்து, வெள்ளை முடி ஏற்படுகிறது. மேலும் இந்த ஹொப்பர் சத்து (copper) கடல் உணவுகளில் அதிகம் உள்ளது. அதிலும் நண்டில் அதிகம் உள்ளது. சைவ உணவு என்றால் எலுமிச்சை மற்றும் காளானில் இந்த சத்து உள்ளது. கருமையான கூந்தலுக்கான இரகசியம் கறிவேப்பிலை. இத்தகைய கறிவேப்பிலையை சமையலில் சேர்த்தும் சாப்பிடலாம் அல்லது வெதுவெதுப்பான எண்ணெயில் ஊறவைத்து, கூந்தலுக்கு தடவிவரலாம்.

## குஜராத்தி குடைமிளகாய் பொரியல்

**தேவ்வயான பொருட்கள்:**

சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள் நிற குடைமிளகாய் - 2 கப் (நறுக்கியது), கடலை மா - 3 மேசைக்கரண்டி, மிளகாய் தூள்-2 கரண்டி, சீரகப்பொடி -1 மேசைக்கரண்டி, மல்லித்தூள் - 1 கரண்டி, வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது), கடுகு - 1/4 கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1 மேசைக்கரண்டி

**செய்முறை:**

முதலில் கடலை மா, மிளகாய் தூள், சீரகப்பொடி, மல்லித்தூள் மற்றும் உப்பு ஆகியவற்றை ஒரு பௌலில் போட்டு கலந்து கொள்ளவேண்டும்.

பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் கலந்து வைத்துள்ள கடலை மாவைப் போட்டு வாசனை வரும் வரை வறுத்து, தனியாக ஒரு பௌலில் போட்டு வைத்துக் கொள்ளவேண்டும். பின்பு மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகுசேர்த்து தாளித்து, பின் வெங்காயத்தைப் போட்டு மென்மையாகும்வரை வதக்கவேண்டும்.

பிறகு குடைமிளகாய் சேர்த்து பாதியாக வேகும்வரை வதக்கி விடவேண்டும். பின் அதில் வறுத்து வைத்துள்ள மா மற்றும் உப்பு சேர்த்து நன்கு கிளறி, சிறிது நேரம் அனைத்துப்பொருட்களும் ஒன்று சேரும்வரை வேகவைத்து இறக்கினால், சுவையான குஜராத்தி ஸ்டைல் குடைமிளகாய் பொரியல் தயார்.

**250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-408

**கேள்வி:** எந்த சத்துக் குறைவால் முடி வெள்ளையாகிறது?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 02. 03. 2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 408
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 406 இற்கான விடை :- 99 கசையடிகள்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- எம்.சாளினி, உடப்புசல்லாவ, நுவரெலியா

408

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ. அட்டை இல : ........................................
விடை : ........................................
........................................
கையொப்பம் : ........................................

தகுதியானவராக ஆக்கப்படுகிறார் என்றால் இந்த தேர்தல் முறை எப்படி மக்களாட்சியாக இருக்கமுடியும்?

இவரும் இவரைப் போலவே தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களும்தான் இந்தியாவை ஆளும் மக்களாட்சி. இந்திய மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஆட்சியாளர்கள். இது எவ்வளவு கேலிக்கூத்து?, இது மக்களாட்சி தானா? மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு! என்றெல்லாம் நாம் அடிக்கடி சொல்லிக்கொள்கிறோமே... இதெல்லாம் எவ்வளவு மோசமான ஏமாற்றுவித்தை!. மேலே சொல்லியிருக்கும் எடுத்துக்காட்டு ஒரு கற்பனை அல்ல, இதோ சில உண்மையான புள்ளிவிவரங்கள்:

* இன்றைக்கு ஆளும் காங்கிரசு பெற்ற மொத்த வாக்குகள் 28.6%. இது 2004இல் காங்கிரசு பெற்ற வாக்குகளைவிட 2% அதிகம். அவ்வளவுதான்.

* பீகாரில் நாவ்டா பார்லிமெண்ட் தொகுதியில் வெற்றி பெற்ற பி.ஜே.பி வேட்பாளர் போலாசிங் பெற்ற வாக்குகள் வெறும் 10% தான்.

* முரளி மனோகர் ஜோஷி, லால்ஜி தாண்டன், குக்கும்தேவ் நாராயண் சல்மான் குர்ஷித், பரூக் அப்துல்லா ஆகியோர் வெற்றி பெற்றது 1/8 வாக்குகள் மூலம்தான்.

* மீராகுமார் பெற்ற வாக்குகள் 1/8.

* 50% வாக்குகள் பெற்று நாடாளுமன்றம் வந்திருப்பவர்கள் மொத்தமே 5 பேர்தான் நாகாலந்து, சிக்கிம், வங்காளம் தாலா ஒருவரும் திரிபுராவிலிருந்து 2 பேரும்.

* 145/573 பாராளுமன்ற உறுப்பினர்கள் 20வீதத்துக்கும் குறைவாக ஓட்டுகள் பெற்று நாடாளுமன்றம் வந்தவர்கள்.

அப்படியானால் 20 அல்லது 30 விழுக்காடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மீதி 80 அல்லது 70 விழுக்காடு மக்களையும் சேர்த்தே ஆட்சி செய்கிறார்கள் மக்களாட்சி என்ற பெயரால்!.

* அடிக்கடி தேர்தலில் தோல்வியைச் சந்திக்கும் போதெல்லாம் இந்திய அரசியல் தலைவர்கள் சில உண்மைகளை உதிர்ப்பார்கள்... "நாங்கள் தோல்வி அடைந்துவிட்டோம் என்று நினைக்காதீர்கள். கடந்த தேர்தலைவிட இந்த தேர்தலில் நாங்கள் பெற்ற வாக்குகள் அதிகம் என்ற உண்மை மக்களிடம் எங்களுக்கிருக்கும் செல்வாக்கை உறுதி செய்கிறது" இத்தியாதி வசனங்கள் எழுதப்படும்.

இந்திய அரசியல் தலைவர்கள் சொல்வதில் எதில் உண்மையிருக்கிறதோ இல்லையோ இதுமட்டும் உண்மைதான்!! அதுமட்டுமல்ல, இந்திய நாட்டில் தேர்தல் வெற்றி என்பது எந்த ஓர் அரசியல் கட்சியின் கொள்கை கோட்பாடுகள் தேர்தல் அறிக்கைகள் இவைகளின் அடிப்படையில் அமைவதாக நாம் நினைப்பதும் தவறு. (இந்திய அரசியல் கட்சிகளுக்கு கொள்கை கோட்பாடுகள் இருக்கிறதா என்பது அடுத்த கட்ட கேள்வி.) கூட்டணியில் சேரும் அரசியல் கட்சிகள் அல்லது அக்கட்சிகளின் தலைவர்களின் தனிப்பட்ட செல்வாக்கு காரணமாக ஏற்பட்டிருக்கும் தாக்கம் இத்துடன் தொகுதிவாரியாக இருக்கும் சாதிகளின் கணக்கெடுப்பு இப்படியாக பல்வேறு புள்ளி விவரங்களைச் சேகரித்து எந்தக் கூட்டணி சரியாக கணக்கைப் போடுகிறதோ அந்தக் கூட்டணி தேர்தலில் வெற்றி பெறமுடியும் என்பதையும் கடந்த தேர்தல் புள்ளிவிவரங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.


எடுத்துக்காட்டாக , 2006 மற்றும் 2011 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகளையோ அல்லது தேர்தல் கமிஷன் வெளியிட்டிருக்கும் தேர்தல் முடிவுகளின் புள்ளிவிவரங்கள், அரசியல் கட்சிகள் பெற்ற ஓட்டுகளின் விகிதாசாரம் இவற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தால் இந்தியர்கள் மக்களாட்சி என்றபெயரால் என்ன நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

## இந்தியாவின் தற்போதைய தேர்தல் முறையில் வாக்களிப்பு என்ற தனிமனித உரிமை பறிக்கப்படுகிறது

இந்தியாவின் தற்போதைய தேர்தல் முறையே இந்தியருக்குப் போதுமானது. மிகவும் கடுமையாக தேர்தல் விதிகளைப் பின்பற்றினால்போதும் என்று சிலர் சொல்வதுண்டு. எழுத்தாளர் திரு ஞானியின் 'ஓ' போடு ஓரியக்கமாகவே வளர்தெடுக்கப்பட்ட காலத்தில், 49 'ஓ' படிவம் என்பது தேர்தலில் போட்டியிடும் எந்த உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க விரும்பவில்லை என்பதைப் பதிவுசெய்வது. ஆனால் ஓட்டுரிமையில் இருக்கும் இரகசிய வாக்களிப்பு என்ற தனிமனித உரிமை இங்கே பறிக்கப்படுகிறது. 49 'ஓ' படிவத்தை நிரப்பும் வாக்காளர் தன்னைப் பற்றிய முழுவிவரத்தையும் இன்னொரு படிவத்தில் நிரப்பவேண்டும். மேலும் கொந்தளிப்பு நிறைந்த தொகுதியில் துணிந்து 'ஓ' போட யார்தான் முன்வருவார்கள்? அப்படியே 'ஓ' போட்டாலும் அது வாக்காளர்களின் அதிருப்தியை மட்டுமே காட்டும் அடையாளம் மட்டும்தாம். அது வெற்றி, தோல்வியைப் பாதிக்காது என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்திவிட்டது. மேலும் இன்றைய இந்திய வாக்குப்பதிவுகள் அனைத்தும் இயந்திரமயமான நிலையில் இந்தியர்கள் ஓட்டுப்பதிவு மிஷினில் "யாருக்கும் ஓட்டுப் போடவில்லை" என்று வாக்காளர் தெரிவுசெய்யும் வசதி இல்லை. இந்திய அரசியல் தலைவர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதை நாம் மிகவும் சாதாரணமாகவே பார்த்து பழகிவிட்டோம். எப்படியும் நாடாளுமன்றம் சென்றுவிடவேண்டும் என்றநிலையில் தற்காப்புக்காக இரண்டு தொகுதியில் போட்டியிடுவதாக சொல்லப்படுகிறது. இச்சூழலில் இரண்டு தொகுதியிலும் வெற்றி பெற்றுவிடுவார். அதன்பின் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபைக்கோ நாடாளுமன்றத்திற்கோ போவார், இன்னொரு தொகுதியில் மீண்டும் தேர்தல் வரும். இந்த ஒரு குறிப்பிட்ட தலைவரின் தற்காப்புக்காக இன்னொரு தேர்தல், அந்த தேர்தலுக்கு ஆகும் செலவு? யார் தலையில்!

## தேர்தல் முறை சீர்திருத்தப்படவேண்டும்

அரசியல் கட்சிகள் அனைத்திலுமே அடிமட்டத் தொண்டர்களும் ஒரு சில விதிவிலக்கான ஊழல் படியாத நபர்களும் இல்லையா என்று கேட்டால் இருக்கிறார்கள், ஆனால், அவர்களால் தேர்தலில் நிற்கவே முடியாது. தேர்தலில் நிற்க செலவுசெய்யும் தகுதி இருக்கவேண்டும். இதுவும் ஒரு காரணம்தான் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே, ஒவ்வொரு அரசியல் கட்சியிலும்கூட தகுதியற்றவர்கள் பதவிகளை எட்டிப்



பிடிப்பது எளிதாக இருக்கிறது. இதற்கும் இன்றைய தேர்தல் முறையே காரணம். இக்கருத்தை முன்வைப்பவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு ஓட்டுமுறையை அறிமுகப்படுத்த விரும்புகிறார்கள்.

முதல் வாக்குச்சீட்டு இன்றைய தேர்தல் முறையாகவும் இன்னொரு வாக்குச்சீட்டு தான் விரும்பும் அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுப்பதாகவும் அமையும். அதன்படி அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு முன்பே அவர்களின் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்துவிடவேண்டும். இப்பட்டியல் அதன்பின் மாற்றத்திற்குட்பட்டது அல்ல. இந்த இரண்டாவது வாக்குச்சீட்டின் மூலம் விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் அவரவர் பட்டியலிலிருந்து வரிசைப்படி உறுப்பினர்களை அனுப்பலாம். இடைத்தேர்தல் என்பதே இல்லை. இடைத் தேர்தலுக்கான சூழல் ஏற்படும்போது அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியின் பட்டியலிலிருந்து உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்திய தேர்தல் முறையின் மாற்றங்கள் அல்லது சீர்திருத்தங்கள் குறித்து பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மக்களாட்சி தேர்தல் முறைகளில் 80க்கும் அதிகமான நாடுகள் இன்று விகிதாசார தேர்தல் வாக்குமுறைக்கு மாறிவிட்டன.

1930களில் பண்டித் ஜவஹர்லால் நேரு இந்திய சமூகத்திற்கு விகிதாசார தேர்தல் வாக்குமுறை ஏற்றது என்பதை வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டிருக்கிறார். 1999களில் நேஷனல் லோ கமிஷன் விகிதாசாரத் தேர்தல் வாக்குமுறையை இந்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. ராஜ்ய சபாவில் பொதுவுடமை கட்சியைச் சார்ந்த தோழர் டி.ராஜா அவர்கள் இலஞ்ச ஒழிப்பு குறித்துப் பேசும்போது, தேர்தல் முறையில் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் விகிதாசார தேர்தல் வாக்குமுறைக்கு மாறுவதைப் பற்றியும் பேசியிருக்கிறார்.

இந்திய தேர்தல் முறை சீர்திருத்தங்கள் குறித்து சிறிது காலத்திற்கு முன்பு வெளிவந்திருக்கும் செய்திகள் சில:

தேர்தல் முறை சீர்திருத்தங்கள் குறித்து டில்லியில் நடந்த கருத்தரங்கில் விகிதாசார தேர்தல் முறை குறித்த கையேட்டை வெளியிட்டு பேசிய இந்தியத் தேர்தல் தலைமை ஆணையர் Dr. S.Y Quraishi விகிதாசார தேர்தல் முறை குறித்து ஆய்வுசெய்ய ஒரு கமிட்டி நிறுவப்படும் என்று உறுதி அளித்திருக்கின்றார். பொதுவுடமை கட்சிகள் ஏற்கனவே இம்முறையை சிபாரிசு செய்கின்றன. நாடாளுமன்றத்தின் எதிரணி தலைவராக இருக்கும் திருமதி. சுஷ்மா சுவராஜ் அவர்கள் விகிதாசார தேர்தல் முன்றயை பி.ஜே.பி கட்சியின் பொலிஸி கமிட்டி ஏற்றுக்கொள்ளும் என்று 17, மே,2012இல் அவருடனான சந்திப்பின்போது உறுதி அளித்திருக்கிறார்.

தேர்தல் முறையில் மாற்றங்கள் மட்டுமே தீர்வாகிவிட முடியாது, இங்கே அரசியல் கட்சிகளில் மாற்றங்கள் ஏற்படாதவரை. அரசியல் கட்சிகளில் மாற்றங்களைக் கொண்டுவரும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு மட்டுமே உள்ளது. அரசியல் கட்சிகளின் நிதிநிலையைக் கண்காணிக்கும் அதிகாரம் தேவை என்ற கருத்தை மிகவும் தெளிவாக முன்வைத்து Association of Democratic reforms (ADR) அமைப்பு National Election watch உடன் இணைந்து நம் தேர்தல் ஆணையத்திற்கு தங்கள் அறிக்கையை கடந்த ஏப்ரல் 2011இல் கொடுத்திருக்கிறார்கள். தேர்தல் முறை சீர்திருத்தங்கள் குறித்து ஏற்கனவே வெளிவந்த 7 கமிஷன்களின் அறிக்கையையும் கணக்கில் கொண்டு சற்றொப்ப 11 வருட களஆய்வுகளின் பின்னணியில் இந்த அறிக்கை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. மிகச்சிறந்த களஆய்வும் அறிக்கையும். தேர்தல் ஆணையம் என்ன செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து நம்பிக்கையுடன் பார்ப்போம்.

மக்களாட்சி என்ற பெயரால் இந்தியாவில் யாரை யார் ஏமாற்றுகிறார்கள்?, தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்கிறார்களா?, இந்திய தேர்தல் முறையை இந்தியர்கள் உண்மையாகவே மக்களாட்சிக்கு மிகவும் நெருக்கமான முடிவுகளைத் தரும் தேர்தல் முறையாக மாற்றவேண்டிய தருணம் வந்துவிட்டது.

## 2014 இந்தியத் தேர்தலை முடிவு செய்யும் கணக்கு!

நாடாளுமன்ற தேர்தல் என்பது தேசியக் கட்சிகளுக்கு இடையிலான நேரடி மோதல் என்றநிலை இந்தியாவில் இது வரையிலான தேர்தல்களில் 1977, 1980, 1989 மற்றும் 1998 அல்லது 1999 தேர்தல்களில் மட்டுமே இருந்துவந்துள்ளது. கடந்த தேர்தலை அத்வானி எதிர் மன்மோகன் தேர்தலாக கட்டமைக்க முயன்ற பா.ஜ.க பெரும் பின்னடைவை சந்தித்தது. இந்த தேர்தலையும் ஆளுமைகளுக்கு இடையிலான மோதலாக சித்தரித்து வெற்றிபெறலாம் என முயன்றால் அது பிழையான உத்தியாகவே (Strategic Error) முடியும். காரணம் மிக எளிது. இந்த தேர்தல் ஆளுமைகளுக்கு (மோடி VS ராகுல்) இடையிலான தேர்தலாக மட்டுமல்ல காங்கிரஸ் VS பா.ஜ.க என்ற இருபெரும்(?) கட்சிகளுக்கு இடையிலான தேர்தலாக கூட நிகழப்போவது இல்லை. கடந்த சில ஆண்டுகளாகவே இக்கட்சிகள் மாநிலக் கட்சிகளிடம் தங்களின் தளங்களை இழந்துவிட்டு இருக்கின்றன.

தமிழகம், உபி, பிகார் ஆகிய மூன்று மாநிலங்களின் முதன்மையான போட்டி என்பது அங்கு வலுவாக உள்ள பிராந்தியக் கட்சிகளுக்கு இடையில்தான். அதாவது ஜெ எதிர் கலைஞர் டைப் தேர்தல்தான். பொன்னார், ஞானதேசிகன் எல்லாம் மற்றும் பலர் லிஸ்டில் தான் இங்கே. இந்த மாநிலங்களின் மொத்த லோக்சபா தொகுதிகள் 160.

ஒரிஸ்ஸா, ஹரியானா, ஆந்திரா, ஜம்மு-காஷ்மீர், அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றில் போட்டி என்பது காங்கிரஸ் எதிர்பிராந்தியக் கட்சிகள் என்பதாக உள்ளது. இந்த மாநிலங்களின் மொத்த தொகுதிகள் 102. மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களில் போட்டி என்பது காங்கிரஸ் எதிர் இடதுசாரி எதிர்பிராந்தியக் கட்சி என்பதாக மும்முனை போட்டி. இந்த மாநிலங்களின் மொத்த தொகுதிகள் 65.

கர்நாடகா, பஞ்சாப், மகராஷ்டிரா, டெல்லி, ஜோர்கண்ட் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் (அ) காங்கிரஸ் + பிராந்தியக் கட்சிகள் எதிர் பா.ஜ.க + பிராந்தியக் கட்சிகள் என்பதாக போட்டி ஏற்படுகிறது. இங்கு மொத்த தொகுதிகள் 111.

ஆக, நேரடி மோதலில் காங்கிரஸ்-பா.ஜ.க ஈடுபடவுள்ள தொகுதிகள் என்பவை குஜாரத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட், ஹிமாச்சல் பிரதேசம், சட்டிஸ்கர் மற்றும் கோவா ஆகிய மாநிலங்கள் மற்றும் சில யூனியன் பிரதேசங்களில் உள்ள 105 தொகுதிகளில் மட்டும்தான். அதாவது மொத்த தொகுதிகளான 543 தொகுதிகளில் ஐந்தில் ஒரு பங்கில் மட்டுமே.

இதில் மற்றும் ஒரு பெரிய வேடிக்கை தமிழகம், கேரளம், ஆந்திரம், ஒரிசா, மேற்கு வங்கம், ஜம்மு-காஷ்மீர், அஸ்ஸாம், வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றின் மொத்த சட்டமன்ற தொகுதிகள் எண்ணிக்கை 1700. அதாவது 1700 MLA தொகுதிகள். இவற்றில் பா.ஜ.க பெற்றுள்ள MLA க்கள் வெறும் 20 பேர் மட்டுமே. பா:ஜ.க.வுக்கு இரண்டு சதவீத சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ள இந்த மாநிலங்களின் மொத்த நாடாளுமன்ற தொகுதிகள் எண்ணிக்கை மிகச் சரியாக 200. இங்கெல்லாம் மோடி என்பவர் NO ENTITY. ஆனாலும் தங்களுக்கு MLA-க்களே இல்லாத இந்த மாநிலங்களில் இருந்து எல்லாம் MP-க்கள் கொட்டோ கொட்டுன்னு கொட்டப்போவதாக அக்கட்சியினர் சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் ஆகியவற்றில் முழங்கி வருவது எவ்வளவு அபத்தம்.

காங்கிரசின் பலம் குறைந்தபட்சம் அது நானூற்று ஐம்பது தொகுதிகள்வரை வெற்றி அல்லது தோல்வியை எதிர்பார்த்து போட்டியிடலாம் என்ற அளவிற்கு அமைப்புரீதியான வலுவில் உள்ளது. பலவீனம் அத்தனை தொகுதிகளிலும் தனது முழுக்கவனத்தையும், பலத்தையும் செலவிட்டாகவேண்டும்.

பா.ஜ.க.வின் பலம் அது காங்கிரசை மட்டுமே நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டியுள்ள 105 தொகுதிகள் மற்றும் கூட்டணி கட்சிகள் துணையுடன் காங்கிரசை எதிர்க்க வாய்ப்புள்ள 140 தொகுதிகள் என சுமார் 240 தொகுதிகளில் மட்டும் தனது மொத்த கவனத்தையும் குவித்தால் போதும். பா.ஜ.க.வின் பலவீனம் மீதமுள்ள 300 தொகுதிகளில் அது டெபோசிட் திரும்பப் பெறுவதே பெரும் போராட்டமாக இருக்கும் என்பதே.

இந்த தேர்தலில் காங்கிரஸ், பா.ஜ.க ஆகிய இரு கட்சிகளும் தலா 150 இடங்களைத் தாண்டவே குட்டிக்கரணம், தோப்புக்கரணம் எல்லாம் போட வேண்டியிருக்கும். நடைபெற உள்ளது நாடாளுமன்றத் தேர்தல் அல்ல. இந்திய நாடாளுமன்றத்திற்கு நடைபெறும் மாநில தேர்தல்கள்.



# இயற்கையை இயக்கிய...

## மறக்க முடியாத இயக்குநர்!

**தமிழ்** சினிமாவில் இயற்கையை இயக்கிய மறக்கமுடியாத இயக்குநர் பாலுமகேந்திரா! அவர் தனது 74 வயதில் காலமாகியுள்ளார்.

1939ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்து வளர்ந்தார். புகைப்படம் எடுப்பதில் இளவயது முதலே ஆர்வம் மிகுதியாக இருந்ததால், அவரது தந்தை ஒரு கெமரா பரிசாக அளித்தார். அதனைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக புகைப் படங்கள் எடுத்துவந்தார். லண்டன் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்து விட்டு, பூனேவில் ஒளிப்பதிவாளர் பிரிவில் படித்து, அதில் தங்கப் பதக்கம் வென்றார்.

திரைத்துறையில் நுழைந்தபின், ஒளிப்பதிவில் பாலுமகேந்திரா காலம் ஆரம்பித்தது. மலையாளத் திரையுலகில் 'நெல்லு', 'ராஜஹம்சம்', 'மக்கள்', 'ராகம்' எனத் தொடர்ச்சியாக இவரது ஒளிப்பதிவு பேசப்பட்டது. 'நெல்லு' படத்தில் பாலு மகேந்திராவின் ஒளிப்பதி விற்காக தேசிய விருது மற்றும் கேரள அரசின் சிறந்த ஒளிப்பதிவாளர் விருதினை வென்றார்.

ஒளிப்பதிவினைத் தொடர்ந்து பாலு மகேந்திரா தன்னை இயக்குநராக வெளிப்படுத்திய கன்னடப் படம் 'கோகிலா'. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகி வெள்ளி விழா கண்டது.

தமிழில் பாலு மகேந்திரா இயக்கிய முதல் படம் 'அழியாத கோலங்கள்'. அதனைத் தொடர்ந்து இயக்குநராக தமிழில் பல படங்களை இயக்கினார். 'மூடுபனி', 'மூன்றாம் பிறை', 'நீங்கள் கேட்டவை', 'உன் கண்ணில் நீர் வழிந்தால்', 'ரெட்டை வால் குருவி', 'வீடு', 'சந்தியா ராகம்', 'வண்ண வண்ண பூக்கள்', 'மறுபடியும்', 'சதிலீலா வதி', 'ராமன் அப்துல்லா', 'ஜூலி கணபதி', 'அது ஒரு கனா காலம்' மற்றும் 'தலை முறைகள்' ஆகிய படங்கள் தமிழில் பாலுமகேந்திரா இயக்கிய படங்கள். இவர் இயக்கத்தில் கமல் நடித்த 'மூன்றாம் பிறை' படம்தான் கமலுக்கு சிறந்த நடிகராக முதல் தேசிய விருதினை பெற்று தந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழில் படங்கள் இயக்கியது மட்டு மன்றி மலையாளம், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட மொழிகளிலும் படங்கள் இயக்கியிருக்கிறார். படங்கள் இயக்குவது மட்டுமன்றி, பல்வேறு இயக்குநர்கள் படங்களுக்கு ஒளிப்பதிவும் செய்து வந்தார்.

எப்போதுமே படங்களுக்கு ஒளிப்பதிவு செய்யும்போது, விளக்குகள் உப யோகிக்கவேமாட்டார் பாலுமகேந்திரா. என்ன வெளிச்சம் இருக்கிறதோ அதை வைத்தே காட்சிப்படுத்துவார். இவரின் இந்த திறமையை பார்த்து பல்வேறு இயக்குநர்கள் இவரிடம் பணியாற்ற முன்வந்தனர். இவரது படங்களில் கறுப்புநிற நாயகிகள்தான் இருப்பார்கள். கறுப்பு தான்பா நம்ம ஊர் கலரு என்பார் செல்லமாக. பல்வேறு பத்திரிகையாளர் சந்திப்பில் இதே கருத்தை கூறியிருக்கிறார்.

பாலுமகேந்திரா இயக்கத்தில் இறுதியாக வெளியான படம் 'தலை முறைகள்'. அத்திரைப்படத்தின் மூலமாக இயக்குநர், ஒளிப்பதிவாளர் பாலுமகேந்திரா தன்னை ஒரு நடிகராகவும் முன்னிறுத்திக் கொண்டார். அதுமட்டுமன்றி, முதன் முறையாக பாலுமகேந்திரா டிஜிட்டல் கெமராவில் ஒளிப்பதிவு செய்த படம் 'தலைமுறைகள்'. தன்னுடைய இறுதி காலத்திலும் படத்தில் நடித்து, இயக்கி, ஒளிப்பதிவுசெய்து, எடிட்டிங் என தனது படவேலைகள் அனைத்தையும் தானே செய்தார்.

'தலைமுறைகள்' படத்தின்மூலமாக யாரும் தமிழை மறக்காதீர்கள் என்ற கருத்தை முன்வைத்தார். அப்படத்தில் மரணம் அடையும்போது பேரனை அழைத்து "தமிழை மறந்துடாதீங்கப்பா...! இந்த தாத்தாவையும் மறந்துடாதீங்கப்பா...!" என்பார். அதுவே அவர் தமிழ் திரை உலகிற்கு கூறவிரும்பியது எனலாம்.

படத்தின் பத்திரிகையாளர் காட்சிக்கு வந்திருந்த பாலு மகேந்திரா, "உண்மையில் கிராமத்தில்தான் தமிழ் இருக்கிறது. தமிழை யாரும் மறக்கக்கூடாது" என்று கண் கலங்கினார். காட்சி முடிந்தவுடன் பல்வேறு பத்திரிகையாளர்கள் அவருடன் இணைந்து புகைப்படம் எடுக்க விரும்பினார்கள். சிலநேரம் கழித்து, "ஏம்பா.. நான் சாகமாட்டேன். கவலைப் படாதீங்க... இன்னும் 5 கதைகள் வைச்சிருக்கேன் இயக்குவதற்கு." என்றார். அவர் இயக்குவதாக வைத்திருந்த கதைகள் அனைத்துமே கண்டிப்பாக தமிழுக்காக மட்டுமே இருந்திருக்கும்.

இறப்பதற்கு சில மணிநேரத்திற்கு முன்னர் தன்னுடைய உதவியாளர் களை அழைத்து அனைவருடனும் புகைப்படம் எடுத்திருக்கிறார்.

இயக்குநர் பாலா, ராம், வெற்றி மாறன், சீனு ராமசாமி என தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி இயக்கு நர்கள் பலரும் இவரது பட்டறையில் தொழில் கற்றவர்கள்தான். இதுவரை பாலாவின் எல்லா படங்களின் இசையையும் வெளியிட்டது பாலு மகேந்திராதான்.

இன்று பாலுமகேந்திரா மறைந்தாலும், ஒளிப்பதிவில் அவர்செய்த சாதனைகள் தமிழ் சினிமா சரித்திரத்தில் மறையாது. பல்வேறு ஒளிப்பதிவாளர் கள் தற்போது இருந்தாலும், இருக்கிற வெளிச்சத்தை வைத்து சிறப்பாக ஒளிப்பதிவு செய்ய தெரிந்த ஒரே ஒளிப்பதிவாளர் பாலு மகேந்திரா.

பாலு மகேந்திரா என்னும் திரைச் சிற்பி இருந்த இடம் இன்று வெறுமை யாகியிருக்கிறது. அந்த இடத்தை நிரப்ப நிறைய இயக்குநர்கள் முன் வருவதுதான் பாலுமகேந்திராவுக்கு நாம் கொடுக்கும் சிறந்த வழி அனுப்புதலாக இருக்கும்.

# ஆகாயத்திலும் நடக்கிறது அத்துமீறல்!

**கிண்டல்,** கேலி, உள் நோக்கத்துடன் உரசுதல், தகாத வார்த்தைகளால் உடல் அமைப்பை வர்ணனை செய்தல் என்று பெண்களிடம் அத்துமீறி நடந்துகொள்ளும் ஆண்களின் கைவரிசை அலுவலகம், சாலை, பேருந்து போன்ற இடங்களைத் தொடர்ந்து ஆகாயத்திலும் அரங்கேறி வருகிறது.

இந்தியாவின் முக்கிய விமானச் சேவை நிறுவனங்களில் ஒன்றான ஜெட் ஏர்வேஸில் பணிபுரியும் விமானப் பணிப் பெண்கள் மீதுதான் அதிக அளவில் அத்துமீறல் சம்பவங்கள் நடந்துள்ளதாகச் செய்தி வெளியானது. பணிப் பெண்கள் மற்றும் விமானச் சேவைக் குழுவிலுள்ள பெண் ஊழியர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் 84 வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. இண்டிகோ நிறுவனத்தில் 48 வழக்குகளும், இந்திய அரசு நிறுவனமான ஏர் இந்தியாவில் 19 வழக்குகளும் பதிவாகியுள்ளதாக விமான அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானப் பணிப்பெண் களுக்கு எதிராக நடக்கும் பாலியல் உள்ளிட்ட வன் முறைகள் உலகம் முழுவதும் சகஜமாக இருப்பது பல செய்திகள்மூலம் புலப்படுகிறது. பயணிகளை அவரவர் இடத்தில் வசதியாக உட்கார வைத்துவிட்டு அவர்களை உபசரித்துக் கவனித்து உதவுவதே ஒரு பணிப் பெண்ணிண் கடமை. பயணத்தின்போது பயணிப் போருக்கு எந்தத் தேவை ஏற்பட்டாலும், சீட்டைச் சாய்த்து ஹாயாக உட்காரவைப்பது முதல் கழிப்பறைக்கு வழி சொல்வதுவரை இன்முகத்துடன் இவர்கள் செய்ய வேண்டியுள்ளது. இதைப் பயன்படுத்திக்கொண்டு ஆண்கள் பலர் தங்கள் காமவெறியை இந்த அப்பாவிப் பணிப் பெண்கள் மீது பிரயோகிக் கின்றனர். இதுபோன்ற பெரும்பாலான சம்பவங்களில் முக்கிய புள்ளிகளும், அரசியல் வாதிகளும், வயதில் மூத்தவர் களும் ஈடுபடுகிறார்கள்.

2010ஆம் ஆண்டு, இந்தியாவின் கோவாவைச் சேர்ந்த மூன்று கால்பந்து வீரர்கள் மும்பை வழி விமானத்தில் பணிப்பெண் ஒருவரைத் தொடர்ந்து தொந்தரவு செய்ததை அடுத்து, மும்பை பொலிசார் அம்மூவரையும் கைது செய்து வழக்குப் பதிவுசெய்தனர்.

விமானப் பணிப் பெண்ணிடம் போதையில் அத்துமீறியதற்காகவும் விமானத்தில் புகைப்பிடித்து



அவமானப்படுத்தியதற்காகவும் கனடாவைச் சேர்ந்த பிரபலப் பொப் பாடகர் ஜஸ்டின் பீபரை நியூ ஜெர்ஸி பொலிசார் சமீபத்தில் கைது செய்தனர். 2004ஆம் ஆண்டு, தாய் விமான நிறுவனப் பணிப்பெண்ணிடம் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலதிபர் தவறாக நடந்து கொண்ட சம்பவத்தில் பிரிவு 354இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டும் போதிய ஆதாரம் இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டார்.

பிரபலங்கள் மட்டுமல்ல, பைலட்டுகளும்கூட விமானப் பணிப்பெண்களுக்குப் பாலியல் தொந்தரவுசெய்து வழக்குகளில் சிக்கியுள்ளார்கள். 2010இல் தனியார் விமான நிறுவன பைலட் ஒருவர் தவறாக நடந்துகொண்ட தற்காகப் பணி நீக்கம் செய்யப் பட்டார். இப்படிப் பல வழக்குகள் அவ்வப்போது செய்தியாக வந்துகொண்டு இருந்தாலும், பெரும்பாலான நேரங்களில் தவறு இழைத்தவர் தண்டனை யின்றித் தப்பித்துவிடுகிறார்.

பணிப்பெண்ணின் புகாரின் அடிப்படையில் விமானச் சேவை நிறுவனம், விமான நிலைய மத்தியப் பாதுகாப்புப் படை அதிகாரிகளிடம் குற்றவாளியை ஒப்படைத்துவிடுவது வழக்கம். பல நேரங்களில் தவறு செய்தவரை வெறுமனே எச்சரித்து விட்டு, விமான நிலைய அதிகாரிகள் வெளியே விட்டுவிடுகின்றனர்.

விமானத்துக்குள் பயணி களால் ஏற்படும் சிறுசிறு அத்து மீறல் சம்பவங்களைப் பணிப் பெண்கள் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவது நல்லது என்றே பல நிறுவனங்கள் விரும்புவதாகவும் தெரிகிறது. ஏனெனில், ஒவ்வொரு முறை இதுபோன்ற செய்தி வரும் போதும், விமான நிறுவனப் பெயரும் வெளிவருவதால் வாடிக்கையாளர்கள் மத்தியில் அவப்பெயர் உருவாகி வருமானம் பாதிக்கப்பட்டுவிடும் என்று அஞ்சுவதே இதற்குக் காரணம். பல சம்பவங்களைப் பெரிதாக்க விரும்பாத நிறு வனங்கள் பணிப்பெண்களுடன் பேசித் தீர்த்துவிடுவதாகவே பெண் ஊழியர்கள் தெரிவிக் கின்றனர். உணவுடன் மதுவும் வழங்கப்படுவதால், பன்னாட்டு விமானங்களில் பாலியல் அத்து மீறல்கள் பல மடங்கு அதிக மாக உள்ளன என்பதும் நிஜம்.

வேலையின் ஒரு பகுதியாக, அரிதாரம் பூசி, சிரித்த முகத்துடன் எல்லோரையும் சகித்துக் கொள்ளும் விமானப் பணிப் பெண்களைப் போகப் பொருளாகவே நினைக்கும் ஆண்கள் ஆகாயத்தில் என்ன செய்தாலும் தவறில்லை என்று நினைத்துவிட்டார்களா? வெளியில் புன்னகையோடும் உள்ளே குமைச்சலோடும் இருந்த பணிப்பெண்களை, இதுபோன்ற அத்துமீறல்கள் தற்கொலைவரை தூண்டிய நிகழ்வுகளும் நடந்திருக்கின்றன. இந்த அத்துமீறலுக்கு விமானச் சேவை நிறுவனங்கள் முடிவு கட்டவேண்டும்.



## விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா

**ஐ.பி.எல்** சூதாட்ட சர்ச்சைகள் கடந்த ஆண்டு பரபரப்பாகப் பேசப்பட்டு, இன்று வரை தொடர்ந்து அதே பரபரப்பைக் குறையாமல் தொடர்கின்றன. அண்மைய செய்திகளின்படி மிகப் பிரபல்யமான ஆறு இந்திய கிரிக்கெட் வீரர்கள் இதோடு சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவர்களுள் ஒருவர் இன்றைய அணியில் இருக்கிறார் என்பதும் ஒரு செய்தி. இந்த விடயங்கள் எல்லாம் ஐ.பி.எல் சூதாட்டம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குழுவினர், நீதிமன்றத்துக்கு முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இது பற்றி நீதவான் கூறுகையில், மேலதிக விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறியுள்ளார்.

இந்த விசாரணையிண் போக்கில் கிரிக்கெட் வீரர்களைப் பேட்டி காண்கின்ற ஒரு அச்சு ஊடகவியலாளரின் உதவி பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.



சூதாட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்ட வீரர்களின் குரல்களை இவரால் இலகுவாகக் கண்டுபிடிக்க இயலும் என்பதே இவரின் தெரிவுக்கான காரணமாகும். இதன்மூலம் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடியவரும், தற்போது அணியில் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருப்பவருமான ஒருவரின் குரல் இனங்காணப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் இந்த விடயத்தில் ஊடகவியலாளரின் நிலைமை இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையாகி விட்டது போலத் தெரிகிறது. மிக இரகசியமான முறையில் இவரால் இனங்காணப்பட்ட குரல்களை வெளிப்படுத்துமாறு கேட்டபோது, இவர் அச்சமடைந்ததாகவும், பெயர்களை வெளிப்படுத்த தயங்குவதாகவும் தெரியவருகிறது. இவ்விடயத்தில் தான் சம்பந்தப்பட்டால் தன் எதிர்கால பத்திரிகைத் தொழிலுக்குப் பாதகமாக அது அமையலாம் என்று அவர் கூறியுள்ளார். முன்னதாக சிறிசாந்த் ஆட்ட நிர்ணயம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது மூன்று பிரபல்ய இந்திய வீரர்களின் பெயர்களை அம்பலப்படுத்தியதாகவும் தெரிகிறது. இன்னொருபுறம் மிகப் பிரபல்யமானவர்களின் பெயர்கள் மறைக்கப்பட அக்கறைகொண்ட தரப்புகளால் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதா என்றும் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். எதுஎப்படியோ அண்மைக் காலத்தில் அதிரடியான செய்திகள் இதுதொடர்பில் வெளிவரக்கூடும். அவை அதிர்ச்சியானதாக இருக்கவும்கூடும்.

# இளமைக்கும் அப்பால்...





சர்வதேச இருபதுக்கு இருபது உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டிகள் பங்களா தேஷில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிக்கான அவுஸ் திரேலிய அணி அறிவிக்கப் பட்டுள்ளது. ஜோர்ஜ் பெய்லி தலைவராக விளங்கும் அணியில் ஒரேவிதமான இரண்டு ஆச்சரியங்கள் இருக்கின்றன. முதலாவது ஆச்சரியம் பிரட்ஹொக். இவர் இந்தச் சுற்றுப்போட்டியில் ஏதாவது ஒரு ஆட்டத்தில் விளையா-டினால் இருபதுக்கு இருபதில் களமிறங்கிய அதிமூத்த வீரர் என்ற சாதனையைப் பதிவு செய்வார். கடந்தமாதம் சார்ஜா போட்டியொன்றில் கென்யாவின் ஸ்ரீவ் டிக்கோலோ 42 வயதில் விளையாடிய வீர் என்ற பெருமையை பெற்றுள்ளார். எதிர்வரும் சுற்றுப்போட்டியில் ஹொக் விளையாடினார். 43 வயதில் விளையாடியவர் என்ற பெயர் பெறுவார். இதேவேளை 41 வயதாகும் பிரட் ஹொஜ் அவுஸ்திரேலிய அணியில் உள்வாங்கப் பட்டுள்ள இன்னொரு ஆச்சரியம் இந்த இரண்டு வீரர்களும் வயதுக்கும் அப்பால் நடைபெற்று முடிந்த பிக்பேஷ் இருபதுக்கு இருபது போட்டிகளில் காட்டிய அநாயசமான திறமைதான். இருவரின் உள்வாங்கல் களுக்குமான பிரதான காரணம் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

**ஐ.பி.எல்** ஏலத்தில் கெவின் பீட்டர்சனுக்கு ஏற்பட்டுள்ள மதிப்பு, நொந்துபோன மனநிலைக்கு, ஒத்தடம் கொடுத்ததுபோல இருந்திருக்கும். ஏனெனில் பொதுவில் எல்லா அணிகளும் இவரை தம்வசமாக்கப் போட்டியிட்டன. இறுதியில் டில்லி அணி 9 கோடி இந்திய ரூபாய்களுக்கு இவரை தமதாக்கிக் கொண்டது. இதில் இன்னொரு விடயம் மைக்ஹசி சார்ந்ததாகும். இவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முதன்மை வீரர்.

கடந்த வருடம் ஐ.பி.எல் ஆட்டநிர்ணயம் தொடர்பில் குருநாத் மெய்யப்பன் தொடர்பில் வெளியிட்ட கருத்து இவர்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. எனவே, எதிர் பார்த்தது போலவே மைக்ஹசியை ஏலத்தில் எடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் மும்பை அணி 5 கோடி இந்திய ரூபாய்களுக்கு அவரை தனதாக்கிக்கொண்டது. இறுதியில் நட்டம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகத்தான் இருக்கும். இவரையும் பல அணிகள் எடுக்கப்போராடியதில் இருந்து இவரின் அருமை பெருமை நன்று புரியும்.

இருந்தாலும் இம்முறை இலங்கை வீரர்கள் பெருமளவில் கைவிடப்பட்டதைக் குறிப்பிடவேண்டும். ஏறத்தாழ இருபத்தைந்து வீரர்கள் ஏலத்தில்விடப்பட்டும் யாரும் எடுபடவில்லை. குறிப்பாக மஹேல ஜயவர்த்தன, ஏஞ்சலோ மெத்தியூஸ் இருவரையும் குறிப்பிடலாம். சென்னையிலும் பல ஆட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பம் இருக்கும் நிலையில், இலங்கை வீரர்கள் தமிழ்நாட்டுக்கு வரவேற்கப்படாமல் இருக்கும் சூழ்நிலையில், வீணாக ஏன் சங்கடத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் சிலவேளை அணி உரிமையாளர்கள் ஒதுங்கி இருக்கக்கூடும். இதுதான் காரணமா என்றும் சரியாகத் தெரியவில்லை.

# நல்லது நடக்கட்டும்

புதிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக வக்கார் யூனுஸ் நியமனம் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில்



மொய்ன் கான் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். 2010 மார்ச் முதல் 2011 செப்ரெம்பர் வரை ஒன்றரை வருடங்கள் வக்கார் பாகிஸ்தான் அணியின் பயிற்றுனராக திறமையாகச் செயற்பட்டவர் என்று கூறப்படுகிறது. இருந்தும் இவர் புறமொதுக்கப்பட்டு மொய்ன் நியமிக்கப்பட்டமை பல்வேறு தரப்பில் அதிருப்தியாக நோக்கப்பட்டாலும், வக்கார் மிக நாகரிகமாக புதிய நியமனத்தை நோக்குகிறார். தற்போதைக்குத் தேவை பாகிஸ்தான் அணியின் வளர்ச்சியே ஒழிய வேறு எதுவும் இல்லை என்பவர், நாங்கள் அனைவரும் புதிய பயிற்சியாளருக்கு ஒத்துழைப்புக்கொடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்ய உதவவேண்டும் என்று கூறியுள்ளார். கடந்த சில வருடங்களாக பாகிஸ்தான் கிரிக்கெட் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. அவற்றில் இருந்து விடுபடவேண்டும். நான் திறந்த மனதுடன் மொயினின் நியமனத்தை ஏற்றுக்கொள்கின்றேன் என்று பெருந்தன்மையாக்க கூறியுள்ளார். உண்மையில் வேகப்பந்து வீச்சுத் துறையில் வக்கார் மறுதலிக்கப்பட முடியாத ஒரு சக்தி. அவரது காலத்தில் அவரது யோக்கர் லெங்க்த் பந்துவீச்சுக்கு அஞ்சாத எந்தத் துடுப்பாட்ட வீரரும் இருக்க வில்லை. ஓய்வின்பின்னர் கிரிக்கெட் கலந்துரையாடலாளராகவும் நேர்முக வர்ணனையாளராகவும் இவர் இருந்துவருகிறார். அற்புதமான வீரர் வக்கார்.

# தேவைதான்

**இலங்கைக்** கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக வர இருப்பவர் போல் பார் பிறாஸ். இவர் யோர்க்ஷயர் கவுன்ரியின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ஆவார்.

அங்கிருந்து, சில காலம் முன்னதாகவே இலங்கை அணியை பொறுப்பேற்க வுள்ளதால் யோர்க்ஷயர் கிரிக்கெட் கழகம், அதனை ஈடு செய்வதற்காக



எண்பது லட்சம் ரூபாய்களை இலங்கை கிரிக்கெட் சபையிடம் இருந்து கேட்டுள்ளது. அப்படிப் பணம் தர முடியாவிட்டால் மார்ச் மாதத்தில் இரண்டு வாரங்கள் யோர்க்ஷயர் அணி இலங்கை வந்து இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகள், இரண்டு இரண்டு நாள் போட்டிகளில் விளையாட ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் யோர்க்ஷயர் அணி இலங்கை வரும் ஏற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய பயிற்றுநர் போல் இரண்டு வருடங்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபையால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். முதல் ஆறுமாத காலம் தகுதிகாண் நிலையில் இவர் இருப்பார். பின்னர் நிரந்த மாக்கப்படுவார். பெருந்தொகை ஊதியத்திற்கு மேலதிகமாக கிரிக்கெட் சபை வழங்கும் வசதிமிக்க வாகனம், அதற்கான எரி பொருள், இருப்பிட வசதி, வருடாந்த லீவு வசதிகள், விமானப் போக்குவரத்து இலவச வசதி, சுகாதார பாதுகாப்பு, காப்புறுதி வசதிகள், தொடர்பாடல் செலவுகள் இலவசம் என்று பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் பல மில்லியன் கணக்கில் பெருந்தொகை வரும். இலங்கைக் கிரிக்கெட் சபை மிகுந்த நிதி நெருக்கடியில் இருக்கும் காலகட்டம் இது. இருந்தாலும் சர்வதேச தரம் வாய்ந்த அணியாக இலங்கை அணியின் தரத்தை தக்க வைத்துக் கொள்ள இப்படியான செலவுகள் தவிர்க்கப்பட முடியாதுதான்.

# விளங்காத பக்கங்கள்





சிலவேளை சுற்றுப் போட்டியின் மத்தியில் இலங்கை வீரர்களுக்கு இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து சுற்றுப் பயணங்கள் குறுக்கிடுவதால் ஏலத்தில் எடுக்காமல் விட்டிருக்கவும் கூடும்.

மறுபுறம், திஸரபெரேர - கிங்ஸ்லெவன் பஞ்சாப் (2கோடியே 60 இலட்சம் ரூபா) முத்தையா முரளி - றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர்- (1கோடி ரூபா) இருவர் மட்டுமே ஏலத்தில் எடுக்கப்பட்டு உள்ளார்கள்.

**எடுக்கப்படாதவர்களில் சிலர்**

குஷால் பெரேரா, டில்ஷான், அஜந்தமெண்டிஸ், கௌஷால். சில்வா, பிரஸன்ன ஜயவர்த்தன, ரங்கன ஹேரத், சுராஜ் ரந்தீவ், அகில தனஞ்ஜய, உபுல்தரங்க, சசித்ர சேனாநாயக்க, லாஹிரு திரிமான்ன, பர்வேஸ் மஹ்ரூப், ஜீவன் மெண்டிஸ், சாமர கபுகெதர, ஜெகான் முபாரக், டில்ஷான் முணவீர, டில்ருவான் பெரேரா, ஆஞ்சலோ பெரேரோ, ஷமிந்த எரங்க, றுவன் குலசேகர, நுவன் பிரதீப், சுரங்க லக்மால், இசுரு உதான, மஹேல, ஏஞ்சலோ மத்தியூஸ் உட்பட இவர்கள் பெறுமதியற்றுப் போனார்கள் என்பதை நம்பமுடியவில்லை. யதார்த்தமாகவும் இல்லை. என்னென்ன உள்குத்தோ யார் கண்டார்.

A.பாரிஸ், மிகிந்தலை.



07


# சிதைந்த நிலவுகள்

> “சீதா நீ சொல்லு றதில உண்மையும் இருக்கு... அண்ணா போராட்டத்திலே இணையிற காலத் திலேயே போராட்டம் விடுதலைக் கானது. காலப்போக்கிலே எல்லாம் ஆதிக்கமாகி விட்டது!
> “அண்ணாவால்தான் இவ்வளவு பிரச்சி னையும் என்று அடித்துச் சொல்லு வேன். அவன் போராடப் போனதால் தான் அப்பாவும் காணாமல் போனார்”

“சரி.. நான் பிறக்கிறதுக்கு பதினைஞ்சு வருஷத்திற்கு முதல்தான் நம்மட அண்ணா பொறந்திருக்கிறான்”

ந...ம...க்...கு அண்ணாவா?” வார்த்தை விக்கலடிக்க விழி மழை பொழிந்தது. ஆனந்தக்கண்ணீரை அல்லது சோகத்தின் கங்கையா? அது சீதாதேவிக்கும் அவளை படைத்த இறைவனுக்கும் மட்டும் தெரிந்த விடயம்!

“இப்படி உணர்ச்சி



வசப்பட்டால் சொல்லமாட்டேன்”

“இல்லை அக்கா சொல்லு” என்றுகூறிய வண்ணம் கண் களால் வடியும் கண்ணீரை துடைக்கும் கைக்குட்டையாய் பயன்படுத்தினாள் கைகளை!

“அப்ப... அப்பாவிற்கு யாழ்ப்பாணம் காங்கேசன் துறை ஸ்டேசன் மாஸ்டரா இருந்திருக்கிறார். அந்தக் காலப்பகுதியில் ஈழப் போராட்டம் இளைஞர்களை கவர்ந்து போராட்டத்தில் இணையவைத்துள்ளது. அப்பொழுது பல இயக்கங்கள் இருந்திருக்கு. அதில் ஒரு இயக்கத்தில் நம்மட அண்ணனும் சேர்ந்திட்டான்!

அந்தக் காலத்திலே - நம்மட காலத்திலே மாதிரி கடத்திக் கொண்டுபோய் போராடவிடுவதில்லையாம்!”

“சரி அக்கா சொல்லு” என்றுகூறி குழந்தைகளுக்கு கதை சொல்லும்போது குழந்தைகள் ஆவென்று வாயைப் பிளந்துகொண்டு கதை கேட்பதுபோல் கேட்டுக் கொண்டிருந்தாள் சீதாதேவி.

கீதாஞ்சலி தொடர்ந்தாள்!

“அண்ணா இயக்கத்துக்கு போன பிறகுதான் நம்மட சாவா காணியை வித்திட்டு இங்கே வந்திருக்காங்க”

“அப்புறம் அக்கா?”

“அப்புறம் என்ன?, மகனை இழந்த வலியிலே செய்த தொழிலையும் விட்டுவிட்டார் அப்பா! அதற்கு பிறகுதான் பெட்டிக்கடையை துவங்கி இருக்கார்”

“அக்கா, அண்ணாட கதையை சொல்லுறேன் என்று அப்பாட கதையை சொல்லறே...? அண்ணாட கதையைச் சொல்லக்கா!”

“ம்... அண்ணா சேர்ந்த இயக்கம் புலிகள் இயக்கம். அதில பெரிய தளபதியாவும் இருந்திருக்கிறான். ஆனா அப்பா அண்ணாவை மறந்திடச் சொல்லி அம்மாக்கிட்ட வாக்கு வாங்கிட்டார். அப்பாட கோபம் உனக்குத் தெரியும்தானே.

“அந்த முன்கோபம்தானே இந்தளவுக்கு விட்டிருக்கு, அவரையும் நம்மளையும்”

கீதாஞ்சலிக்கு வேற்றான் ஒருவன் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. தந்தையைக் குறையாய் கூறிய வார்த்தை!

பொறுமை அவளிடம் அதிகம் இருந்ததால் தன்னை சமாதானப் படுத்திக் கொண்டாள். சற்று மௌனத்தின்பின் மீண்டும் தொடர்ந்தாள்!

“இல்லே சீதா. அப்பாவுக்கு பொறுமை இல்லைத்தான். ஆனாலும் புத்திசாலி. அதால தான் நம்மட உயிராவது மிச்சம் இருக்கு.”

“அக்கா ஏதோ எரிச்சலிலே சலிப்பா கதைக்கிற மாதிரி இருக்கு. ஏதும் தப்பா சொல்லி இருந்தா மன்னிச்சிடு அக்கா”

நாட்டில் உலகின் வரலாறுகளை தேடிப் படிப்பவள் சீதாதேவி. சொந்த வீட்டின் வரலாறு சங்க கால மரபு இலக்கியம் போன்று அல்லவா இருக்குது.

சங்க கால இலக்கியங்களை படிக்கப் படிக்க சுவைப்பது போல் வீட்டு இரகசியங்களை அறிவதில் ஆவலாய் இருந்தாள்!

கீதாஞ்சலி மீண்டும் வீட்டைப் பற்றிய ஏட்டை வாசிக்க துவங் கினாள்.

தங்கைக்கோ கண்ணதாசனின் தத்துவப் பாடல்போல் இருந்தது! கேட்டுக்கொண்டே இருந்தாள்.

கீதாஞ்சலி தந்தையின் நியாயங்களை நிரூபித்து கதை கூறிக்கொண்டிருக்கையில், திடீரென்று கதைக்கு குறுக்கிட்டாள் சீதாதேவி!

“அக்கா அண்ணாவை பிழை கூறுகிறாய்?”

“அண்ணாவால்தான் இவ்வளவு பிரச்சினையும் என்று அடித்துச் சொல்லுவேன். அவன் போராடப் போனதால்தான் அப்பாவும் காணாமல்போனார்”

“இல்லே அக்கா, அண்ணா செய்ததுதான் சரி!”

ஒரு இனத்தின் விடுதலைக்குத் தானே போராளியானான். அது ஒருபோதும் பிழை இல்லை” என்று சீதாதேவி வாதிட்டாள்.

தங்கையின் கருத்துக்களை கவனமாய் அவதானித்த கீதாஞ்சலி தங்கையின் கருத்தை ஆமோதிப்பது போன்று சமிஞ்ஞை காட்டினாள்.

தங்கை கீதாஞ்சலியின் முகம் நோக்கிக் கொண்டிருந்தாள். ஆச்சரியம் சீதாதேவியின் முகத்தில் அப்பிக்கிடந்தது!

“சீதா நீ சொல்லுறதில உண்மையும் இருக்கு... அண்ணா போராட்டத்திலே இணையிற காலத்திலேயே போராட்டம் விடுதலைக்கானது. காலப்போக்கிலே எல்லாம் ஆதிக்கமாகிவிட்டது! இந்த விடயத்திலே எவ்வளவுதான் நியாயம் பேசினாலும் அப்பா சரி”

தன் பக்கம் சரி என்று அக்கா கதையை ஆரம்பிக்கும் போது ஆனந்தம் அடைந்த சீதாதேவிக்கு இறுதி வார்த்தை இதயத்திற்குள் அழவைத்தது!

(நிலவுகள் வளரும்...)

நண்பகலுக்கு நேரெதிரான நேரம் அது. எங்கும் அமைதி மொழி மட்டுமே பேசியது. அக்கம் பக்கத்தில் ஒரு சின்ன சிறிய அளவில்கூட சப்தம் கிடையாது. நிசப்தம் மட்டுமே நிலவியது.

திடீரென்று, “அம்மா... தாங்க முடியல... வலிக்குதே” என்று ஒரு பெண்ணின் சப்தம் ஒரு வீட்டிலிருந்து அலறி ஒலித்தது.

வயிற்று வலியால் அவள் கதறிய சப்தம், நிலா வெளிச்சத்தின் ஒளியிலேயே எதிர் நீச்சலிட்டு அந்த நிலாவிற்கே கேட்டிருக்கும். ஒன்பது மாத கர்ப்பிணி பெண்ணின் சப்தம் விண்ணை முட்டும் அளவில் அல்லவா இருக்கும்? அந்த நள்ளிரவு நேரத்தில் நிலா ஆட்சி செய்ததால் அந்தச் சப்தம் நிலாவிற்கே கேட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வேலையை முடித்துக்கொண்டு வீட்டின் தெருமுனையில் வந்து கொண்டிருந்த எனக்கு கேட்டது என் மனைவியின் அந்த அழுகுரல். வலியெடுத்துத் துடிக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு, தெருமுனையில் உள்ள ஆட்டோவை வரும்போதே அழைத்து வந்திருந்தேன். வீட்டின் உள்ளே நுழைந்ததும், என்னைக் கண்ட என் மனைவியின் சப்தம் உரிமையின் காரணமாக அதிகரித்தது. நேரத்தைக் கடத்தாமல் அப்படியே அலாக்காக அவளைத் தூக்கிக்கொண்டு ஆட்டோவில் அமர வைத்து... மருத்துவமனைக்கு வேகவேகமாக அழைத்துச்சென்றேன்.

மருத்துவமனைக்குள் சென்ற அடுத்த இருபது நிமிடத்திலேயே மழலையின் இனிமையான அழுகுரல் கேட்டது. அடுத்த சில நிமிடத்திலேயே டாக்டர் மற்றும் நேர்ஸ் வெளியே வந்து, “உங்களுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது” என்றார்கள். மகிழ்ச்சியில் எனக்குக் கத்தவேண்டும் போல் இருந்தது. அப்படி ஒரு மகிழ்ச்சி. காரணம் நான் எதிர்பார்த்தது போலவே எனக்குப் பெண் குழந்தை. அடக்கமாகவே மனதுக்குள் ஆடிப்பாடினேன்.

நான், கிராமத்தில் உள்ள அம்மா, அப்பாவுக்கும், மற்ற உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இந்த இனிப்பான செய்தியை விடிய விடியப் பரிமாறிக்கொண்டேன்.

அடுத்த சில நிமிடங்களிலேயே நேர்ஸ் என் குழந்தையை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தாள். ஆசையோடும் மிகுந்த சந்தோஷமுடனும் குழந்தையைப் பெற்றுக்கொண்டு... மார்போடு அணைத்தபடி நெற்றியில் முத்தமிட்டு “தந்தை நான்” என்று அடையாளமிட்டேன்.

“குழந்தைக்கு எச்சில் படுகிற மாதிரி முத்தம் கொடுக்கக்கூடாது. ஒரு மூணு மாசத்துக்கு யாரும் முத்தம் கொடுக்காமப் பார்த்துக்கங்க... இல்லைன்னா அவுங்க மூலமா இன்பெக்ஷன், அலர்ஜி வந்துடும்” என்று நேர்ஸ் சொன்னாள்.

இருந்தாலும் ஆசையை அடக்க முடியவில்லை. பாசத்தில் பொத்துக்கொண்டு வந்தது அடுத்த முத்தம். என்ன செய்வதென்று தெரியாமல்... நேர்ஸ் திரும்பியிருந்த நேரமாகப் பார்த்து என் குழந்தையின் பாதத்தில் இதமாக்கினேன். மயங்கியநிலையில் என் மனைவியும் வெளியே வந்தாள். அவளின் தலையை வருடிக் கொடுத்தவாறு, குழந்தையைப் பார்த்துக்கொண்டே இருந்ததில் விடிந்ததே தெரியவில்லை.

நேரம் ஆகஆக நண்பர்கள் ஒவ்வொருவராகப் பார்க்க வந்தார்கள்.

# ஐந்து முத்தங்கள்

பின்பு கிராமத்திலிருந்து என் அம்மா பாசமாகக் குழந்தையைத் தூக்கி கொஞ்சினாள். சட்டென்று வெற்றிலை, பாக்குப்போட்ட வாயுடன் குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டாள். அவளின் வெற்றிலை பாக்கு எச்சில் என் குழந்தையின் கன்னத்தில் அப்படியே முத்த ரேகையாகப் பதிந்தது. இது இரண்டாவது அருவருக்கத்தக்க முத்தம் இது.

பிறகு என் தந்தை, குழந்தையைத் தூக்கி கொஞ்சிவிட்டு அவரும் புகை நாற்றத்துடன் முத்தம் என்னும் முத்திரை பதித்தார். இது மூன்றாவது. ஊரிலிருந்து வந்தவர்கள் கை, கால் முகத்தைக்கூட கழுவாமல் அப்படியே குழந்தையைக் கொஞ்சுகிறார்கள். இது பாசமா? இல்லை அறியாமையின் அடித்தளமா? புலம்ப மட்டுமே முடிகிறது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நேர்ஸ், “இப்படியெல்லாம் முத்தமிட்டால் குழந்தைக்கு இன்பெக்ஷன் ஏற்படும்” என்று சூடாக என் மனைவியிடம் சொன்னாள். என்ன செய்வது? நான் எப்படி சொல்ல முடியும், என் குழந்தையை முத்தமிடவேண்டாம் என்று? சரிதான்.



இரா.அருவி

அவள் எப்படி சொல்ல முடியும்?

வெளியே சென்றிருந்த நான் மருத்துவமனைக்குள் நுழைந்ததும் குறைகளைக் கொட்டித்தீர்த்தாள் மனைவி. நானும் அதே பதிலைத் தான் சொன்னேன். நான் எப்படிச் சொல்வது? என் குழந்தையைக் கொஞ்சவேண்டாம் என்று. அது தாத்தா பாட்டியின் பாசம். அவர் களின் உரிமை. பாசம்தான்... அதற்காக இப்படியா?

என்று என் மனைவி கோபம் கொண்டாள். நான் சொன்னேன் அவர்கள் முத்தமிடும் விதம் வேண்டுமானால் தவறாக இருக்கலாம். ஆனால் அவர்களின் முத்த பாசம் தவறு கிடையாது என்றேன். அவள் என்னைப் பார்த்தாள். நான் அவளைப் பார்த்தேன். இருவரும் அமைதி யானோம். அப்போது அமைதி இருவருக்குமே நடுநிலையானது.

சில நிமிடங்கள் கடந்திருக்கும். என் பெற்றோரோடு கிராமத்திலிருந்து வந்திருந்த உறவினர் ஒருவர் அதோடு என் குழந்தையை தூக்கிக் கொண்டு கொஞ்சிக்கொண்டே இருந்தார்.

அதைக் கண்ட நான் அருவருத்துபோனேன். உறவினராக இருந்தாலும் ஊரில் அவர் ஒரு பெரிய மனிதர். என்ன செய்ய முடியும் என்னால்? என் குழந்தைக்குக் கிடைத்த நான்காவது அருவருப்பான பரிசு முத்தமது. அதன் பிறகு குழந்தையை யாரிடமும் கொடுக்காமல், பெரும்பாலும் நானே தூக்கி வைத்துக்கொண்டிருந்தேன்.

மாலைவேளை வந்தது. என் தாய், தந்தையர்கள் ஊருக்குக் கிளம்புவதாகச் சொன்னார்கள். இதுதான் தாத்தா பாட்டி பாசமா? “மூன்று நாள்கூட முழுசா இல்லாமல் ஊருக்கு போறோனு சொல்றீங்களே?” என்றேன். அவர்களின் வேலைப் பளுவைக் காரணங்காட்டியதால் ஒரு வழியாகச் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

விடைபெறுவதற்காக குழந்தை யிடம் கொஞ்சி சிரித்துக் கொண்டிருந்த என் அம்மா, திடீரென்று மாறிமாறி கன்னத்தில் முத்தமிட்டாள். கோபத்தின் உச்சத் திற்கே சென்ற நான் தடுப்பதற்கு முயற்சி செய்வதற்குள்...

“நேத்துதானே வெற்றிலை, பாக்கு போட்ட வாயோடு குழந்தைக்கு முத்தம் தராங்க” நீங்க யாரும் எதுவும் சொல்லமாட்டிங்கிறீங்க? ஒரு தடவ சொன்னா கேட்க மாட்டீங்களா?” என்று நேர்ஸ் சத்தம் போடவே...

“சரி சரி..., முத்தம் கொடுக்கல” என்று அவருக்கே உரித்தான பாணியில் கூறி சமாளித்தாள். இப்படி அருவருக்கத் தக்க ஐந்து முத்தங்களையும் என் குழந்தைக்குக் கிடைத்த பரிசாக நினைக்கவில்லை. நோயின் நுழைவாயிலாகவே எண்ணத் தோன்றியது.

என் குழந்தையிடமிருந்தும், மனைவியிடமிருந்தும் விடைபெற்றுச் சென்ற என் அப்பா, அம்மாவை பேருந்தில் ஏற்றிவிட ஆட்டோவில் அழைத்துச்சென்று கொண்டிருந்தேன். அப்போது... இப்படியெல்லாம் குழந்தையைக் கொஞ்சக்கூடாது என்று தன்மையாக எடுத்துச் சொன்னேன். சட்டென்று கோபப்பட்ட என் அம்மா, “நாங்களும்தான் உன்னைய பெற்று வளத்திருக்கோம். உனக்கு மட்டும் என்ன நோயி வந்துச்சு? எனக்கு தெரிஞ்சது இந்த நேர்ஸுக்கு தெரியுமா?” என்று என்னிடம் கோபப்பட்டாள்.

“உண்மைதாம்மா உங்க காலம் வேற. இந்தக் காலம் வேற. அப்ப நோய் கம்மி. இப்ப தொட்டதுக்கெல்லாம் நோய் பரவுது. அதான் அவுங்க அப்படி சொல்லியிருக்காங்க. உங்களுக்கு இல்லாத உரிமையா?” என்று அவர்களைச் சமாதானம் செய்ய முயற்சித்தேன். பேசி முடிப்பதற்குள் ஆட்டோ பேருந்து நிலைய வாசலில் நின்றது. அருகிலேயே ஊருக்குப் போவதற்கான பேருந்தும் கிளம்புவதற்காக தயார்நிலையில் நின்றது.

எதற்கும் சமாதானம் ஆகாமல் சமாதானம் சொல்லி விடை பெற்றார்கள். அவர்கள் மனதை விட என் மனது சமாதானம் ஆகவில்லை. அந்த அருவருக்கத் தக்க முத்தங்களை எண்ணியும், அம்மாவின் வலியை எண்ணியும். வலி கொடியது, உண்மைதான்.

# மங்களம் முழங்கட்டும்...

## வாசனா சம்பத

இன்றைய சுப்பர் பரிசு

# ஒரு கோடியே

## பதினொறு இலட்சம்

## ரூ.11,121,892/-




வாசனா சம்பத அதிகமதிகமாக வாங்குங்கள்!

முழு நாட்டினதும் அபிவிருத்திக்கு கைகொடுக்கும் லொத்தர் சீட்டு

MEDIAWISE

### தேசிய லொத்தர் சபை

இல. 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 470 662, 0112 470 663
அவசர அழைப்பு: 0112 433 631 இணையத்தளம்: www.nlb.lk





# நிகர் இல்லாதது

இழக்கக் கூடாதது
நல்ல நட்பு!
துறக்கக் கூடாததும்
நல்ல நட்பு!

இறவாத நட்புக்கு
ஏது எல்லை?
குறையாத நட்புக்கு
ஏது அளவுகோல்?

காதலில்கூட சுயநலம்
மேலோங்கும்! நட்பில்
பொதுநலமே என்றும்
பூத்திருக்கும்!

காதலைவிட
நட்பு உயர்ந்தது!
காதலைவிட
நட்பு வலியது!
காதலில் காமம்
பசையாகிறது!

அந்தப் பசை இன்றியே
நட்பு ஒட்டிக்கொள்ளும்!
நட்பு ஒரே பாலார்
மத்தியிலும் பூக்கலாம்!
எதிரெதிர் பாலார்
மத்தியிலும் மலரலாம்!
காதலுக்கும் நட்புக்கும்
இடையே கோடுகிழிக்க
தெரியாதவர்களுக்கு
காதலிக்கவும் தெரிவதில்லை.
நட்பாக இருக்கவும்
முடிவதில்லை!

ஆணோ, பெண்ணோ
மனம் தெளிவில்லாத
போது காதலிக்கவும்
முடியாது நட்பு வளர்க்கவும்
இயலாது!

பலனை மட்டும்
நாடும்போது நட்பு
ஊனமாகிறது!

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும்போது
நட்பு கோணலாகிறது!

காக்கைகள் போன்ற
நண்பர்களும் இருக்கிறார்கள்!
பருக்கைகள் கிடைத்தால்
வட்டமிட்டுக் கொண்டே
இருப்பார்கள் புகழ்ந்து
சத்தமிட்டுக் கொண்டும்
இருப்பார்கள்!

காயம் பட்டவனை
களத்தில் தள்ளிவிட்டு
ஓடும் குதிரைகளையும்
சில நண்பர்களுக்கு
உதாரணம் கூறுவதுண்டு!

பசை உள்ளவரையும்
பக்கத்தில் இருந்துவிட்டு
பசை காய்ந்ததும்
நடையைக் கட்டும்
சீவன்கள் அவர்கள்!

பூவோடு சேர்ந்த நாரும்
மணம் பெறும்! சில
நண்பர்களோடு சேர்ந்தால்
சேர்பவர்களுக்கு பெருமை!
"உன் நண்பர்கள்
யார் என்று சொல்,
உன்னைப் பற்றிக்
கூறுகின்றேன்!" என்பது
அனுபவ மொழி!

பூக்களோடு நேசமா?
அன்றில் சாக்கடைப்
புழுக்களோடு நேசமா,
என்பதை வைத்து
எடைபோட்டு விடலாம்!

பூக்கள் ஒருபோதும்
காயப்படுத்தாது!
பூக்கள் ஒருபோதும்
கல்லாக மாறாது!
பூக்கள் ஒருபோதும்
அம்பாக மாறாது!
பூக்கள் ஒருபோதும்
மூக்கை சுளிக்கவைக்காது!
பூக்களை மணப்பவனுக்கு
வாசனை வேறுபாடுகள்
தெரியாமல் போகாது!

சாக்கடைப் புழுக்களையே
முகர்ந்து கொண்டிருந்தால்
நல்ல மணம்கூட
மூக்கில் ஏறாது!

நல்ல நண்பர்கள்
பூக்கள் போன்றவர்கள்!
மற்றவர்கள் சாக்கடைப்
புழுக்கள்!

துரியோதனின் பாதை
தவறு! துரியோதனின்
கொள்கை தவறு!

தெரிந்தும் கூடவே
இருந்தவன் கர்ணன்!
களத்தில் அவனை
தந்திரத்தால் வென்றனர்!

நட்புக் களத்தில்
மட்டும் அவனை
வெல்ல எந்த தந்திரமும்
பலிக்கவில்லை!

சகோதர பாசத்தையும்
அங்க வென்றது நட்பு!
நண்பனுக்காக
சகோதரனை எதிர்த்து
களம் புகுந்த நட்பின்
இலக்கணம் கர்ணன்!

ஒரு தீயநட்பை
இழப்பதற்காக
எந்தத் தியாகத்தையும்
செய்யலாம்.

ஒரு நல்ல நட்பை
இழந்தால் எந்தத்
தியாகத்தாலும்
பெறமுடியாது!

பலநூறு பகைவரது
பகையை தேடிக்
கொள்ளலாம்.
ஆனால், ஒரு நல்ல
நட்பை மட்டும்
தொலைத்துவிடாதே!

அருமையான நட்பு
ஒன்று உனக்கு
கிடைத்துவிட்டால்
ஆயிரம் யானைப் பலம்
உனக்கு வந்துவிடுகிறது!

அமைச்சர் எடுத்துரைக்க,
மன்னன்
முகம் மலர்ந்தது!

"அருமையானதும்
நட்புத்தான்!
ஆளமறியாமல்
காலைவிட்டால்
கடுமையாதும்
நட்புத்தான்!"
என்றான் மன்னன்!

"அருமையானதும்
நட்புத்தான்!
நாம் செய்யும் செயலுக்கு
அரிய காவலானதும்
நட்புத்தான்!
நட்புக்கு நிகராக
வேறு ஏது உண்டு?"
என்றார் அமைச்சர்.
மன்னன் பூரித்தான்.

**"செயற்கரிய யாவுள**
**நட்பின் – அதுபோல்**
**நினைக்கரிய யாவுள**
**காப்பு"**

அதிகாரம்: 79, குறள்:781




**சிந்தியா! காணாமல் போனவர்களின் உறவினர்கள், இராணுவத்திடம்தான் தங்கள் உறவுகள் சரணடைந்ததாக ஆணைக்குழுமுன் நேரடிச் சாட்சியம் அளித்துள்ளனரே?**

**கா.சதா, மாத்தறை.**

வாக்குமூலங்கள் தொடர்பில் சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதியின் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கின்றார், பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிந்தியா! இலங்கை குழு, நவநீதம் பிள்ளையை சந்திப்பதால் ஜெனீவா மனித உரிமை பேரவையில் செலுத்தக் கூடிய தாக்கம் என்ன?**

**ஆர்.சாரங்கன், சாவகச்சேரி.**

ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலே அங்கே நடந்துகொண்டிருக்கின்றது. தற்போது நடப்பதெல்லாம், அதற்கான சம்பிரதாயங்கள்தான். எனவே தற்போது நடக்கும் எவையும் வரப்போகும் ஜெனிவாப் பிரேரணையில் தாக்கத்தை செலுத்தப் போவதில்லை.

**சிந்தியா! கிளிநொச்சியில் பொறியியற் பீடம் அமைப்பதற்கு முன்நின்று செயற்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சேவை பாராட்டத்தக்கதல்லவா?**

**எஸ்.பிரிந்துஜன், திருநெல்வேலி.**

நிச்சயமாக. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதை சாத்தியமாகியுள்ளதை ஜீரணித்துக் கொள்ளமுடியாதவர்கள், தற்போதுள்ள துணைவேந்தரின் முயற்சி என்றும், நீண்டகால வற்புறுத்தல் என்றும் கூறமுற்படுகின்றனர். அதையெல்லாம் பார்த்து வழமைபோல் தனது சிரிப்பால் பதிலளித்துள்ள அமைச்சரின் சாதனையை இந்த வளாகங்களின் வரலாறு பாராட்டுடன் பதிவில் வைக்கும்.

**சிந்தியா! இயக்குநர் பாலு மகேந்திராவின் மரணம் தமிழ் திரை உலகுக்கு பெரும் இழப்பு அல்லவா?**

**திருமதி அ.சாமினி, மன்னார்.**

தத்ரூபமாக காட்சிகள் இருக்கவேண்டும் எனப் பாலுமகேந்திரா நினைத்ததோடு, தனது வாழ்க்கையிலும் வெளிப்படையாகவே இருந்துள்ளார். தென்னிந்திய சினிமாவுக்கு மட்டுமல்ல, இலங்கை தமிழ் சினிமா முயற்சியாளர்களுக்கும் அவரின் இழப்பு பேரிழப்புத்தான். படைப்பாளி இறந்தபின்னும் அவனது படைப்புக்களூடாக அவன் வாழ்ந்து கொண்டிருப்பான் என்பார்கள். பாலு மகேந்திராவும் அவரது படைப்புக்களாக நம்முடன் இருக்கின்றார்.

**சிந்தியா! திரைப்படங்களில் ஆபாசத்தை புகுத்துவதால்தான் படம் ஓடும் என்கின்ற மன நிலை இப்போது சினிமாவில் முன்நிற்கிறதே?**

**எவ்.எவ்.அசார், தர்ஹாநகர்.**

அப்படி ஒரு காலம் இடையில் ஏற்பட்டது. இப்போது அந்த நிலைமை மாறியிருக்கின்றது. மிகச் சாதாரணமான சிறிய கதைகள், மிகச் சாதாரண முகங்களின் நடிப்பில் வெற்றிகரமாக திரைப்படமாகும் புதிய காலம் மலர்ந்துள்ளது. ஆபாசம், கதாநாயகன் முக்கியத்துவம் என்பதெல்லாம் மாறிவருகின்றது. தற்போது சினிமாவில் நடிப்பவர்களைப் பார்த்தால் அவர்களைவிட நாமே நன்றாக இருக்கின்றோமே என்று பலரும் எண்ணுகின்ற நிலைமை உள்ளது. திறமையான இயக்குநரும், நல்ல கதையும் இருந்தால் நல்ல சினிமாவை உருவாக்கலாம் என்பதுதான் தற்போதைய நிலைமை. அண்மையில் அதிகம் தடவை பார்த்த சினிமா வருத்தப்படாத வாலிபர் சங்கம்தான். அதில் அப்படி என்ன இருக்கின்றது.

**கருணைக் கொலைக்கு வயது எல்லையை நீக்கிய முதலாவது நாடு பெல்ஜியமாக விளங்குகிறதே. இது சிறந்தது என சிந்தியா நினைக்கின்றீர்களா?**

**சா.ஜெகந்தன், பதுளை.**

மரணமே தமக்கு இறுதி விடுதலையாக நினைக்கின்ற மனிதன் கொலையை பரிசளிக்கச் சொல்லி கெஞ்சுகின்ற அவலத்தை இன்னொரு மனிதன் ஜீரணிப்பது மிகமிக துன்பம். அத்தகைய நிலையை வயது குறைந்தவர்கள் எதிர்கொள்ளும் போது அந்த முடிவை எடுக்கவேண்டிய தேவையை பெல்ஜியத்தின் முடிவு உணர்த்துவதாகவே தெரிகின்றது.

**சிந்தியா! ஒருவரை புனிதமாக்கும் பகவத்கீதையை படிக்கும் பழக்கம் இப்போது அருகிவருகிறதே..?**

**ஆ.சாதனன், நல்லூர்.**

புனிதமாக்குவதையும், நல்வழிப்படுத்துவதையும் தேடிப்படிக்கும் பழக்கம் இப்போது இல்லாமலே போய்விட்டது. அழிந்துவரும் உயிரினங்களை பாதுகாக்க வளர்ந்த நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. நாம் அழிந்துவரும் நல்ல பழக்கங்களை பாதுகாக்கவும், வளர்த்தெடுக்கவும் எதுவுமே செய்வதில்லையே. முன்னரைப்போல் தாமாக முன்வந்து சமய சொற்பொழிவுகளை செய்யும் சமூக நலன் விரும்பிகளை இப்போது காண்பதே அரிதாகவுள்ளது. அரிதாக யாராவது அதைச் செய்தாலும் நம்மில் எத்தனை பேர் அதை இருந்து கேட்கின்றோம். அந்த நேரத்தில் கைபேசியை காதுக்குள் திணித்துக்கொண்டு போய்விடுகின்றோம். அல்லது குறுஞ்செய்தி அனுப்பி தன்னாலேயே சிரித்துக் கொள்கின்றோம். அதுவுமில்லாவிட்டால் சுண்டல் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு போய்விடுகின்றோம்.

**சிந்தியா! இந்தியாவின் அண்மைக் கால பின்னடைவுகள் டோனியின் வீழ்ச்சிக்கு வித்திட்டுவிடுமே?**

**ம.அரவிந்தன், பளை.**

இந்திய மண்ணில் வெளுத்து வாங்குவதும் வெளிநாடுகளில் சுருள்வதும் இந்தியக் கிரிக்கெட் அணிக்கு பரம்பரை வியாதி போன்றது. அந்த வியாதி இப்போது டோனி தலைமையிலான அணியையும் வாட்டுகிறது. இதுமாத்திரம் டோனியின் வீழ்ச்சிக்கு வித்திடும் என்று நான் நம்பவில்லை.

ஆனால், இதனுடன் அண்மைக் காலமாக வெளிவருகின்ற ஐ.பி.எல். ஆட்ட நிர்ணயச் சதியில் டோனி தொடர்பான செய்திகள் வலுப்பெறுமாயின், சிக்கல் டோனியின் தலைக்கும் தான்!

**சிந்தியா! வத்திக்கான் பாதிரியார்கள், சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக ஐ.நா. குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளதே?**

**எம்.கானுஜன், மட்டக்களப்பு.**

ஆண், பெண் நட்பில் ஜோக் எங்கே இருக்கின்றது. அது புனிதமான உறவு அதை புனிதத்தோடு பாதுகாப்பது ஒரு வரம்.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சர்வதேச சதி....

எதுஎவ்வாறாயினும் இந்த தீர்மான வரைவு, அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது, இலங்கைக்கு ஒரு சாதகமற்ற சமிக்ஞையையே வெளிப்படுத்தியுள்ளது.

ஏனென்றால், இலங்கைக்கு சாதகமான கருத்தை வாசிங்டனில் உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மேற்கொண்ட பயணம் தோல்வியில் முடிந்துள்ளதை இது மீண்டும் நிரூபித்துள்ளது.

வாசிங்டனில் பல நாட்கள் தங்கியிருந்து பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும், நிஷா பிஸ்வால் தவிர்ந்த இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறெந்த அதிகாரிகளும் அவரை சந்திக்கவில்லை. இதிலிருந்து அமெரிக்காவின் முடிவில் மாற்றங்களை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நகர்வுகள் இதுவரை தோல்வி கண்டுள்ளதையே உணரமுடிகிறது.

அதேவேளை, இந்த தீர்மான வரைவு செனெட்டில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் சூழல் ஒன்று உருவானால், அது இலங்கை அரசாங்கத்தின் தலைவலிகளை அதிகரிக்கச் செய்யும். இந்த நெருக்கடியை சமாளிக்க இலங்கை அரசாங்கம் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, கருத்துரிமைகள், மற்றும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நியாயமான வெளிப்பாட்டைச் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அது அமெரிக்காவின் உத்தரவாகவோ, கூட்டமைப்பினரோடு தேனிலவு கொண்டாடுவதாகவோ, இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அரசு மீதான விமர்சனங்களை அதிகரிக்கச்செய்த கருத்துக்களில் முக்கியமானது, யுத்தத்துக்குப் பின்னர் நல்லிணக்கத்தையும், இயல்புச் சூழலையும் ஏற்படுத்துவதற்கு இன்னும் பல வருடங்கள் போகலாம் என தெரிவிக்கப்பட்ட பொறுப்பற்ற பதிலேயாகும். அதாவது நல்லிணக்கத்திற்காகவும், அரசியல் தீர்வுக்காகவும், பொறுப்புக்கூறலுக்காகவும் எதையும் ஆக்கபூர்வமாகச் செய்யாமல் தற்போதைய போக்கில் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு போனால் அது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பழகிப் போய்விடும், அவர்கள் பழக்கப்பட்டுவிடுவார்கள். கூடவே சர்வதேச சமூகமும் பழகிக்கொள்ளும் என்றவாறான எரிச்சலூட்டும் கருத்தாகவே அது எல்லாத் தரப்பாலும் பார்க்கப்பட்டதும் தற்போதைய நெருக்கடிக்கு காரணமாக இருக்கலாம்.

ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

**வணக்கமுங்கோ. போனவாரம் தமிழ் ஊடகங்களிலில ரொம்பக் கலாதியாக சம்மந்தருடைய செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்திருந்ததை பார்த்திருப்பீங்கள். எனக்கு என்ன டவுட் எண்டால் பாருங்கோ.**

**சம்மந்தர்** இந்தியாவுக்கு போனதை ஏதோ இராஜதந்திரப் பயணமாக இந்த ஊடகங்கள் போட்டு வாங்கிச்சின முங்கோ. அவர் குடும்பத்திடம் போய் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்காருங்கோ.

ஆட்சியில இருக்கிறவனைக் கேட்டால் ஓம். இல்லை எண்டு சொல்லிப் போடுவான் எண்டு, ஆட்சிக்கு வரப் போறம் எண்டு எதிர்க்கட்சியில் இருந்து புலம்பிறவனை சந்திச்சால் ஏதும் வசதியான வாக்குறுதியைத் த்ருவார்கள் என்று முழியைப் பிதுக்கிப்போடும் கணக்கு மெதேட்டைத்தானுங்கோ உள் நாட்டிலையும், வெளிநாட்டிலையும் அட்டுளை பண்ணிக்கொண்டு இருக்கினம்.

காங்கிரஸ் கட்சிக்கு தமிழகத்தில் கொஞ்சம் தளம்பலான நிலைமை தானுங்கோ இருக்குது. அந்த இடை வெளியில் பா.ஜ. கட்சிக்காரர் தமிழகத்து வாக்காளர்களை கவர்வதற்கு என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்வதற்கு ஓடித் திரியினமுங்கோ.

ஈழத் தமிழர்கள் தொடர்பாக நீங்கள் கொஞ்சம் பேசத்தான் வேணுமெண்டும், அது சம்மந்தமாக சம்மந்தரோடையே பேசினால் பரவாயில்லை எண்டு யாரோ குடுத்த கயிறை விழுங்கிக்கொண்டு சம்மந்தனை சந்திக்க நேரம் ஒதுக்கி இருக்கினமுங்கோ.

அதிலபோய் ஐயா உள்ளதையும், இல்லாததையும் சொல்லிப்போட்டு இலங்கையிலுள்ள டுமீல் மன்னிக்கவும். தமிழ் ஊடகங்களுக்கு என்ன கதை அளந்தாரோ தெரியவில்லையுங்கோ. இவையும் கையால, மடியால கொஞ்சத்தைப் போட்டு செய்திகளை போட்டிருந்திச்சினமுங்கோ.

அப்பிடி ஒரு செய்தி தமிழ்நாட்டில எந்த ஊடகங்களிலையும் வரவில்லை யுங்கோ. அவ்வளவு ஏன் தலைப்புச் செய்தி கிடைக்காட்டில் யாருக்காவது தொல்லைபேசியைப் போட்டு நீங்கள் இப்புடிச் சொன்னீங்கள் எண்டு ஒரு நியூஸ் நாளைக்கு லீட் அடிக்கிறம் பாருங்கோவன் எண்டு தனித்துவச் செய்தி போடுற சராவின்ர பத்திரிகைக்கும் கூட சம்மந்தரின்ர உந்தச் செய்திகள் தெரியாதாமுங்கோ.

உப்பிடியான சந்திப்புக்களுக்கு சம்மந்தர் ஏன் கூட்டமைப்பில் ஒருவரையும் அழைத்துக்கொண்டு போகவில்லை எண்டு கேட்டதுக்குத் தானுங்கோ, ஒரு கூட்டமைப்பு எம்.பி. தனது சகாக்களிடம் கெம்பிக் குதிச்சாருங்கோ,

அந்த ஆளின்ர வயசையும் மதிக்காமல் பார்ளிமென்ட் குவாட்டஸ் அதிரும்படியாக அந்த வாத்தி எம்.பி கத்தினாராமுங்கோ. அவன் இங்க நாங்கள் கூடிக்கதைக்கும் போதே, தான் பிடிச்ச முயலுக்குத்தான் மூண்டு கால் எண்டு கெப்பராகப் பேசிப்போட்டு வெளியால வந்து ஊடகங்களிடம் உள்ள பேசினதுக்கு மாறாக உள்ட்டாவாக கதை சொல்லுறவன். இப்ப இந்தியாவில பா.ஜ.க தலைவர்களை சந்தித்ததாகவும், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக தனது மனதில் உள்ளதை கூறினார் எண்டும் கூறியிருப்பதை எப்படி நம்புவது.

அங்க எதை வேண்டிக் குடிச்சுப்போட்டு, எதை உளறிச்சுதோ யாருக்குத் தெரியும். கேக்கிறவன் கேணையனா இருந்தால், நரேந்திரமோடி தன்னிடம்தான் அரசியல் டவுட்டுகளைக் கேட்டு கிளியர் பண்ணிக் கொண்டவர் எண்டும், மோடியில் அரசியல் ஆசானாக பா.ஜ.க.வினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர் எண்டும் சொல்லுவான். எண்டு மட்டு மரியாதை இல்லாமல் கத்தினாராமுங்கோ.

சம்மந்தரை போட்டுத்தாக்கின சூட்டோடை இன்னொண்டையும் சொல்லியிருக்காருங்கோ. புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து பணம் வாங்கி நான் மக்களுக்கு சேவை செய்து கொண்டிருப்பதை நேரடியாக கேட்க வக்கில்லாதவை எனக்குப்போட்டியா அவளை களத்தில இறக்கிவிட்டிருக்கினம். ஜெனிவாவுக்கு ரிக்கட்டும்போட்டு அனுப்பியிருக்கினம். அவளுக்கு என்ன தெரியுமெண்டு தூக்கி வச்சி ஆடுகினம்.

கூட்டமைப்பு புலம்பெயர்ந்த மக்களை அணுகுவதையும், அவர்களிடமிருந்து பணத்தைப்பெற்று இங்கே கொண்டு வருவதையும் என்னிடம் தந்திருக்கவேணும். அவளுக்கு என்ன தெரியுமெண்டு இந்தக் குறுக்கு ஓட்டத்தை ஓடுகினமோ தெரியல்லை. எனக்கு எப்ப விசர் பிடிக்குதோ அப்ப கிழிப்பன் பாருங்கோ.

இவை யார் எங்களுக்கு தமிழர் தேசியத்தைப் பற்றி போதிக்க. இவை போராட்டத்தில என்ன பங்களிப்பைச் செய்திச்சினம். இவையை நான் ஒண்டும் தலைவர்களாக நினைக்கவில்லை. வன்னியில இருக்கிற சனமும் அப்புடி நினைக்கவில்லை. அப்புடி ஒரு நிலைமை வந்தால் எனக்குத் தெரியும் என்ன செய்யவேணுமெண்டு. என்று மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க கத்தினவராமுங்கோ.

உதுகளையெல்லாம் யோசிக்கேக்க எனக்கு என்ன தோணுது தெரியுமோ, இரவு நேரத்தில எங்க தண்ணியும், சாப்பாடும் கிடைக்குதோ, அங்கபோய் இருந்து அலம்புறதையெல்லாம் சந்திப்புகள் எண்டு சொல்லிக்கொண்டு திரியினமுங்கோ.

அரசாங்கம் என்னடாவெண்டால் உள்வீட் டுப் பிரச்சனையை அப்பாவோடு பேசாமல்,வெளியால உள்ள சித்தப்பாவுடன் பேசுவதால் பிரயோசனமில்லை எண்டு சொல் லுது. இவை என்னடாவெண்டால் ஐ.நாவை விட்டால் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வே இல்லை எண்டினமுங்கோ.

எனக்கெண்டால் உதுகளை யோசிக் கேக்க தலையை சுத்துதுங்கோ. ஒண்டுமாப் புரியுதில்லையுங்கோ.

உங்களுக்கு...

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# சத்ரபதி சிவாஜி



பெற்ற தாயிடத்திலும், பிறந்த பொன்னாட்டிடமும் பக்தி கொண்டவராகவும் மாவலியின் மாபெரும் வீராகவும் திறமைமிக்க ஆட்சியாளராகவும் விளங்கியவர் மராட்டிய இனத்து மன்னர் சிவாஜி. சிவாஜியின் தந்தையாரின் பெயர் ஷாஜி போன்ஸ்லே. தாயாரின் பெயர் ஜீயாபாய். ஷாஜி ஜிஜாபாயின் திருமணம் இன்றைய நம் திரைப்படங்களில் காட்டப்படுவதுபோல சுவாரஷ்யமானது.

ஜிஜாபாயின் தந்தை லக்சூஜி ஜாதவராவ். அகமது நகரின் செல்வமும் செல்வாக்கும் மிக்க ஜாகிர்தாராக விளங்கினார். அரசாங்கத்தில் சேனாதிபதியும்கூட. ஷாஜியின் தந்தை மலோஜி, யாதவராவின் படையில் ஒரு குதிரை வீரர். மலோஜியின் மகன் ஷாஜி பார்ப்பவர்களின் உள்ளம் கவரும் அழகனாக இருந்தான். சிறுவன் ஷாஜியின்மீது யாதவராவுக்கு ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பில்லை.

ஒரு ஹோலிப் பண்டிகையின்போது குழந்தைகளான ஷாஜியும் ஜீயாயும் வண்ணப்பொடி தூவி விளையாடியபோது அனைவர் மனதையும் கொள்ளைகொண்டது. "இக்குழந்தைகள் இருவரும் இணைந்து விளையாடுவது எவ்வளவு அழகாக இருக்கிறது! வாழ்க்கையிலும் இதுபோல இவர்கள் இணைந்தால் எவ்வளவு இனிமையாக இருக்கும்" என்று மகிழ்ச்சியோடு கூறினார் யாதவராவ்.

மாலோஜி தன் எஜமானரின் பேச்சை உண்மை என்று நம்பி, தான் யாதவராவின் சம்பந்தியாகிவிட்டதாகவே எல்லோரிடமும் பெருமையாகப் பேச ஆரம்பித்தார்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(20.02.2014 தொடக்கம் 26.02.2014 வரை)

## மேடம்

உடல்நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. நீண்டநாட்களாக தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். விவசாயம் / செய்வோர்களுக்கு நல்ல விளைச்சலும்,லாபமும் கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள் உத்தியோகத் துறையினர்களுக்கு பதவியுயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவுகள் நிரம்ப உண்டாகும். திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். புதிய வீடுகளை வாங்க போட்ட திட்டங்களுக்காக வங்கிகளின் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்கக்கூடிய காலமாகும்.

## துலாம்

நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரக் கூடிய காலமாகும். வேலையில்லாதவர்களுக்கு வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக் காலமாகும். சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனிக் கவும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக் கொள்வீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

பிள்ளைகளுக்கு எதிர்பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன் - மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்துபோகும். அரசாங்கத்திடம் உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வெகுகாலமாக நிலைத்துக்கொண்டு இருந்த கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் மிகவும் நல்ல பலன்கள் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் மற்றும் நில புலன்கள் வாங்க வாய்ப்பு உள்ள காலமாகும். பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உறவினர்களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம் பொருள் கடன்கொடுத்து ஏமாற்றமடைய வேண்டாம். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கை வந்து சேரக்கூடிய காலமாகும்.

## விருச்சிகம்

தந்தை - மகன் உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். உடல்நிலையில் கண், காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப் போன கணவன் - மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள்மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று.

## மிதுனம்

குலதெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டப்போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றி அடைவீர்கள். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாக பேசிப்பழகுதல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்துசேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் இல்லை. காதல் சம்பந்தமான விசயங்களில் நற்செய்திகள் கிடைக்கும்.

## தனுசு

வீடுகளைப் புதுப்பித்துக் கட்டு வதற்காக பணச்செலவுகள் வந்து சேரும். புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்று காலதாமதமாக தொடங்குவது நல்லது. ஆதரவற்ற ஏழைகளுக்காக உதவிசெய்து அதனால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமுகமான உறவுகள் ஏற்படும். உடலில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் நல்லது. நண்பர்களால் வீண்விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும்.

## கடகம்

விவசாயம் செய்வோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்து வந்த உதவித்தொகைகள் கிடைக்கும். உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கச் சற்றுக் காலதாமதம் ஆகலாம்.

## மகரம்

விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும் புதிய பெரிய மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் சந்திக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கும். பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச்சற்று முன்னேற்றம் காணப்படும். வராத கடன் கொடுத்துள்ள பணம், எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். பல காலமாகத் தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது. எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின் மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது.

## சிங்கம்

நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக புதிய கட்டடம் கட்டப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினருக்கு பணி இட மாற்றமும் பதவியுயர்வுகளும் வரக்கூடும். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலை தூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். மூத்த சகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

எதிர் பார்த்த பணஉதவிகள் உறவினர்களால் கிடைக்கும். நீண்ட காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. தீராத நாட்பட்ட நோய்களுக்கு விடை காணுவீர்கள்.


## கன்னி

தந்தை - மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள், கொடுக்க வேண்டிய பழைய கடன்களைக் கொடுத்து புதிய கடன்களை வாங்கத்திட்டம் போடுவீர்கள். குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுப காரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண் - காதுகளில் கவனமுடன் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும். கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருளாதார நெருக்கடிகள் மாறித் தேவையான பொருளாதாரம் வந்து சேரும். உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



# ஏலம்

ஸ்கொட்லாந்தில் கிளாஸ்கோ நகரிலுள்ள நாய்களுக் கான டிரஸ் ரீகோமிங் நிலையத்திலுள்ள இரு மூக்குகளைக் கொண்ட நாயை வளர்ப்புப் பிராணியாக வளர்க்க உலகமெங்குமிருந்து விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

அந்நாய் தொடர்பான வெளியான செய்திகளையடுத்து அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து அந்த நாயை வாங்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலையில் அந்நாயின் புதிய உரிமையாளராக ஸ்கொட்லாந்திலுள்ள கிழக்கு லொதி யன் பிராந்தியத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் அந்நாய் இனி புதிய உரிமையாளரிடம் வளரவுள்ளது.

# முயற்சி

சவுதி அரேபியாவில், 610 கிலோ எடையுள்ள, பிரமாண்ட மனிதர், நான்கு மாதங்களில், 320 கிலோ எடையை குறைத்து, 290 கிலோ எடைக்கு மெலிந்தார்.

அதீத உடல் பருமன் நோயால் அவதிப்பட்ட, காலித் மோசன் அல்ஷாயரி என்பவருக்கு தேவை யான சிகிச்சைகளை அளித்து, உடல் பருமனை குறைக்கும்படி, டாக்டர்களுக்கு, அந்நாட்டு அரசர் அப்துல்லா, உத்தரவிட்டார்.

படுக்கையை விட்டு எழ முடியாதநிலையில் இருந்த ஷாயரியின் வீட்டுக்கு சென்ற டாக்டர்கள், மருத்துவமனைக்கு தூக்கிவந்து, சிகிச்சை அளித்தனர். அவர் அமர, வடிவமைக்கப்பட்ட, மிகப்பெரிய சக்கர நாற்காலி, உலகிலேயே மிகப் பெரிய சக்கர நாற்காலியாக, சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

முதல் மூன்று மாதங்களில், 150 கிலோவும், அதன்பின், 170 கிலோவும் எடை குறைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட, பிரத்தியேக உணவுகள் ஷாயரிக்கு வழங்கப்பட்டன. மூன்று படுக்கைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்தி வந்த ஷாயரி, தற்போது ஒரு படுக்கையை மட்டுமே பயன்படுத்துகிறார். நான்கு மாதங்களில், 320 கிலோ எடையை குறைத்தது, உலக சாதனை என, டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.



# தியாகம்



டில்லியில் அசிட் வீச்சால் வாழ்க்கையை இழந்த பெண்ணுக்கு சமூக ஆர்வலர் ஒருவர் மறுவாழ்வு கொடுத்துள்ளார். இந்தியாவின் தலைநகரம் டெல்லியை சேர்ந்தவர் லஷ்மி, வயது 24. 9 ஆண்டுகளாக தைரியமாக வெளியே வரமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் அழகுப்பெண், பார்ப்பவர்களுக்கு வினோத பொருளாய் தென்படுகிறார்.

15 வயதான போது, பக்கத்து வீட்டு தோழியின் சகோதரன் காதலிப்பதாய் கூறியுள்ளார். அத்தருணத்தில் காதலையும், காதலிப்பதாய் சொன்ன நபரையும் வெறுத்து ஒதுக்கியுள்ளார், இதனால் கோபமடைந்த அவ்விளைஞன், லஷ்மியின்மீது அசிட்டை ஊற்றியுள்ளான், துடிதுடித்துப் போனாள், இதன்பின் பத்துக்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்துகொண்டும் பலனில்லாமல் போனது. எந்தவொரு ஆண்மகனும் திருமணம் செய்துகொள்ள முன்வரவில்லை. காலங்கள் கடந்துபோக, அலுவலகம் ஒன்றில் பணிக்குச்சேர்ந்தாள். அங்குதான் அவளுக்கு அலோக் தீக்ஷித் என்ற சமூக ஆர்வலரின் நட்புக் கிடைத்தது. லஷ்மியின் வாழ்க்கையில் நடந்த சோகம், அலோக் மனதில் நீங்காவடுவாய் இருந்தது. அவளை தனது துணைவியாக ஏற்றுக்கொள்ள தீர்மானித்தார், லஷ்மியின் சம்மதத்தை கேட்டுள்ளார். ஆனால் லஷ்மியோ தன்னைவிட அழகி லும், அறிவிலும் உயர்ந்தவர் என்ற காரணத்தால் திருமணத்திற்கு மறுத்துவிடுகிறார். உடனே சமூகத்தின் பார்வையில் கணவன்- மனைவி என்ற கோட்பாட்டிற்குள் நாம் நுழையாமல் நம் வாழ்க்கையை தொடருவோம் என்று அலோக் கூறவே, பச்சைக்கொடி காட்டியுள்ளார் லஷ்மி.

# விசித்திர நோய்

அமெரிக்காவில் பூனைக்கடியால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவின் கை, கால் விரல்கள் கல் போன்று உருமாறியுள்ளன. அமெரிக்காவின் ஓரேகான் மாகாணத்தை சேர்ந்தவர் பால் ஸ்டீவ் கேலார்ட்(வயது 61). கடந்த மாதம் இவரை பூனை ஒன்று கடித்தது, இதனால் இவரது கை, கால் விரல்களில் முடிச்சுகள் போன்று உருவாகி வீக்கம் உண்டானது. மேலும் விரல்களின் நிறம் மாறி கறுப்பாக மாறத் தொடங்கியது, உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த 27 நாட்களாக கோமா நிலையில் இருந்த ஸ்டீவின் இதயம் தற்போது செயலிழந்துவிட்டது. நிமோனியா, நெறிக்கட்டுதல் உள்ளிட்ட நோய்களும் ஒரே நேரத்தில் தாக்கியிருப்பதால் உயிர்பிழைப்பது கடினம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.



# பரபரப்பு



அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவும், பிரபல பொப் பாடகி பியான்சும் காதலிப்பதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஒலாந்துக்கும், நடிகை ஜூலியட் கேயட்டுக்கும் இடையேயான இரகசிய உறவுகள் அம்பலமாகின.

இந்நிலையில் பிரெஞ்சு போட்டோகிராபர் வெளியிட்டுள்ள படங்களை வைத்து பிரெஞ்ச் மீடியாக்கள் ஒபாமாவுக்கும், பியானஸ்க்கும் இடையே காதல் என வதந்தியை கிளப்பியுள்ளன. அமெரிக்க செய்தி நிறுவனமும் இதேபோன்றதொரு செய்தியை வெளியிட்டுள்ளது. ஒபாமாவுக்கும், பியாயோன்சுக்கும் இடையே 20 வருட வயது வித்தியாசம் உள்ளது. ஒபாமாவும் அவரது மனைவி மிச்சேல் ஒபாமாவும் தங்களது 21ஆவது திருமண நாளை சமீபத்தில்தான் வெகுசிறப்பாக கொண்டாடினர், இந்த விழாவில் பியாயோன்சும் கலந்துகொண்டார்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 08 வியாழக்கிழமை (20.02.2014) பக்கங்கள் IV ஓசை - 142

## இலங்கைப் பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு

### தென்னாபிரிக்கா தெரிவிப்பு

இலங்கையில் நிலவும் உள்நாட்டுப் பிரச்சினைகள் அங்குள்ள மக்களாலேயே பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக இலங்கை அரச குழு தென்னாபிரிக்காவுக்கு நேற்று பயணமாகியுள்ள வேளையிலேயே, அதன் துணை வெளியுறவு அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் இக்கருத்தை பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையை அங்குள்ள மக்களே பேசித் தீர்ப்பார்கள் என்று தாங்கள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற கொமன்வெல்த் மாநாட்டில் பங்குபெறச் சென்றிருந்த தென்னாபிரிக்க அதிபர்,

IV ஆம் பக்கம் பார்க்க

## அதிபரின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியை வைத்தியசாலையில்

### முல்லை கல்வி வலயத்தில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் அதிபரின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியை முல்லை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் தமக்கிடையே சண்டை பிடித்துள்ளனர். இதனை அவதானித்த ஆசிரியை அவர்களை கண்டித்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் பாடசாலைக்கு சற்று தாமதமாக வருகை தந்த அவர் வகுப்பில் பாடமெடுத்துக் கொண்டிருந்த வேளை அதிபர் அழைத்துள்ளார்.

இதனையடுத்து அதிபரின் அறைக்கு சென்றவேளை, அங்கு வேறு சிலர் அவருடன் கலந்துரையாடியதை அவதானித்து விட்டு மீளவும் வந்து பாடம் நடத்தியுள்ளார்.

இந்த நிலையில் மீளவும் மாணவி ஒருவர் மூலமாக ஆசிரியையை அழைத்தார் அதிபர். அவரும் செல்லவே தகாத வார்த்தைகளால் அதிபர் பேசியுள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்கிறது தமிழக அரசு

## மத்திய அரசிற்கு 3 நாள் அவகாசம்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் சிறைவாசம் அனுபவித்துவரும் கைதிகள் 7 பேரையும் விடுதலை செய்வதற்கு தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இவர்கள் 7 பேரும் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டபடியால் அவர்களை விடுதலை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய மூன்று பேருக்கும் மரணதண்டனையை தவிர்த்து ஆயுள்தண்டனையாக குறைப்பதாக இந்திய உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்த சூழ்நிலையிலேயே இந்த மூன்று பேருடன் ஏற்கனவே ஆயுள் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் நளினி உள்ளிட்ட நால்வரையும் விடுதலை செய்வதற்கு தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

இவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசுக்கு 3 நாள் அவகாசம் அளிப்பதாகக் கூறிய ஜெயலலிதா, மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களை தமிழக அரசே விடுதலை செய்யும் என்றும் சட்டமன்றத்தில் கூறினார்.

இது குறித்த அறிவிப்பினை நேற்று சட்டமன்றத்தில் வெளியிட்ட முதல்வர் ஜெயலலிதா, ஏழு பேரும் 23 ஆண்டுகளாக சிறைச் சாலையில் இருந்து

IV ஆம் பக்கம் பார்க்க



## குழை வெட்ட மரத்திலேறிய குடும்பஸ்தர் வீழ்ந்து மரணம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கைதடி கிழக்கினைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மரத்திலிருந்து விழுந்து உயிரிழந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த நாகன் செல்வரட்ணம் (வயது - 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேற்படி குடும்பஸ்தர் வீட்டில் வளர்க்கும் ஆடுகளுக்கு குழை வெட்ட வீட்டுத் தோட்டத்தில்

IV ஆம் பக்கம் பார்க்க

## தமிழக அரசின் முடிவிற்கு ராகுல் காந்தி கடும் எதிர்ப்பு



(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை குறைக்கப்பட்டிருந்த 7 தமிழர்களை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளதற்கு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ராகுலின் தந்தையான ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்கை உச்சநீதிமன்றம் இரத்து செய்தது. அத்துடன் 23 ஆண்டுகாலம் சிறையில் கழித்ததால் அவர்களது விடுதலை குறித்து மாநில அரசு முடிவு செய்யலாம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து நேற்று

IV ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. அரசியல் விவகார பணிப்பாளர் யாழ். குடாநாட்டிற்கு விஜயம்

### ஆளுநர், முதல்வரைச் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான அரசியல் விவகாரப் பணிப்பாளர் மேரி ஜமசிற்றா வடமாகாண ஆளுநர், வடமாகாண முதலமைச்சர் உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை வருகைதந்த அவர் முற்பகல் 10.00 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் அலுவலகத்திற்கு விஜயம் செய்து ஆளுநருடன் தற்போதைய அரசியல் விவகாரங்கள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளுநருடனான சந்திப்பை முடித்துக்கொண்டு முற்பகல் 11.00 மணிக்கு யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்திற்கு விஜயம் செய்த ஐ.நா. அதிகாரி அங்கு முதலமைச்சருடன் சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக சந்திப்பில் ஈடுபட்டதுடன், இந்தச் சந்திப்பின்போது அமைச்சர்களான சத்தியலிங்கம், குருகுலராசா, ஐங்கரநேசன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் முடிவில் ஐ.நா. அதிகாரியுடன் கலந்துரையாடிய விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், அரசியல்சார்ந்த விடயங்கள் குறித்து பேசவே அவர் வந்ததாகவும், அந்த வகையில் அரசியல் ரீதியாக எமக்கு இருக்கும் பிரச்சினைகள்

IV ஆம் பக்கம் பார்க்க

## பிரதமருக்கு எதிராக சட்ட நடவடிக்கை இல்லை

### ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரட்னவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சி, பிரதமருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காது என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பிரதமருடன் மோத வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரருக்கு அறிவுறுத்தல்கள்

IV ஆம் பக்கம் பார்க்க

## 3 எலும்புக்கூடுகள் நேற்றைய தினம் மீட்பு

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மாந்தை மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இது வரை மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரெட்ண தலைமையில் 26 ஆவது தடவையாக நேற்று குறித்த மனிதப் புதைகுழியின் அகழ்வுப்

IV ஆம் பக்கம் பார்க்க

# இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியானது இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் முன்னாள் அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி பிரதம விருந்தினராகவும், முல்லைத்தீவு விவேகானந்தாக் கல்லூரி விளையாட்டுப்பொறுப்பாசிரியரும், மத்திய கல்லூரியின் முன்னாள் விளையாட்டுப்பொறுப்பாசிரியருமான எஸ்.வேதநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளனர்.

* * *

(மாதகல்)

மாதகல் நுண்சை வித்தியாலயத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் நாளை மதியம் 1 மணி முதல் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் க.சிவனேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராஜா கௌரவ விருந்தினராக இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரி வி.சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள் - 2011

1. கலைமுதற்தேர்வு - 2011 (வெளிவாரி)

மேற்படிப்பரீட்சையை 03.03.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 22.03.2014 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 26.02.2014 (புதன் கிழமை) தொடக்கம் வெளிவாரி பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
19.02.2014 (C/3409)



நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 232 | திகதி 2014.02.18 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 06 24 31 58 | ஆங்கில எழுத்து: L

பரிசுத் தொகை ரூபா. 13,049,220/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 14 | 700,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 215 | 215,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 437 | 437,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9775 | 586,500/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5217 | 208,680/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 128812 | 2,576,240/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18522 | 370,440/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 13,049,220/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 6,093,860/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 13,301,320/-

2014.02.21ம் திகதி வெள்ளிகிழமை
அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது
நீல வர்ண டிக்கட்களாகும்

நியத்த ஜய

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
C/3339
web : www.dlb.lk


# சிறகு வலை மீன்பிடியினால் கரையோர தொழில் பாதிப்பு

## எச்சரிக்கிறார் எமிலியாம்பிள்ளை

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறகு வலை மீன்பிடியினால் கரை வலை தொழிலினைச் செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், கரையோர மீன் இனப் பெருக்கமும் அழிந்து செல்வதாக எச்சரிக்கை விடுத்துள்ளார் கடற்தொழிலாளர் சம்மேளன உபதலைவர் எமிலியாம்பிள்ளை.

கிராமிய அபிவிருத்தி கடற்தொழிலாளர் சம்மேளன அங்கத்தவர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சிறகு வலைப்பயன்பாட்டினால் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் அவர்களுடைய பொருளாதாரம் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே சிறகுவலை பயன்பாட்டில் உள்ள பிரச்சினைகள் குறித்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளைய தினம் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகள், கடற்றொழில் சங்கங்களின் தலைவர்கள் , செயலாளர்களுக்கும் சமாசத்தினர் மற்றும் பாதுகாப்பு குழுக்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது. அதன் போது சிறகுவலை பன்பாடு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

யுத்தகாலத்தில் குறித்த வலையினைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மரக்கம்புகளையே பாவித்தனர். ஆனால் தற்போது இரும்புக் கம்பிகளைப் பயன் படுத்தியே மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கரைவலை தொழிலினை செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் கரையில் இருந்து 25 கிலோ மீற்றர் துாரத்திற்கு குறித்த வலையினைப் பயன்படுத்துவதால் பவளப்பாறைகளில் வாழும் மீன்கள் பிடிக்கப்படுவதும் கரையோரத்தில் மீன் இனப் பெருக்கமும் அழிந்து போகின்றது.

அத்துடன் ஏனைய கடற்றொழிலாளர்கள் ஆழ்கடலில் தொழிலை மேற்கொள்வதிலும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். இதனால் எதிர்காலத்தில் மீன்களின் உற்பத்தியில் வீழ்ச்சியும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பெரியளவிலான சிறகுவலைப் பாவிப்பினை விடுத்து அளவான வலைகளைப் பாவிக்குமாறும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்படவுள்ளது.

அத்துடன் இதுகுறித்த யாப்பு ஒன்றினையும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனையும் மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கொக்குவில் இந்துக்கல்லூரியில் பேடன் பவல் தினவிழா

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியின் சாரணியத்தந்தை பேடன் பவல் தினவிழா கொக்குவில் இந்துக்கல்லூரியில் சுப்பிரமணியம் மண்டபத்தில் செல்வன் இ.இரமணன் தலைமையில் இன்று பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணிவரை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன் பிரதம விருந்தினராகவும், கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பேடன் பவல் நினைவு கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன், பேடன்பவல் நினைவுதின போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (42)

# ‘செய்தி’, ‘செவ்வி’ நூல்களின் அறிமுக நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக மாணவர்களுக்காக வெளியிடப்படும் ‘செய்தி’ மற்றும் ‘செவ்வி’ என்ற இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வும் அது தொடர்பான கலந்துரையாடலும் இன்று வியாழக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ்.ஜிம்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைவரினையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்த் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

# குருசடித்தீவு அந்தோனியாரின் புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்னை வீதியின் வலப்பக்கமாக அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம் 1947 ஆம் ஆண்டு அமரர் அந்தோனி இசிதோரால் கட்டப்பட்டு வருடாந்த திருநாள் திருப்பலி நடைபெற்று வந்தன. நாட்டில் ஏற்பட்ட கலவரங்களால் ஆலயம் அழிக்கப் பட்டது.

நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு பா.பீ.இராசசிங்கம் அடிகளாரின் பெரும் முயற்சியாலும் பங்கு மக்களாலும் ஆலயம் புதிதாகப் புனரமைக்கப்பட்டு யாழ்.ஆயர் பேரருட் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு இறை வழிபாடுகளுக்காக திறந்து வைக்கப்பட்டு ஆயரால் முதல் திருப்பலி நடைபெறும். பண்ணை வீதியிலிருந்து ஆலயத்திற்கு செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# விபத்துக்கள் தடுப்பு கலந்துரையாடல்

யாழ்.முகாமையாளர் சம்மேளனம், வட பிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கம் மற்றும் யாழ்.விஞ்ஞான சங்கம் நடாத்தும் ‘விபத்துக்கள் தடுப்பு’ தொடர்பான கலந்துரையாடல் இன்று மாலை 5 மணிக்கு நல்லூரில் உள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# தோட்டவெளியூடாக சென்ற ஆசிரியையின் கைப்பை பறிப்பு

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் கைப்பை இனந்தெரியாத நபரினால் பட்டப்பகலில் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 2.40 மணியளவில் இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்தின் பிற்பகுதியில் (கிழக்குப் பக்க வீதியில்) தோட்டவெளியில் உள்ள வீதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியை இணுவில் பகுதியில் வசித்துவருபவர் எனவும், வழமை போல் தனது மோட்டார் சைக்கிளை உரும்பிராய் வீதியில் உள்ள தெரிந்த ஒருவரின் வீட்டில் நிறுத்திவிட்டு பேருந்தில் புன்னாலைக்கட்டுவன் பகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்குச் சென்று வருபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சென்றுவரும் வேளையிலேயே இதனை அவதானித்து வைத்திருந்த திருடன் தோட்டவெளிப் பகுதியில் ஆசிரியை தனிமையில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளை கைப்பையைப் பறித்துக்கெண்டு ஓடித்தப்பியுள்ளான்.

இக்கைப்பையினுள் சிறு தொகைப் பணம், கைத்தொலைபேசி, வங்கியில் நகை அடைவு வைத்த வங்கிப் பற்றுச் சீட்டு இருந்துள்ளன. இவற்றினை ஆசிரியை பறிகொடுத்த நிலையில் வீடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (06)

# ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் 150 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 150 குடும்பங்கள் இந்திய வீட்டுத்திட்டம் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இந்திய வீட்டுத்திட்டத்திற்காக 15 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 441 குடும்பங்கள் விண்ணப்பித்திருந்து அவர்களின் விபரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

இருந்தும், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, குடும்ப உறுப்பினர்களின் வயது ஆகியவற்றின் அடிப்படையில் புள்ளிகள வழங்கப்பட்டு, அதில் கூடிய புள்ளிகள் பெற்ற 8 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 குடும்பங்களே இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, அனலைதீவு வடக்கில் 7 வீடுகளும், அனலைதீவு தெற்கில் ஒரு வீடும், பருத்தியடைப்பில் 19 வீடுகளும், கரம்பன் மேற்கில் 41 வீடுகளும், கரம்பனில் 13 வீடுகளும், நாரந்தனை வடமேற்கில் 45 வீடுகளும், நாரந்தனையில் 5 வீடுகளும், புளியங்கூடலில் 19 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கான செயன்முறை விளக்கக்கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது, குறித்த வீடுகளை 6 இலிருந்து 8 மாதங்களுக்குள் கட்டி முடிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டோம் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி நீரியல்வளத்துறைக்கு புதிய கட்டடத் தொகுதி அமைப்பு

(கிளிநொச்சி)

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு 27 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதியொன்று கிளிநொச்சி 155 ஆம் கட்டைப்பகுதியில் அமைக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார்.

இரண்டு அடுக்குகளைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதியினை அமைப்பதற்கான பணிகள் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பமாகியதுடன், எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்படுமென எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மீன்பிடித் திணைக்களம் தற்போது ஒரு தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருவதாகவும் நிலையான கட்டடத்தில் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை இயங்குவதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4000 மீனவக் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ வீரர் கைவிட்ட பெண் தற்கொலைக்கு முயற்சி

இராணுவ வீரர் ஒருவரினால் கைவிடப்பட்ட பெண் கிணற்றில் குதிக்க முற்பட்ட வேளை அதனை அவதானித்த பொதுமக்கள் குறித்த பெண்ணை காப்பாற்றி தங்களிடம் ஒப்படைத்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவையைச் சேர்ந்த குறித்த பெண்ணும் பலாலி இராணுவ முகாமில் கடமைபுரியும் குறித்த இராணுவ வீரரும் புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

பின்னர் குறித்த இராணுவ வீரர் அப்பெண்ணை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு இராணுவ முகாமிற்குள் சென்றுள்ளார். இதனையடுத்து வசாவிளான் பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் குறித்த பெண் குதிக்க முயன்ற வேளை அப்பகுதியிலுள்ள பொதுமக்களால் காப்பாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணை பொலிஸ நிலையத்தில் வைத்து விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஐ.நா. செயலரை சந்தித்தார் டலஸ்



(கொழும்பு)

இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கும் இடையில் நியூயோர்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர் பிரச்சினைகள் குறித்தே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய முனைப்புக்களில் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் விவகாரம் தொடர்பில் சர்வதேச நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச சவால்களில் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு ஆகியன பற்றியும் பேசப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் இலங்கையில் உலக இளைஞர் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளமை தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

# ஷிராணிக்கு எதிரான வழக்கு மே மாதம் நடைபெறும்

வங்கிக் கணக்கில் உள்ள பணம சம்பந்தமான விபரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு தாக்கல் செய்த மனு கொழும்பு நீதவான் பிரதான நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதவான் கியான் பிலப்பிட்டிய விசாரணைக்கான திகதியை அறிவித்தார்.

வழக்கு விசாரணைகளை பார்வையிட சர்வதேச சட்டத்தரணிகள், தூதரக அதிகாரிகளும் நேற்று நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்து அவர் குற்றவாளி கூண்டிலில் ஏறியிருந்தார்.

முன்னாள் நீதியரசரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லத்துஹெட்டி தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஆஜராகியிருந்தது.

கடந்த வருடம் நவம்பர் மாதம 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த இந்த வழக்கு நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் லத்துஹெட்டி தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறவிருந்த காரணத்தினால் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்கை ஒத்திவைக்குமாறு கோரியிருந்தாக ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தணி திலான் ரத்நாயக்க தெரிவித்தார்.

வங்கிக் கணக்கு சம்பந்தமான ஆவணங்களை நவம்பர் 14 ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டதால் ஆவணங்களைப் பெறமுடியாது போனது எனவும் லத்துஹெட்டி குறிப்பிட்டார்.

# கடலாமை பிடித்தவர் பொலிஸாரால் கைது

யாழ்.பாசையூர் கடலில் கடலாமையை பிடித்து பட்கில் மறைத்து வைத்திருந்த அதே இடத்தைச்சேர்ந்த நபரை கைதுசெய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் கூறினர்.

குறித்த நபரை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# கடலை உட்கொண்டதனை அடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியர்கள் ஐந்து பேர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் நேற்றுக் காலை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இவர்கள் உட்கொண்ட உணவு விசமாகியதால் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெல்லிப்பழை வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கொண்டு வந்த கடலையினை உட்கொண்ட பின்னர் ஏற்பட்ட வாந்தி மற்றும் மயக்கம் காரணமாக மேற்படி ஐந்து பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# சிகரெட் பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை

(கொழும்பு)

சிகரெட் பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை விடுக்கப்பட உள்ளது. சிகரெட் புகைப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் சிகரெட் பக்கெட்டுக்களில் அச்சிடப்படவுள்ளது.

சிகரெட் புகைப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பான எச்சரிக்கை விடுக்கக் கூடிய புகைப்படங்களை சிகரெட் பக்கெட்டுக்களில் அச்சிடுவது குறித்த சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டம் நாடாளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கக் கூடிய புகைப்படங்களை பிரசுரிப்பதற்கு சிகரெட் நிறுவனங்கள் எதிர்ப்பை வெளியிட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு நேற்று விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான அரசியல் விவகாரப் பணிப்பாளர் மேரி ஜமசிற்ரா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியைச் சந்தித்து கலந்துரையாடுவதையும், ஆளுநரினால் வட மாகாணசபை சம்பந்தமான நூல் தொகுதி ஒன்று ஐ.நா. அதிகாரி[illegible]க்கு வழங்கப்படுவதையும் காணலாம். (படங்கள் பா.பார்த்தீபன்)

# பிரிட்டன் தூதுவர் அடங்கிய குழு குடாநாட்டிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின், பிரித்தானிய அரசியல் குழுக்களின் தலைவர் டானியல் பெயின்ரர் உள்ளிட்ட குழுவினர் நேற்றையதினம் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்தனர்.

நேற்றுக்காலை யாழ்.நூல் நிலையத்திற்குச் சென்ற இவர்கள் நூலகத்தைச் சுற்றி பார்வையிட்டதுடன், பிரதம நூலகரிடம் ஒரு தொகுதி நூல்களையும் கையளித்தனர்.

நண்பகல் 12 மணியளவில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்களுடன் எக்ஸ்போ பமிலியன் விடுதியில் பிரிட்டன் உயர்ஸ்தானிகர் குழு சந்திப்பை மேற்கொண்டது. மதியம் 1.30 மணியளவில் வடமாகாண ஆளுநருடன் அவரது வாசஸ்தலத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது யுத்தத்திற்கு பிந்திய வடக்கில், அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆளுநர் விரிவாக எடுத்துவிளக்கினார்.

இதனையடுத்து கோவில் வீதியிலுள்ள வடமாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்திற்குச் சென்ற பிரிட்டன் குழுவினர் முதல்வருடன் சந்திப்பினை மேற்கொண்டனர்.

# வலயமட்ட கால்பந்தாட்டம்; அரையிறுதிப் போட்டிகள் இன்று

(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலய மட்டக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மாதகல் சென். ஜோசப மகா வித்தியாலயம், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வயா விளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய ஆறு அணிகள் பங்கு கொண்டன.

இப்போட்டி லீக் முறையில் நடைபெற்றது. இதில் புள்ளிகள் அடிப்படையில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

இதன்படி இன்றைய தினம் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும், தொடர்ந்து நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை திருக் குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலய அணியும் மோதவுள்ளன. (48,93)

## ராஜீவ்...

வருவதைக் கருத்தில் கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 432 இல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்று கூறினார்.

சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரது மரண தண்டனை நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தால் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது.

அதேபோன்று முருகனின் மனைவி நளினியின் தண்டனையும் ஏற்கனவே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு விட்டது.

தவிரவும் ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ராஜீவ் கொலை வழக்கில் முதலில் தடா நீதிமன்றம் தூக்குதண்டனை விதித்தாலும், பின்னர் அது உச்ச நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஏழுபேரையும் விடுதலை செய்வதென்று முடிவு செய்யப்பட்டுவிட்டாலும், ராஜீவ கொலை வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பின் கண்காணிப்பில் நடத்தப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்ட நிலையில், குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 435 இன் படி, அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாட்களுக்குள் தமது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 7 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் கூறினார்.

தமிழக அரசின் முடிவினை தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பலர் வரவேற்றிருக்கின்றனர். அடுத்துவரும் சில நாட்களில் ராஜீவ் காந்தி கொலை தண்டனைக் கைதிகள் அனைவரும் விடுதலையாவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிபரின்...

.மாணவர்களை ஏன் கண்டித்தாய், ஒழுங்காக படிப்பிக்கிறாயோ? பாடசாலைக்கு ஏன் பிந்தி வருகிறாய் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் தாறுமாறாக பறந்தன.

இந்த நிலையில் ஆசிரியையும் வார்த்தைகளை மரியாதையாக பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளார். திடீரென எழுப்பிய அதிபர், ஆசிரியையை தள்ளி விழுத்தியுள்ளார். இதனால் ஆசிரியை அறைச் சுவருடன் பின் தலைப்பக்கம் அடிபட்டு விழுந்துள்ளார்.

எனினும் சுதாகரித்து எழும்பிய அவர் வகுப்பறைக்கு [illegible]ன்று பின் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லை வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்ட போதிலும் அவர் பதிலளிக்கவில்லை. சம்பவம் தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையம், வலயக் கல்விப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த அதிபர் முல்லை வித்தியானந்தா கல்லூரியின் காவலாளியை தாக்கிய குற்றச்சாட்டில் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமருக்கு...

வழங்கியதாகத் தெரிவித்துள்ளார். இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட ஓமல்பே சோபித தேரர் பிரதமருக்கு எதிராக வழக்குத் தொடரும் தீர்மானத்தை கைவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் டி.எம்.ஜயரட்னவும், கட்சியின் தலைவர் சோபித தேரரும் ஒருவரை ஒருவர் பகிரங்கமாக சாடிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 3 எலும்புக்...

பணிகள் இடம்பெற்றன. இதன் போது மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளில் மேலும் 4 எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 51 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மீளவும் இன்று 27 ஆவது தடவையாக மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழக...

தமிழக அரசு ராஜீவ் வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் மற்றும் மொத்தம் 7 பேரையும் விடுதலை செய்ய முடிவு எடுத்தது. இந்த முடிவுக்கு ஒப்புதல் தெரிவிக்க 3 நாள் கெடுவை மத்திய அரசுக்கும் தமிழக அரசு விதித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராஜீவ் மகனும் காங்கிரஸ் துணைத் தலைவருமான ராகுல் காந்தி, நான் தூக்குத் தண்டனைக்கு எதிரானவன். என் தந்தை இந்த நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்தவர். ஒரு முன்னாள் பிரதமரை கொன்றவர்களே விடுதலையானால் இந்த நாட்டில் சாமானியருக்கு எப்படி நீதி கிடைக்கும்? என்றார்.

## குழை வெட்ட...

உள்ள வேப்பமரத்தில் ஏறியுள்ளார்.

இதன்போது, அவர் நின்றுகொண்டிருந்த மரக்கொப்பு முறிந்ததில் அவர் கீழே விழுந்துள்ளார். இதனால் அவரது தலையில் பலத்த அடிபட்டுள்ளது. இதனாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று மரண விசாரணைகளின் போது தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.நா. அரசியல்...

குறித்து பேசியதாகவும் தெரிவித்தார். குறிப்பாக தேர்தல் நடந்து முடிந்ததன் பின்னர் ஜனநாயகம் திரும்பவும் வந்தது குறித்து உங்களுக்கு சந்தோசமா என்று ஐ.நா. அதிகாரி கேட்டதற்கு பதிலளித்த முதலமைச்சர் ஜனநாயகம் பெயரளவில் வந்திருப்பது உண்மை. 2009, 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் தேர்தலை நடத்துமாறு கோரியும் அரசாங்கம் நடத்தவில்லை.

கடைசியாக இந்தியாவின் அழுத்தம் காரணமாக 2013 இல் தேர்தலை நடத்தியதாகத் தெரிவித்ததுடன், எங்களுக்கு தேர்தலின் பின்னர் நடைமுறையில் இருக்கக்கூடிய பிரச்சினைகளையே எடுத்துக் காட்டியதாகத் தெரிவித்தார்.

மேலும் மத்திய அரசாங்கம் தனது சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மாகாண சபைக்கு சில உருத்துத்துவங்கள் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதனை அவர்கள் அனுபவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதனை் தடைசெய்து நிறுத்த எடுக்கும் நடவடிக்கை ஜனநாயகத்திற்கு மாறான நடவடிக்கை என்றும் ஐ.நா. அதிகாரியிடம் எடுத்துக்கூறியதாகவும் தெரிவித்தார்.

## இலங்கைப்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து பேசியிருந்தார் என்றும், அதன்போது இருதரப்பும் தென்னாபிரிக்கா வந்து அனுபவங்களை பெற்றுக் கொள்ள விரும்பினர் என்றும் இபராஹிம் இப்ராஹிம் கூறினார்.

இதையடுத்தே அமைச்சர் நிமால் ஸ்ரீபால டிசில்வா தலைமையிலான குழுவினர் நேற்று இலங்கையிலிருந்து தென் ஆபிரிக்கா பயணமாயினர்.

இக்குழுவில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, துணை அமைச்சர் பைசர் மூஸ்தபா உட்பட பலர் இடம்பெற்றுள்ளனர்.

அரச குழுவைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரைவில் தென் ஆபிரிக்கா வரவுள்ளதாக அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் தெரிவித்தார்.

இருதரப்பினரும் தென்னாப்ரிக்காவில் நிலவிய அரசியல் பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்பட்டன என்று அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளனர் என்றும், தமது அனுபவங்களை உள்நாட்டில் எப்படி செயல்படுத்த முடியும் என்றும் அவர்கள் ஆராய்வார்கள் என்றும் தாங்கள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

எனினும் தமது நாட்டில் ஏற்பட்டது போல ஏன் இன்னும் அரசுக்கும் தமிழ்த்தரப்புக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பதை தாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம் எனக் கூறும் இப்ராஹிம் இப்ராஹிம், அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படாமல் இணக்கப்பாட்டால் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையும் தென்னாப்ரிக்கா, இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எடுத்துச் சொல்லும் எனவும் பிபிசி தமிழோசையிடம் கூறினார்.

ஜெனீவாவில் ஐ நா வின் மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில், எதிர்வரும் மார்ச் மாதம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பில் கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படும் தீர்மானம் குறித்து தாங்கள் அறிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்



## அருளானந்தம் புஸ்பவதி

யாழ்.வண்ணார் பண்ணை கொல் ஒழுங்கையை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இரத்தினம், பார்வதி அவர்களின் மகளும், ஆனைப்பந்தியைச் சேர்ந்த தருமலிங்கம், அன்னம்மா அவர்களின் மருமகளுமாகிய அருளானந்தம் புஸ்பவதி அவர்கள் 17.02.2014 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற அருளானந்தம் அவர்களின் மனைவியும், கலைவாணன் வசந்தகுமாரி (லண்டன்), சர்வணபவானந்தன் ரவி (ஜேர்மன்), புஸ்பமாலா (கனடா), மதிவண்ணன், ரவிசங்கர், ஜெயந்தி, ரவிச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், ஜெயபாலன், (லண்டன்), சந்திரகாந்தா, ஜெயந்தி (ஜேர்மன்), லோகேஸ்வரன் (கனடா), பாலசரஸ்வதி, சசிகலா, சசீலன் ஆகியோரின் மாமியும்; காலம் சென்றவர்களான சண்முகலிங்கம், மகாலிங்கம், இராசலிங்கம் மற்றும் தனபாலசிங்கம், தனலட்சுமி, இராஜகோபால் ஆகியோரின் சகோதரியும், ஹரிஸ், ஜெயவாணி, ஜெயதீபன், ஜெயரூபி (லண்டன்), காவியா (ஜேர்மனி), மயூரா (கனடா), மதுஷன், ஹரணி, மகேஷ்வர்னன், மிதுஷன், சமித்குரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2014 பிற்பகல் 2 மணியளவில் இல. 45, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோயிலடி) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்:

யாழ்ப்பாணம் — தகவல்

தொ.பே. 077 526 5715 (இ) குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிட்டப்பட்டது.